
ஜெய்சக்தி
மலர்க் கணை

''ஜெயிச்சுட்டே, இதயா ஜெயிச்சுட்டே' அப்படின்னு நாங்க கோரஸ் பாடணுமாக்கும்'' என்று சிரித்தான் மேகநாதன்.



''கோரஸ் பாடலைன்னா என்ன? நான் ஜெயிச்சது நிஜம்தானே?'' என்று சிரித்தாள் இதயா. ''ஜெயா, நீ சொல்லு நான் சொன்ன மாதிரி சாதிச்சேனா இல்லையா?'' என்றாள் இதயா.

''அது சரிடி, எப்படி சாதிச்சே?'' என்று கேட்டாள் ஜெயா.

அவர்கள் மூவரும் அலுவலகத்தில் இருந்தார்கள். அது ஒரு தனியார் அலுவலகம். அவர்களுடைய முதலாளி பல துறைகளில் கால்பதித்திருந்தார். இவர்கள் அலுவலகம் முக்கியமான இடம். முதலாளி இரண்டொரு நாட்களுக்கு ஒருமுறை வந்து போகிற இடம். அதனால் இங்கே இருக்கிற அலுவலர்களுக்குமே ஒரு முக்கியத்துவம் உண்டு.

இதயா இந்த அலுவலகத்தில் மூன்று ஆண்டுகளாக வேலை செய்து கொண்டிருக்கிறாள். அதனால் மேகநாதன், ஜெயா, இன்னும் இருக்கக் கூடிய மற்ற அலுவலர்கள் எல்லோருமே அவளிடத்திலே மிகவும் பிரியமாக பழகுவார்கள்.

அன்றைக்கு இதயா ஒரு வேலை செய்திருந்தாள். அதைக் குறித்துத்தான் அவர்கள் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

''இதயா, எப்படிங்க நீங்க இதை சாதிச்சீங்க?'' என்றான் மேகநாதன்.

''இதுதான் ஹெல்ப்பாக இருந்தது'' என்று ஒரு ஃபோட்டோவை எடுத்துக் காட்டினாள் இதயா. அது ஒரு குரூப் ஃபோட்டோ. அநேகமாகப் பத்து வருடங்களுக்கு முன்னால்எடுத்த ஃபோட்டோவாக இருக்கும்.

அதிலே அமர்ந்து கொண்டிருந்த நடுத்தர வயதுக்காரரைத் தொட்டுக் காட்டினாள். ''இவரைப் பாருங்க'' என்றாள்.

மேகநாதனும், ஜெயாவும் கழுத்தை நீட்டிக் கொண்டு பார்த்தார்கள்.

''நம்ம மேனேஜர் தங்கவேலு சார் மாதிரியே இல்லை?'' என்றாள்.

அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு சிரித்தார்கள். ''ஆமாம், கிட்டத்தட்ட'' என்றார்கள்.

''அதேதான். நானும் ஒரு ரெண்டு மாசமா பார்த்துட்டே இருந்தேன். இவரு தொல்லை தாங்கலை, இந்த ஞாயிற்றுக் கிழமை வீட்டைக் கிளீன் பண்ணிட்டு இருந்தோம். அதுல பழைய ஃபோட்டோவெல்லாம் கிடைச்சது. அதுல இந்த

ஃபோட்டோ இருந்தது. இவரைப் பார்த்த உடனே எனக்கு டக்குன்னு புரிஞ்சுது. அதான் நான் என்ன பண்ணினேன் தெரியுமா?'' என்றாள் விளக்கம் சொல்லுவதுபோல.

''கதை சொல்லப் போறியா? சொல்லு'' என்றாள் ஜெயா.

''ஒரு ஒரு வாரமாவே இந்த மேனேஜர்கிட்ட பல்லைக் காட்டினேன்னு வச்சுக்கங்களேன்.''

''காட்டலாம். காட்டலாம். நல்ல அழகான பல்லுதான் பல்லு செட்டு மாதிரி. எனக்கே சில நேரம் தோன்றியது உண்டு - இது நிஜமான பல்லா, செட்டுப் பல்லா அப்படின்னு?'' என்றாள் ஜெயா.

''பார்த்தியா? நேரம் பார்த்து காலை வார்றே?'' என்று சிரித்தாள் இதயா.

''ஓ.கே. ஓ.கே. கம் டு த மேட்டர். இந்த வர்ணனையெல்லாம் அப்புறமா உங்களுக்குள்ள வச்சுக்குங்க'' என்றான் மேகநாதன் கடுப்பாக.

''இவருக்கு ஒரு பொறாமை பார்த்தீங்களா?'' என்றாள் இதயா.

''சரி. நான் விஷயத்தைச் சொல்லிடறேன். ஒரு வாரமாவே மேனேஜர் சார் கிட்ட பிரியமா இருக்கற மாதிரி நடிச்சேன். சிரிச்சுட்டெல்லாம் இருந்தேன்'' என்றாள்.

''அய்யயோ பாவம், குளிர்ந்து போயிருப்பாரே ஆளு? ஐடியா வேற குடுத்துட்டீங்களா? சரி சரி... நமக்கு ஆள் மடங்குது போல இருக்கு, படியுது போல இருக்குன்னு நினைச்சிருப்பாரு'' என்றான் மேகநாதன்.

''ஆமாம், கிட்டத்தட்ட அவரு அப்படித்தான் நினைக்க ஆரம்பிச்சுட்டாரு. ரெண்டு நாளைக்கு முன்னாடி என்ன பண்ணினாரு தெரியுமா?'' என்றாள் இதயா.

அவர்கள் இரண்டு பேரும் ஆர்வமாக தலையை நீட்டிக் கொண்டு பார்த்தார்கள். ''நீங்களெல்லாம் போயிட்டீங்கள்ளே...? அன்னைக்கு ஏதோ டைப்பிங் இருக்கு இரும்மான்னு சொன்னாரில்லே...? அப்பவே நினைச்சேன் ஏதோ வெடிகுண்டு வைக்கப்போறாரு அப்படின்னு. சரி வர்றது வரட்டும்னு காத்துட்டு இருந்தேன்'' என்றாள் இதயா.

நடந்ததை விவரித்தாள் இதயா.

''நீங்க கேட்ட பேப்பர்ஸ் எல்லாம் டைப் பண்ணி முடிச்சிட்டேன். நான் கிளம்பட்டுமா?'' என்று கேட்டாள்.

தங்கவேல் ஒரு அசட்டுச் சிரிப்புடன் அவளைப் பார்த்தார். ''சீக்கிரமா வீட்டுக்குப் போகணுமாம்மா?'' என்றார்.

''ஆமாங்க சார். அம்மா எதிர்பார்த்துட்டு இருப்பாங்க. லேட்டா போனா கவலைப்படுவாங்க'' என்றாள்.

''லேட்டா போனாத்தானே? டைமுக்குப் போயிட்டா போகுது. உட்காரு'' என்றார்.



''எப்படி சார்? பஸ்லே பயங்கர கூட்டமா இருக்கும். நீங்க நினைக்கிற மாதிரியெல்லாம் இல்லை. தொங்கிட்டுப் போகணும்'' என்றாள் அவள்.

''அந்த சிரமமெல்லாம் எதுக்கு? நான் கொண்டு போய் டிராப் பண்றேன்!'' என்றார் தங்கவேல். இதயாவுக்கு கோபமாக வந்தது. மனதுக்குள்ளாகவே பழித்துக் காட்டிக் கொண்டாள்.

''உங்களுக்கு எதுக்கு சார் சிரமம்?'' என்று இழுத்தாள்.

''ஒண்ணும் சிரமம் இல்லைம்மா. அந்த வழியாத்தான் போகப்போறேன்; ஒரு வேலை இருக்கு. கொண்டு போய் விட்டுட்டுப் போறேன்.''

'ஒரு வேலையும் இருக்காது. வேணும்னே இந்த ஆளு சொல்றாரு' என்று எண்ணிக் கொண்டாள் மனதுக்குள்.

''ஹி ஹி ஹி பரவாயில்லை சார்'' என்று இழுத்தாள்.

''நீ உட்காரும்மா..''. என்று உரிமையாக மிரட்டினார் தங்கவேலு.

இதயா தயங்கிக் கொண்டே அமர்ந்தாள்.

மேஜை இழுப்பறையைத் திறந்து ஒரு அட்டைப் பெட்டியை எடுத்து வெளியே வைத்தார் தங்கவேல். ''என்னமோ இதயா நீ இந்த ஒரு வாரமாவே ஹாப்பியா இருக்கே. எனக்கும் பார்க்கறதுக்கு சந்தோஷமா இருந்தது. அதான் ஒரு... ஒரு....'' என்று இழுத்தார்.

''இது என்ன சார்? உங்க வைஃபுக்கு வாங்கினிங்களா?'' என்றாள் அவள் யதார்த்தமாக. உடனே தங்கவேலுவின் முகம் மாறியது. ''அதை ஏம்மா கேட்கறே. அவளுக்கு அடிக்கடி வாங்கித் தந்துட்டுத்தான் இருக்கேன். எவ்வளவு வாங்கினாலும் திருப்தி இருக்காது. நீ இதைப் பாரேன். இந்த சாரி நல்லா இருக்கான்னு பாரு'' என்று தள்ளினார்.

அவள் அட்டைப் பெட்டியைத் திறந்து பார்த்தாள்.

அருமையான ஒரு பட்டுப் புடவை. ஐந்தாயிரம் ரூபாய்க்கு குறையாமல் விலை இருக்கும். உள்ளே ஒரு கோபம் கனன்று கொண்டு வந்தது இதயாவுக்கு. ஒரு பெண் லேசாகச் சிரித்தால் பட்டுப் புடவை வாங்கிக் கொடுத்து விடுவீர்களா என்று அவளுக்கு கோபமாகத்தான் இருந்தது. ஆனால் எதுவும் காட்டிக் கொள்ளாமல், ''யாருக்கு சார்? யாருக்காவது கிஃப்ட் பண்ணப் போறீங்களா?'' என்றாள் தெரியாதவள் போல.

''உனக்குத்தாம்மா. புடிச்சிருக்கான்னு பாரு'' என்றார்.

''புடவையெல்லாம் நல்லாத்தான் இருக்கு சார். ஆனா, இப்ப எனக்கு அவசியம் இல்லையே. அப்படியே வாங்கிட்டாலும் கொஞ்சம் கொஞ்சமா சேலரியில புடிச்சிக்கிறீங்களா - ஆயிரமா, ரெண்டாயிரமா அப்படி?'' என்றாள்.

''அட என்னம்மா நீ? பொழைக்கத் தெரியாத பொண்ணா இருக்கே? நான் உனக்கு கிஃப்ட் பண்றேம்மா'' என்றார்.

''இல்லை சார்... உங்க மேல எனக்கு ஒரு பிரியம் இருக்குதான்'' என்றாள் அவள்.

தங்கவேலு உடனே முகம் மலர்ந்து போனார். ''அப்படிங்கறே? அப்ப இந்த சனிக்கிழமை வாயேன். நம்ம ஆபீஸோட கெஸ்ட் ஹவுஸ் இருக்கில்லே மகாபலிபுரம் பக்கமா? அங்கே போயிடலாம்'' என்றார்.

ஓங்கி வைக்கலாமா என்று வந்தது இதயாவுக்கு. ''இல்லை சார்... என் மேல ஏன் பிரியம் - அப்படின்னு கேட்க மாட்டீங்களா?'' என்றாள்.

''இதையெல்லாம் என்னன்னு கேட்கறதும்மா? விளக்கம் வேற வேணுமா?'' என்றார் அவர் வெட்கத்துடன்.

''இல்லை சார், நீங்க கண்டிப்பாத் தெரிஞ்சுக்கணும்'' என்று சொன்னவள் தன் கைப்பையில் ரொம்ப மும்முரமாக எதையோ துழாவினாள்.

''என்னம்மா விஷயம்?'' என்று அவரும் ஆர்வமாகப் பார்த்தார்.

அந்த குரூப் ஃபோட்டோவை எடுத்துக் காட்டினாள். ''என்னம்மா இது?'' என்றார் அவர்.

''சார். இவரைப் பாருங்க'' என்று அந்த உருவத்தைக் காட்டினாள்.

தங்கவேலுவும் ஆர்வமாகப் பார்த்தார். ''பார்த்தீங்களா? உங்க ஜாடையாவே இல்லை சார்?'' என்றாள் அவள்.

''அப்படியா?'' என்று கேள்விக்குறியாகப் பார்த்தார்.

'அடுத்து என்ன வரப் போகிறது' என்பது சற்று யோசனையாகத்தான் இருந்தது.

''சார், இவர் எங்க ஒண்ணுவிட்ட சித்தப்பா சார். எங்க அப்பாவோட சித்தப்பா பையன். எங்க வீட்டுக்கு அடிக்கடி வருவாரு. உங்களைப் பார்த்தா அப்படியே அவரைப் பார்த்த மாதிரி இருக்கு சார். இப்ப அவங்க வெளியூர் - திருச்சி பக்கம் போயிட்டாங்க. அடிக்கடி வர்றது இல்லை. என் மேல ரொம்ப பிரியம் சார். அதான் உங்களைப் பார்க்கும் போதெல்லாம் அவரைப் பார்க்கற மாதிரி நினைச்சுக்குவேன்'' என்றாள்.

தங்கவேலுவுக்கு சப் என்று ஆகி விட்டது. ''ஹி ஹி'' என்று என்ன சொல்வது என்று தெரியாமல் இளித்தார்.

'கிட்டத்தட்ட அப்பா ஸ்தானத்தில் உட்கார்த்தி வைத்து விட்டாள் இந்தப் பெண். இவளிடத்தில் போய் நாம் வழிந்தோமே' என்று தனக்குள்ளாக குன்றிப் போனார்.

''கிஃப்ட் வாங்கிக் கொடுக்கறது ஒண்ணும் தப்பு இல்லை சார். ஆனால் சும்மா வாங்கிக்க மாட்டேன். நீங்க பார்த்து செலக்ட் பண்ணிட்டு வந்திருக்கீங்க. எங்க சித்தப்பாவே செலெக்ட் பண்ணின மாதிரி இருக்கு. கொஞ்ச கொஞ்சமா பணம் தந்துடறேன் சார்'' என்றாள்.



வேறு வழியில்லாமல் அந்தப் பட்டுப் புடவையை அவள் பக்கமாக நகர்த்தி விட்டு ''பரவாயில்லைம்மா, பணம் கொடுக்காட்டி கூட பரவாயில்லைம்மா'' என்றார் அவர்.

''இல்லை சார். அப்படின்னா நான் வாங்கிக்க மாட்டேன். நீங்க உங்க வீட்டு ஆன்டிக்கே கொண்டு போய்க் கொடுங்க'' என்று அவள் மறுபடியும் அவரிடத்திலே நீட்டி விட்டாள்.

''சரி, நீ இவ்வளவு சொல்றே'' என்று வேண்டா வெறுப்பாக வாங்கிக் கொள்வதைப்போல அந்தப் பட்டுப் புடவையை எடுத்து வைத்துக் கொண்டார்.

'வச்சுக்கங்க. வச்சுக்கங்க உள்ளே. யாராவது இளிச்சவாய்ச்சி கிடைப்பா. ஏமாத்த முடியுமான்னு பாருங்க' என்று எண்ணிக் கொண்டாள் இதயா.

''அப்ப நான் கிளம்பட்டுமா சார்?'' என்றாள்.

''ம் சரிம்மா'' என்றார் தங்கவேலு அவசரமாக.

''நீங்க அங்க ஏதோ வேலையா போறேன்னு சொன்னீங்களே சார்?''

''ஆமாம், அந்த வேலையை நாளைக்கு நான் பார்த்துக்கலாம்னு நினைக்கிறேம்மா. அல்லது நான் சண்டே போயிக்கிறேன்'' என்று சொன்னார் தங்கவேலு.

''அப்படின்னா சரிங்க சார். எனக்கு பஸ்ஸுக்கு நேரமாச்சு. தாங்க்யு சார்'' என்று ஓடிவிட்டாள்.

அவள் இதைச் சொல்லவும் அவர்கள் எல்லோரும் 'கொல்'லென்று சிரித்தார்கள்.

''இதயா. சூப்பர் ஐடியா'' என்றான் மேகநாதன்.

''அப்புறம் என்ன சார்... இந்த மாதிரி சபலிஸ்ட்களை வச்சுட்டு என்ன பண்றது. ஆனா எனக்கு கவலையா இருக்கு - இந்தப் பட்டுப் புடவைக்கும் சில பேர் மயங்க மாட்டாங்களா என்ன?'' என்றாள் இதயா.

''இந்தப் பட்டுப் புடவைக்கு மயங்கறவங்களா இருந்தா அவங்க எதுக்கு வேண்ணா மயங்குவாங்க. அவங்கவங்கதான் அவங்கவங்க பெருமையை காப்பாத்திக்கணும்'' என்றாள் ஜெயா.

''ஆமா ஜெயா. நீயும் கேர்ஃபுல்லா இரு'' என்றாள் இதயா.

''அது எனக்குத் தெரியாதா, என்கிட்டயும் லைட்டா பேசிப் பார்த்தாரு. அப்புறம் 'எங்க அத்தை மகன் ஒருத்தன் இருக்கான். அவன் ஒரு பெரிய பாக்ஸர்' என்று சொல்லிட்டேன். அதோட சரி'' என்றாள் ஜெயா.

மறுபடியும் எல்லோரும் சிரித்தார்கள்.

''ஆனா, ஒண்ணுடி'' என்றாள் இதயா.

''ஒண்ணு என்ன. நிறையவே இருந்தாலும் சொல்லு. சுவாரஸ்யமா தான் இருக்கு நீ சொல்ற கதையெல்லாம்'' என்றாள் ஜெயா.

''நமக்கு லஞ்ச் டைம் இப்படி நல்லா போயிடுது.. நமது ஆஃபிஸ் அகட விகட ஆட்களெல்லாம் இருக்காங்கள்லே. இவங்களைப் பத்தியெல்லாம் பேசினாலே பொழுது போயிடறது'' என்றாள் இதயா.

ஜெயா ஒரு பெருமூச்சு விட்டாள். ''பொழுது நல்லாதான் போகுது. ஆனால், ஒவ்வொரு ஸ்டேஜ்லேயும் நம்மளைக் காப்பாத்திக்கறதுக்கு நாம கஷ்டப்பட வேண்டியது இருக்கு'' என்றாள்.

''அதெல்லாம் நம்மளைப் பொறுத்ததுதான். இப்ப மேகநாதன் சார் இருக்காரு. இவருகிட்ட ஏறுக்கு மாறான பார்வை இருக்கா? அவருக்கிட்ட நாம எப்படிப் பழகுறோம். அது ஏன் இந்த ஜென்ஸுக்கு புரியமாட்டேங்குது - இயற்கையா இருக்கவங்க கிட்டதான் நாமளும் பழகுவோம் - அப்படின்னு?'' என்றாள் இதயா.

உடனே மேகநாதன் தன்னுடைய காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு சிரித்தான். ''அது வேற ஒண்ணும் இல்லை இதயா மேடம். எனக்கு மூணு சிஸ்டர்ஸ் இருக்காங்க. ரெண்டை கரை ஏத்திட்டேன். இன்னும் ஒண்ணை கரையேத்தறதுக்கு ப்ளான் பண்ணிட்டு இருக்கேன். எனக்கு ஒவ்வொரு தடவை சிஸ்டர்ஸை வெளியே அனுப்பும் போது எவன் இப்படி பண்ணுவானோ, எவன் இவளைப் பார்த்து பல்லை இளிப்பானோ என்கிற பயம் இருக்கும். அதே மாதிரிதானே மத்தவங்களுக்கும் இருக்கும்னு நான் நினைச்சுப்பேன்'' என்றான் மேகநாதன்.

மற்ற பெண்கள் இரண்டு பேரும் நெகிழ்ந்து போய் அவனைப் பார்த்தார்கள். அதே சமயத்தில் இதயாவின் செல்ஃபோன் ஒலித்தது.

''இதயா பேசறேன்'' என்றாள் இந்தப் பக்கம்.

ஒரு நிமிடம் செல்ஃபோனுக்கு காது கொடுத்து விட்டு ''என்ன சித்தி சொல்றீங்க? இமயவரம்பன் இப்படியெல்லாம் பண்ணுவானா? இந்த முட்டாள்தனமெல்லாம் அவன் பண்ண மாட்டானே?'' என்றாள் இதயா படபடப்பாக.

''பண்ணிட்டாம்மா'' என்றாள் சித்தி அந்தப்புறம் இருந்து.

''சரிங்க சித்தி, நான் இப்ப லீவு போட்டு உடனே வர்றேன். அப்பாவுக்கும் சொல்லிட்டு வர்றேன். ரெண்டு மூணு பேரும் வந்துடறோம். ஹாஸ்பிட்டலுக்கு நேரா வந்துடறோம்'' என்றாள்.

''இதயா... என்னது இதயா?'' என்றாள்ஜெயா

''என்னடி அநியாயமா இருக்கு? இமயவரம்பன் சூசைட் ட்ரை பண்ணிட்டானாம். ஹாஸ்பிட்டலுக்கு கொண்டு போய் இருக்காங்க. நான் உடனே கிளம்பணும்'' என்றாள்.

மேகநாதன் ''இதயா நீங்க தப்பா நினைக்கலைன்னா நான் உங்களை ட்ராப் பண்றேன். நீங்க பர்மிஷன் கேளுங்க. கொண்டு வந்து விட்டுட்டு வர்றேன். அப்படியே நானும் ஆஃப் எ டே லீவு போடறேன்'' என்றான்.



''ஏதோ ஒண்ணு பண்ணுங்க சார்... இந்த மூட்ல நான் பஸ்ஸு ஆட்டோ பிடிச்சு போய் பாக்கறதுக்குள்ள செத்துடுவேன் சார்'' என்றாள் இதயா.

''வேணாம். வேணாம். டோன்ட் ஒர்ரி. எனக்குத் தெரியும் உங்களுக்கு பிடிச்ச பிரதர் அவன். ஐ ஆம் கம்மிங் வித் யு. டோன்ட் ஒர்ரி'' என்று சொல்லிவிட்டு உடனடியாக புறப்பட்டார்கள்.

போகும் வழியெல்லாம் இதயாவின் நெஞ்சம் திக்திக்கென்று அடித்துக் கொண்டது.




''அமுதா சித்தி. டாக்டர் என்ன சொன்னாங்க?'' என்று படபடப்பாக வந்தாள் இதயா.

அமுதா சித்தி தாரை தாரையாக கண்ணீர் வடித்தாள். அவளுக்குப் பேச்சே எழவில்லை. ''இப்படிப் பண்ணிட்டானே?'' என்று குமுறினாள்.

அருகில் நின்றிருந்த சிற்றம்பலம்தான் சொன்னார், ''இல்லம்மா, பரவாயில்லை. கண்டம் தாண்டிட்டான்'' என்று.

''அப்பாடா'' என்று பெருமூச்சு விட்டாள் இதயா.

''எப்படி எப்படி? ஏன் இந்த ஐடியா அவனுக்கு வந்துச்சு?'' என்றாள் சித்தப்பாவிடம். ''என்னன்னு சொல்றதும்மா? எதை நம்மகிட்ட சொல்றாங்க இந்தக் காலத்துப் பசங்க? எப்பப் பாரு செல்ஃபோனில் பேசிட்டிருப்பான். ஃப்ரெண்ட்ஸ் கூட வெளியே போவான் வருவான். சரி அவங்க உலகம். நாம நுழைஞ்சு என்ன பண்ணப் போறோம்னு நான் கண்டுக்கறது இல்லை. திடீர்னு ரெண்டு நாளா ரொம்ப மூட் அவுட்ல இருந்தான்னு உங்க சித்திதான் சொல்றா'' என்றார்.

''ஏன் சித்தி? அப்படியா?'' என்றாள் இதயா.

''ஆமாம்/ஏதோ மூட் அவுட்லே இருந்தான். எரிஞ்சு விழுந்துட்டே இருந்தான். எதைக் கேட்டாலும் கோபமாவே இருந்தான். சரியா சாப்பிடவும் இல்லை. 'சரி ஏதோ ஃப்ரெண்ட்ஸ்ஸுக்குள்ள தகராறா இருக்கும். சரியாயிடும்'னு நான் நினைச்சேன். இன்னைக்கு கோயிலுக்கு போயிட்டு வரலாம்னு போனேன். திரும்பி வந்து பார்த்தா இவன் படுத்துட்டு இருந்தான். ஆறு மணிக்கெல்லாம் இவன் படுக்கற வழக்கமே கிடையாதே... படுத்து இருக்கறதும் ஒரு மாதிரியா இருக்கேன்னு பார்த்தா பக்கத்துலே தூக்க மருந்து பாட்டிலை வச்சிருந்தான். பாவிப் பய, பாவிப் பய,'' என்று மறுபடியும் அழுதாள் அமுதா சித்தி.

இதயா, அமுதா சித்தியைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். ''ஓகே, சித்தி! அதான் கண்டம் தாண்டிட்டான்னு சொல்லிட்டாங்களே. விடுங்க, அழாதீங்க'' என்று தேற்றினாள்.

''கண்டம் தாண்டிட்டான்னு சொல்றாங்கதான். ஒருவேளை ஏறுமாறா ஆகியிருந்தா...?'' என்று மறுபடியும் அழுதாள்.

சிற்றம்பலம் தான் கொஞ்சம் கடுப்பாக ''இங்கே பாரு. இப்ப என்னத்துக்கு அழறே நீ. விஷயம் கை மீறிப் போயிடுச்சுதான். இப்பப் பையனும் மீண்டாச்சு. அவன் முன்னாடி இப்படி அழுதீன்னா அவனுக்கு மறுபடியும் மூட் அவுட் தான் ஆகும். அவனை சமாதானப்படுத்தற வழியைப் பாரு. நம்ம துக்கத்தை ஒரு பக்கம் வச்சுட்டு அவனுக்கு தைரியம் சொல்லணும்'' என்றார்.

இதயாதான் குறுக்கே புகுந்து ''விடுங்க சித்தப்பா. சித்தியோட சங்கடம் அவங்களுக்கு. பெத்த மனசு பதறாதா?'' என்றாள்.

சிற்றம்பலம் ஒன்றும் பேசவில்லை. ''சித்தி, ஏதாவது சாப்பிட்டீங்களா?'' என்றாள் இதயா. ''அவ எங்க சாப்பிட்டா? மாலை மாலையா கண்ணீர் விடறதுக்கே சரியா இருக்கு'' என்றார் சிற்றம்பலம்.

''நீங்களாவது சாப்பிட்டீங்களா சித்தப்பா?'' என்றாள் இதயா.

''நமக்கும்தான் எங்கேம்மா சாப்பாடு இறங்குது? இப்படி ஒரு சூழ்நிலையில் நமக்கு சாப்பாடா இறங்கும்?'' என்றார்.

''சரி நான் போய் ரெண்டு பேருக்கும் டிபன் வாங்கிட்டு வந்துடறேன். ஒரு பக்கம் உட்கார்ந்து சாப்பிடுங்க. உங்களுக்கும் சுகர் இருக்கு. சித்தியும் ரொம்ப டயர்டா இருக்காங்க. அப்புறம் நீங்க ஏதாவது படுத்திட்டீங்கன்னா கஷ்டம்'' என்றாள் இதயா.

சொன்னபடியே போய் அந்த பெரிய ஹாஸ்பிட்டலில் இருந்த கேன்டீனில் அவர்கள் இருவருக்கும் டிஃபன் வாங்கிக் கொண்டு வந்தாள்.

இருவரையும் வற்புறுத்தி ஒரு பக்கமாக சாப்பிட வைத்தாள். அதே நேரம் அந்த தனியார் ஆஸ்பத்திரியினுடைய சீஃப் டாக்டர் வந்து கொண்டிருந்தார். இதயாவுக்கு அவரைத் தெரியும். அந்த அடிப்படையில் அவரிடம் போய் 'சார்' என்றாள்.

''பயப்படாதீங்கம்மா. எப்படியோ கஷ்டப் பட்டு காப்பாத்திட்டோம். ஆனால், இப்படி ஒரு பாட்டில் மாத்திரை கிடைக்கிற அளவுக்கு எப்படிம்மா விட்டீங்க?'' என்றார்.

''அதுதான் சார் தெரியலை. ஒவ்வொரு கடையிலையும் ஒண்ணு ரெண்டுன்னு வாங்கியிருப்பான் போல இருக்கு'' என்றாள் இதயா.

''இந்தக் காலத்துப் பசங்களுக்கு எந்த ரிஸ்க்கும் எடுக்க முடியறது இல்லை. ஏதாவது ஒரு சின்ன பிரச்சினை வந்தா டபக்குன்னு இப்படி ஒரு முடிவு எடுத்துடறாங்க. வாழ்க்கையைச் சந்திக்கிற தைரியம் இல்லைம்மா.'' என்றார் அந்த நடுத்தர வயதைத் தாண்டிய சீஃப் டாக்டர்.

இதயா ஒன்றும் பேசாமல் நின்றாள். ''ஏம்மா... ரோட்டோரமா படுத்துட்டு பொழைக்கறவங்களெல்லாம் இல்லை? பழனிமலைல போய்ப் பாருங்க. படிக்கு



ரெண்டு பேர் உட்கார்ந்திருக்காங்க. அதுல கை கால் இல்லாத குஷ்டரோகி யெல்லாம் உட்கார்ந்திருக்கான். இந்தப் பையனுக்கு என்னம்மா?'' என்றார் கடுப்புடன்.

''தெரியலை சார். என்னன்னே தெரியலை. இனிமேத்தான் தெரியும். எதுக்காக இப்படிப் பண்ணினான்னு தெரியலை'' என்றாள் இதயா.

''சரிம்மா. இப்ப ஏதோ ஷாக்ல இருக்கான். ரொம்ப போட்டு அதையும் இதையும் கேட்டு கஷ்டப் படுத்தாதீங்க. இதயா...! கவுன்சிலிங்ல ஆர்வமெல்லாம் உள்ள பொண்ணுதானேம்மா. நீயே கவுன்சிலிங் கொடு. என்ன அவன் மனசுல இருக்குன்னு வெளிய கொண்டா. ஏதாவது சொல்யூஷன் கிடைக்கறதுக்கு பாருங்க. என்ன... இருபத்தெட்டு வயசுப் பையன் இப்படி பண்ணினா என்ன அர்த்தம்?'' என்று சொல்லி விட்டு நகர்ந்தார்.

திரும்பவும் இதயாவை அழைத்து ''ரொம்பவும் வேண்டிய குடும்பம். அதனால போலீஸ் கேஸ் ஆகாம பார்த்துட்டேன். பட் இனிமே மறந்தும் இந்த மாதிரி ஏதாவது பிரச்சினையைக் கொண்டு வந்துடாதீங்கம்மா. அப்புறம் எனக்கும் சேர்த்து ஜனங்க வேட்டு வச்சுடுவாங்க'' என்றார் அவர்.

''ரொம்பத் தாங்க்ஸ் சார்'' என்றாள் அவள் ஆத்மார்த்தமாக.

மறுபடியும் இரண்டு எட்டு சென்றவர், ''ம்... அடுத்த வாரம் ஒரு கவுன்சிலிங் ஸெஷன் இருக்கும்மா. ஆதர்ஷ்கிட்டயும் சொல்லிடு. நீயும் வந்துடு'' என்றார்.

''சரிங்க சார்'' என்றாள் அவள். சீஃப் டாக்டர் நகர்ந்து சென்றார்.

அதற்குள்ளாக சாப்பிட்டு விட்டு வந்த அமுதாவும் சிற்றம்பலமும் அவளை மொய்த்தார்கள். ''ஏம்மா, டாக்டர் என்ன சொன்னாரு?'' என்றார் அமுதா.

''சித்தப்பா! டாக்டர் பயங்கரமா திட்டறாரு. 'எப்படி இப்படி மெடிஸின் கிடைக்கிற மாதிரி வச்சீங்க? என்ன பிரச்சினைன்னு கேட்க மாட்டீங்களா? இருபத்தெட்டு வயசுப் பையன். இப்படிப் பண்ணியிருக்கான்...? அப்படின்னு திட்டறாரு.''

'' சரிம்மா... கோட்டை விட்டுட்டோம். இனிமேல் என்ன பண்றதுன்னு பார்ப்போம். எங்ககிட்ட என்னம்மா பேசறான். உங்கிட்டதான் பேசறான். அதுவும் இப்ப அடிக்கடி உங்கிட்ட பேசறது இல்லை போல இருக்கே?'' என்றார் சிற்றம்பலம்.

''ஆமாம் சித்தப்பா. எனக்கே இப்பதான் உறுத்துது. தினமும் ரெண்டு தடவையாவது கூப்புடுவான். ஒரு வாரமா கூப்பிடலை. நான் தான் கூப்பிட்டேன். 'நல்லாதான் இருக்கேன்' அப்படின்னான். நானும் பெருசா எடுத்துக்கலை'' என்றாள் இதயா.

உண்மையில் இதயாவைவிட இமயவரம்பன் நான்கு வயது பெரியவன். இருந்தாலும் அவன்,அவன் என்றே .பேசிப் பழகிவிட்டதால் உரிமையோடு இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''ஏம்மா...! ரூமுக்கு எப்ப கொண்டு வருவாங்களாம்?'' என்று கேட்டார் சித்தப்பா.

''சித்தப்பா! அவங்க கன்ட்ரோல்ல ரெண்டு நாளைக்கு இருக்கட்டும் சித்தப்பா. அதுக்கப்புறமாவே ரூமுக்கு வரட்டும். இப்ப உடம்பு ரொம்ப கஷ்டப்பட்டிருக்கும். பெட்டர் - ஐ சி யூ வில இருக்கறதுதான் நல்லதுன்னு நினைக்கிறேன்'' என்றாள் இதயா.

''சரிம்மா'' என்றார் சிற்றம்பலம்.

அதே நேரத்தில் இதயாவின் பெற்றோர்கள் இரண்டு பேரும் அங்கே வந்தார்கள்.

''ஏண்டி அமுதா, உடனே சொல்லி அனுப்ப மாட்டியா?'' என்று கோபித்துக் கொண்டாள் அகிலா - இதயாவின் அம்மா.

உண்மையில் அகிலாதான் பெரியவர் என்றாலும் கூட இதயா சற்றுக் கழித்துத்தான் பிறந்தாள். அதனால் இமயவரம்பனை அகிலாதான் சின்னக் குழந்தையில் மிகவும் அன்போடு வளர்த்தவள். அதனால் அவளுக்கு கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. அதே அளவுக்கு துக்கமும் பொங்கிக் கொண்டு வந்தது.

''அக்கா... என்னை என்னக்கா பண்ணச் சொல்றே? எனக்கு கையும் ஓடலை, காலும் ஓடலை... இவருக்கு போன் பண்ணி... இவரு வந்து - உடனே ஆஸ்பத்திரிக்குதான் எடுத்துட்டு வந்தோம். நல்லவேளைக்கு அவனோட ஃப்ரெண்டு யாரோ இதயாவுக்கு போன் பண்ணச் சொன்னாங்க. அதனாலே பண்ணினேன், நாங்க ரெண்டு பேரும் பிரம்மை பிடிச்ச மாதிரி இருந்தோம்'' என்றாள் அமுதா.

''சரி சரி இப்ப உன்னைப் போய் கோச்சுக்கற மாதிரி நேரம் இல்லை இது. என்ன சொன்னாங்க டாக்டர்?'' என்று கேட்டார் சாம்பசிவம் - இதயாவின் தந்தை.

''என்னத்தை சொல்றாங்கண்ணா? 'கண்டம் தாண்டிட்டான்.' அப்படின்னு சொல்லிட்டாரு டாக்டர்'' என்றார்.

''அப்பாடா'' என்று பெருமூச்சு விட்டார்கள் அகிலாவும் சாம்பசிவமும். ''ஆனால், என்ன கேள்வி கேட்கறாங்க தெரியுமா? அந்தக் கேள்விக்கெல்லாம் இப்படி பதில் சொல்ல வச்சிட்டானே இந்த பாவிப் பய'' என்றார் சிற்றம்பலம்.

''ஆமாம், பின்னே கேட்காமயா இருப்பாங்க? நானும் தான் கேட்கறேன் - அவன் இப்படி பண்ற அளவுக்கு என்ன நடந்துச்சு? நீங்க ஏதாவது அவனைத் திட்டினீங்களா?'' என்றார் சாம்பசிவம்.

''நீங்க வேற அண்ணா...! அவன் என்னைத் திட்டாம இருந்தா பத்தாதா. சர்வ சுதந்திரம் கொடுத்து வச்சிருக்கோமே. இதயாவையே கேளுங்க... அவனை எதுவும் கேள்வி கேட்கறது இல்லை. அவன் பாட்டுக்கும் வருவான். போவான்.



ஏதோ ஃப்ரெண்ட்ஸ் கூட ஜாலியா இருப்பான் வேலைக்கு ஒழுங்கா போயிடறான். என்ன... எந்நேரம் பார்த்தாலும் இந்த செல்போனை வச்சுட்டு நோண்டிட்டுகிடப்பான். அது ஒண்ணுதான் எனக்குப் பிடிக்காது. திட்டுவேன்'' என்றார் திருச்சிற்றம்பலம்.

சாம்பசிவம் ஒரு பெருமூச்சு விட்டார். ''இல்லை தம்பி, இந்தக் காலத்துல ரொம்ப பார்த்து பார்த்து செய்ய வேண்டியதிருக்கு. வீட்டுக்கு ஒண்ணே ஒண்ணை வச்சிட்டு இருக்கோம். எதையாவது பேசினா இப்படித்தான் எதையாவது ஒண்ணை பண்ணிக்கறாங்க. அவங்க போக்குலதான் விட்டுப் பிடிக்க வேண்டியதிருக்கு. ஏன் தம்பி... ஏதாவது காதல் சமாச்சாரமா இருக்குமோ'' என்றார் குரலைக் குறைத்துக் கொண்டு.

''அப்படி இருந்தாத்தான் நான் பண்ணி வச்சுத் தொலைவேனே. அப்படி எதுவும் இருக்கற மாதிரி தெரியலையே. அதை நான் எப்பவோ ஜாடை மாடையா சொல்லிட்டேன். 'கண்டபடி சுத்திட்டெல்லாம் திரியக் கூடாது. ஏதாவது அப்படி இருந்தா சொல்லு நானே பண்ணி வச்சிடறேன். நீ ஒண்ணும் அப்படி லேசுபாசா பார்க்க மாட்டே.' அப்படி இப்படின்னு சைக்கலாஜிக்கலா சொல்லி வச்சிருக்கேனே. அந்த மாதிரி எதுவும் தெரியலை. ஆனா இப்ப டவுட் வருது'' என்றார் சிற்றம்பலம்.

''என்ன டவுட்?'' என்றார் சாம்பசிவம்.

இரண்டு பேருமாக பெண்களை விட்டு சற்று விலகித்தான் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். ''இந்த செல்ஃபோனிலே தான் ஏதோ இருக்கு. எப்பப் பாரு செல் போனை வச்சுட்டே கிடப்பான். அதுல தான் ஏதோ பிரச்சினை வந்திருக்கு'' என்றார் சிற்றம்பலம்.

''சரி, விடு தம்பி. போட்டு உழப்பிக்கிட்டு இருக்காதே. அவன் முழிச்ச பிறகும் கூட 'ஏம்பா இப்படி பண்ணினே?'ன்னு அழுது கிழுது ஆர்ப்பாட்டம் பண்ணக் கூடாது. நீ அமுதாகிட்டேயும் சொல்லிடு. பேசாம இதயாவை விட்டு கேட்போம். இதயா பேசினா அவன் கொஞ்சம் சொல்லுவான். அதுவும் கூட இப்ப வேண்டாம். உடம்பு தேறட்டும். மனசு தேறட்டும். 'உன் பிரச்சினை என்னன்னாலும் சரி நாங்க இருக்கோம். உனக்கு சப்போர்ட் கொடுப்போம்' அப்படின்னு மட்டும் அவனுக்கு சொல்லிடுவோம். அதை மட்டும் அவனுக்குப் புரிய வச்சிடுவோம்'' என்றார் சாம்பசிவம்.

சிற்றம்பலம் மறுபடியும் ஒரு பெருமூச்சு விட்டு ''ஆமாங்க... இப்போதைக்கு முதல்ல இதைத்தான் அவன்கிட்ட சொல்லணும். கான்ஃபிடன்ஸ் கொடுக்கணும். அதான் முக்கியம்'' என்றார்.

அவர்கள் எதிர்பார்த்தாற்போலவே இரண்டு நாட்களுக்குப் பிறகு அறைக்கு கொண்டு வந்து விட்டார்கள்.

ஐ சி யு வில் இருக்கிற வரையிலும் அலுவலகத்துக்கு போன இதயா அவன் அழைத்துக் கொண்டு வரப்பட்டவுடனே இரண்டு நாள் விடுப்பு வாங்கிக் கொண்டாள். அவள் தேவை இல்லாமல் விடுமுறை எடுக்கிறவள் இல்லை என்பதால் அவளுடைய மேனேஜரும் பெரிதாக ஒன்றும் சொல்ல வில்லை.

திட்டமிட்டபடியே பெற்றோர்கள் எல்லாம் அந்தப் பக்கம் போயிருக்கையில் ஒரு பிற்பகலிலே - மூன்று மணி வாக்கிலே அவனிடத்திலே மெதுவாக இதயா கேட்டாள்.

''எப்படி ஃபீல் பண்றே அண்ணா, உடம்பெல்லாம் கொஞ்சம் பரவாயில்லையா?'' என்றாள்.

''கஷ்டமாதான் இருக்கு'' என்றான் இமயவரம்பன்.

''ஆமாம், வழக்கமான ரொட்டீன் இல்லாம பாடி டிஸ்டர்ப் ஆகியிருக்கில்லே, அப்படித்தான் இருக்கும்'' என்றாள்.

''நல்லாப் படுத்து ஓய்வு எடு.'' என்று ஓரத்தில் அமர்ந்தாள்.

கணை வரப்போகிறது என்பது இமயவரம்பனுக்கும் தெரிந்திருந்தது. ஆனால், சந்தித்துத்தான் ஆக வேண்டும் என்று அவனும் தயார் ஆனான்.

''ஏன் அண்ணா? நான் ஒண்ணு கேட்பேன்... நீ கோவிச்சுக்க மாட்டியே? அநாவசியமா உடம்பைப் போட்டு அலட்டிக்க மாட்டியே?'' என்றாள் இதயா.

அவள் குரலில் தோன்றிய அன்பு அவனை திகைப்படையச் செய்தது போலும். ஆழமாக சகோதரியைப் பார்த்தான். ''உயிர்ங்கறது ரொம்ப முக்கியமான விஷயம் அண்ணா. அதுல போய் கை வைக்கிற அளவுக்கு உனக்கு என்ன ஆச்சு?'' என்று கேட்டாள்.

இமயவரம்பன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். கண்களில் லேசாக கண்ணீர் கோடிட்டது.

''வேண்டாம். வேண்டாம். உனக்கு ஏதாவது மனசு கஷ்டமா இருந்தா ஒண்ணுமே சொல்ல வேண்டாம். ஆனால், பெரியப்பா, பெரியம்மா, அப்பா, அம்மா, நான் எல்லாரும் உங்கிட்ட ஒண்ணே ஒண்ணு சொல்லிப்போம். உன்னோட எல்லா கஷ்ட நஷ்டத்துலயும் நாங்க துணையா இருப்போம். உனக்கு நாங்களெல்லாம் இருக்கோம். நீ தனின்னு நினைச்சுக்காதே. பாரு. எதுவா இருந்தாலும் உனக்கு எப்பத் தோணுதோ அப்ப சொல்லு'' என்றாள் இதயா.

''இல்லை இல்லை. எனக்கும் பாரத்தை இறக்கி வச்சாத்தான் நல்லாயிருக்கும்'' என்று ஆரம்பித்தான் இமயவரம்பன்.

அவன் சொன்ன கதை போன போக்கைப் பார்த்து இதயாவே கொஞ்சம் மிரண்டு தான் போனாள்.






புதிதாக வாங்கியிருந்த அந்த செல்ஃபோனை திருப்பி திருப்பி அழகு பார்த்துக் கொண்டிருந்தான் இமயவரம்பன்.

புதிதாக வருகிற எல்லாவற்றையுமே முயற்சித்துப் பார்த்து விடுவதில் அவனுக்கு ஓர் ஆர்வம். அவன் பி.எஸ்.சி. கம்ப்யூட்டர் சயின்ஸ் முடித்துவிட்டு - மேலும் ஒரு எம்.பி.ஏ. முடித்து விட்டு தற்போது ஒரு நல்ல கம்பெனியில் ஐந்து இலக்கத்தில் சம்பளம் வாங்கிக் கொண்டு இருந்தான்.

அது ஒன்றும் லேசான சம்பளம் இல்லை. அவ்வளவு பெரியதொகை கைக்கு வரும் பொழுது ஒரு இளைஞன் என்னவெல்லாம் செய்யக்கூடுமோ அதெல்லாம் அவன் செய்வதில்லை. அது ஒரு ஆச்சரியம்தான். ஆனால், புதிதாக மக்கள் பயன்படுத்தக்கூடிய கண்டுபிடிப்புகளை நோண்டி, குடைந்து பார்ப்பது என்பதில் அவனுக்கு ஓர் ஆர்வம்.

ஒரு டி.வி. ரிப்பேர் ஆனாலோ அல்லது ஒரு செல்போன் ரிப்பேர் ஆனாலோ அவனே சரிபார்த்து விடும் அளவுக்கு அந்தப் பொருட்களைப் பிரித்துப் பார்த்து மீண்டு விடுவான்.

ஜப்பான்காரர்களைப் பற்றி ஒரு கதை உண்டு. அது பொய்யோ நிஜமோ தெரியாது, ஆனால் அப்படி ஒரு கதை உண்டு. அவர்கள் எப்போதுமே புதிதாக ஒரு மிஷினை வாங்கும் பொழுது, மூன்று மிஷின்கள் வாங்குவார்களாம். அதில் ஒன்றை ஷோக்கேஸில் வைத்துக் கொள்ளுவார்

களாம். ஒன்றை பயன்பாட்டுக்கு வைத்துக் கொள்ளுவார்களாம். இன்னொன்றை பிரித்துப் பார்த்து அந்த இயந்திரத்தினுடைய நுட்பம் என்ன அது எப்படி செய்யப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து விடுவார்களாம். அதற்குப் பிறகு இரண்டாவது முறை அந்த இயந்திரத்திற்கு ஆர்டரே போட மாட்டார்களாம். ஏன்? அவர்களே தயாரிக்க ஆரம்பித்து விடுவார்களாம் என்று ஒரு கதை உண்டு.

அது போல எந்த ஒரு பொருளை வாங்கினாலும் அதைப் பிரித்து மேய்ந்து அதன் நுணுக்கங்களைத் தெரிந்து கொண்டு அவனே கூட அடுத்த முறை அதைப் பழுது பார்த்து விடுவான். அப்படி ஒரு மூளை இமயவரம்பனுக்கு.

எந்திரங்களில் எவ்வளவுக்கெவ்வளவு ஆர்வமோ அந்த அளவுக்கு இலக்கியங்களிலே ஆர்வம் அதிகம். இயற்கையாகவே ஒரு மென்மையான மனம் படைத்தவனாக இருந்தான். அழகை ரசிப்பதில் அவனுக்கு ஆர்வம் அதிகம். ஒரு அழகான மேகம் நகர்ந்து போனால் நின்று பார்ப்பான். சின்னச் செடி புதிதாக

மொட்டு விடும் பொழுது பழியாக அந்தச் செடிக்கு பக்கத்திலேயே இருப்பான்.

அவன் அம்மா கூட "ஏண்டா காப்பி குடிக்கலையா?" என்று குரல் கொடுத்தால் "இங்கே கொண்டு வாம்மா" என்பான்.

அம்மா அங்கே காபி கொண்டு போய் கொடுப்பாள். அவன் அந்தச் செடியையே பார்த்துக் கொண்டிருப்பான்.

"என்னடா பண்ணிட்டு இருக்கே?" என்று அம்மா கேட்டால் "அம்மா இந்த மொட்டு எப்படி விரியுதுன்னு பார்க்கணும். சாயங்காலம் பார்த்தால் மொட்டா இருக்கு. கொஞ்ச நேரம் கழிச்சுப் பார்த்தா விரிஞ்சுடுது. எந்த பாயிண்ட்ல விரியுது? எப்படி விரியுதுன்னு பார்க்கணும்மா" என்பான்

"அய்யோ கிறுக்குப் பிள்ளை" என்று தலையில் அடித்துக் கொண்டு போவாள் அமுதா. ஆனால் அவனுடைய இந்த ரசனையையெல்லாம் இதயா புரிந்து கொள்ளுவாள்.

அவள் ஆலோசனைகள் கூட கூறுவாள். "அட, அண்ணா: இதுக்கு நீ உட்கார்ந்து பார்க்கறதுக்கு பேசாம உன்கிட்ட இருக்கற கேமராவை வச்சுட்டின்னா அதுவே படம் பிடிச்சுருமில்லே" என்பாள்.

"போடி. அப்படி பார்த்தா நல்லா இருக்காது. நேக்கெட் ஐஸ்ம்பாங்கள்ளே அது மாதிரி நம்மளோட கண்ணால நாம பார்க்கணும். அது ஒரு அழகு தெரியுமா?" என்பான்.

இதயா அதை ஏற்றுக் கொள்ளுவாள். இரண்டு பேரும் சின்னப் பிள்ளைகளாக இருந்த பொழுதிருந்தே ஒன்றாக விளையாடியவர்கள். இலக்கியங்களிலே 'சிற்றில் சிதைத்தல்' என்று வருமே. அதாவது பெண் குழந்தைகள் மணல் வீடு கட்டி விளையாடுவார்களாம். ஆண் பிள்ளைகள் அந்த மணல் வீட்டை சிதைத்து விடுவார்களாம். இலக்கியங்களில் இருந்தே கூட ஆணுக்கு ஒரு விளையாட்டு பெண்ணுக்கு ஒரு விளையாட்டு என்றெல்லாம் இருந்திருக்கிறதே!

அது மாதிரி இவள் எதையாவது செய்து வைப்பாள். அவன் அதைக் கலைத்து வைப்பான். ஆனால், இரண்டு வீட்டுக்கும் ஒரே பெண் - இரண்டு வீட்டுக்கும் ஒரே பையன் என்பதால் இரண்டு பேருடைய பெற்றோரிடமும் இரண்டு பேருக்கும் செல்லம் இருந்தது.

அதிலும் இமயவரம்பன் இதயாவை மிகவும் நேசித்தான். அதனால் இதயாவைச் சீண்டினாலும் அவள் அழுதால் பொறுக்க மாட்டான். அதைத் தெரிந்து கொண்டு இதயாவும் அழுது அழுது காரியத்தை சாதித்து விடுவாள்.

சின்னக் குழந்தையாக அப்படி வளர்ந்தவர்கள். ஒரு கட்டத்துக்குப் பிறகு நண்பர்களாக மாறிப்போனார்கள். ஆனால், சமீப காலத்தில் தான் ஒரு ஆண்மகன் என்பதைப் போல இமயவரம்பன் இதயாவிடம் இருந்து சற்று விலகினாற் போல தோன்றியது.



எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ளுகிற நிலை மாறி ஏதோ ஒரு பாதுகாப்பாளரைப் போல அவளைப் பார்த்துக் கொள்ளுகிறவனாக மாறிப் போனான். இதயாவுக்கும் அது பிடித்திருந்தது என்பதால் அவனுடைய நடவடிக்கைகளை அவள் பெரிதாக ஆராய்ந்து பார்க்கவில்லை.

தினமும் இரண்டு முறை பேசிக் கொள்ளுவார்கள். காலை வாரி விட்டுக் கொள்ளுவார்கள். அவசரம் என்றால் அவளை வந்து பிக் அப் பண்ணிக் கொண்டு போவான். எங்காவது போக வேண்டும் என்றால் அழைத்துக் கொண்டு போவான். துணிமணிகள் கேட்டால் வாங்கிக் கொடுப்பான். செல்லத் தங்கை என்ற முறையிலே அண்ணனிடத்திலே நிறைய வசூல் செய்து விடுவாள் இதயா.

இத்தனைக்கும் அவள் பட்டப்படிப்பை முடித்து விட்டு வேலைக்கு வந்துவிட்டாள். இரண்டு மூன்று ஆண்டுகளாக வேலை செய்து கொண்டிருக்கிறாள் என்றாலும் அண்ணனைப் பார்த்தவுடன் அவள் சிறுவயது தங்கையாக மாறிவிடுவாள். அப்படி தன்னைப் பொத்திப் பொத்தி வளர்த்த சகோதரன் இப்படி செய்து கொண்டானே என்ற கவலை அவளை அலைக்கழித்தது. அதனால்தான் அவள் அவன் வாயைப் பிடுங்கினாள்.

இமயவரம்பனும் சொல்ல ஆரம்பித்தான்.

**அ**ந்த செல்போன் மிகவும் அழகாக இருந்தது. அதில் தற்போதைக்கு என்னென்ன வசதிகள் உண்டோ எல்லா வசதிகளும் அதிலே இருந்தது. டச்ஸ்கிரீன் ஈமெயில் வசதியும் கூட இருந்தது. புதிதாக வாங்கிய பட்டுப் பாவாடை அல்லது ஒரு சட்டையை எப்பொழுது அணிவோம் என்று பெண் குழந்தைகள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்களே... அதுபோல எப்பொழுதெல்லாம் வாய்ப்பு கிடைக்குமோ அப்பொழுதெல்லாம் செல்ஃபோனில் பேச வேண்டும் என்று அவனுக்குள் ஆர்வமாக இருந்தது.

**அ**ன்றைக்கு வீட்டிலேதான் இருந்தான் இமயவரம்பன். ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் பெரும்பாலும் அவன் ஓய்வெடுத்துக் கொள்ளுவான். ஒரு இரண்டு மணிக்குப் படுத்தால் நான்கு மணி வரைக்கும் ஒரு ஆழ்ந்த தூக்கத்தைப் போட்டு விட்டுத்தான் எழுந்திருப்பான். அதே போலத்தான் அன்றைக்கும் படுத்தான்.

ஒரு பத்துப் பதினைந்து நிமிடங்கள் ஆகி இருக்கும்.

செல்ஃபோன் ஒலித்தது. எடுத்துப் பார்த்தான். தெரிந்த எண்ணாக இல்லை. இருந்தாலும் ஏதாவது முக்கியமான விஷயமாக இருக்கப் போகிறது என்று எண்ணிக் கொண்டு செல்ஃபோனை எடுத்து காதுக்கு கொடுத்தான்.

"ஹலோ, நான் அனுஸ்ரீ பேசறேன். நீங்க ரங்காதானே?" என்று அந்தப் பக்கம் இருந்து ஒரு குரல் கேட்டது.

"இல்லைங்க. நான் பில்லா." என்றான் இவன்.

அந்தப் பக்கம் பேசிய குரல் திகைத்துப் போனது. ''பில்லாவா? ஓ... சாரி... ராங் நம்பர்'' என்று வைத்து விட்டாள் அனுஸ்ரீ.

இவன் சிரித்துக் கொண்டான். ''ரங்காவா? ம்'' என்று சொல்லிக் கொண்டு செல்போனை கீழே வைத்து விட்டு கண்ணயர்ந்தான்.

ஒரு பத்து நிமிடம் கழிந்திருக்கும் - திரும்பவும் போன் ஒலித்தது.

''ஹலோ, நான் அனுஸ்ரீ பேசறேன். நீங்க ரங்காதானே?'' என்று கேட்டது.

''இல்லைங்க. நான் பில்லா.'' என்றான் இவன்.

அவள் மறுபடியும் திகைத்து விட்டு ''ஓ... ஐ ஆம் சாரி. ஏன் இந்த நம்பர் வருதுன்னு தெரியலையே'' என்றாள் உரத்த குரலில்.

''ஏங்க... தெரியாம வருதா, இல்லை தெரிஞ்சு வருதா?'' என்று கேட்டான் இந்தப் பக்கம்.

''ஹலோ சார். அப்படியெல்லாம் நாங்க ஒண்ணும் போன் பண்ணி வழியறது இல்லை. நிஜமாவே ராங் நம்பர்தான். இனிமே கூப்பிட்டா கேளுங்க'' என்று சொல்லி விட்டு வைத்து விட்டாள்.

ஒரு இரண்டு மூன்று நிமிடங்கள் கழித்து இவன் அந்த எண்ணுக்கு ஃபோன் செய்தான். ஏனோ அந்த அனுஸ்ரீ என்ற பெயர் இவன் மனதைக் கவர்ந்தது. அந்தப் பெயருக்கு மேலாக அந்தக் குரலும் அவனை ஈர்த்தாற்போல தெரிந்தது.

அந்தப் பக்கம் அந்த பொண்ணும் செல்போனை எடுத்து ''அனுஸ்ரீ ஸ்பீக்கிங்''என்றாள்.

''ஓ அனுஸ்ரீ பேசவெல்லாம் செய்வாங்களா?'' என்றான் இவன் இந்தப் பக்கம் இருந்து.

இவன் குரலைக் கேட்டவுடன் அந்தப் பெண் திகைத்துப் போனாள். ''என்ன சார் வேணும் உங்களுக்கு?'' என்றாள்.

''கூப்பிட்டா கேளுங்கன்னு சொன்னீங்களே. என்ன கேட்கறது? இப்ப நீங்க கூப்பிடலைன்னு நான் கூப்பிட்டேன். கூப்பிட்டா என்ன கேட்கணும்?'' என்றான் இவன்.

அவள் மறுபடியும் திகைத்தாள்... ''சார்... சாரி சார். நான் ஒரு நம்பர் போட்டேன். அது உங்களுக்கு வந்துடுச்சு. ஒரு தடவைக்கு ரெண்டு தடவை வந்துடுச்சு. இட்ஸ் மை ஃபால்ட். சாரி'' என்றாள்.

''பரவாயில்லைங்க. ரொம்ப கஷ்டப்பட்டு சாரி சொல்றீங்க. வாங்கிக்கறேன். அப்புறம்...'' என்று இழுத்தான் இவன்.

அவள் அமைதி காத்தாள்.

''உங்க குரல் ரொம்ப நல்லா இருக்குங்க. உங்க பேர் அதைவிட நல்லா இருக்கு'' என்று சொல்லிவிட்டு வைத்து விட்டான்.



அதற்குப் பிறகு ஒரு இரண்டு நாட்களுக்கு அந்த அனுஸ்ரீயின் குரலும் அனுஸ்ரீ என்ற பெயரும் அவன் உள்ளத்தில் ஓடிக் கொண்டே இருந்தது. ஆனால் அடுத்த நாள் வேலை காரணமாக அவன் வெளியூர் சென்று விட்டதால் இதைப் பற்றி யோசிக்க முடியவில்லை. அதற்கும் அடுத்த நாள் மறுபடியும் அந்த போனிலே இருந்து இவனுக்கு ஒரு அழைப்பு வந்தது.

''அனுஸ்ரீ பேசறேன். ரங்கா, இன்னைக்கு ஈவினிங் ஃபங்ஷனுக்கு நீங்க வந்துடுவீங்கதானே,'' என்று கேட்டது அனுஸ்ரீயின் குரல்.

''நான் ரங்கா இல்லை. ஆனால், ஃபங்ஷனுக்கு வரச் சொன்னீங்கன்னா வந்துடறேன். எங்கே ஃபங்ஷன்?'' என்று கேட்டான் இமயவரம்பன்.

''ஓகோ, மறுபடியும் உங்களுக்கே வந்துடுச்சா?'' என்று சலித்துக் கொண்டாள் அவள்.

''ஏங்க... சலிச்சுக்கற அளவுக்கு எங்க குரல் மோசமாவா இருக்கு?'' என்றான் இவன்.

''ஓ.கே. சார்... எப்படி உங்களுக்கு வருதுன்னே தெரியலை. உங்களுக்கு சிக்ஸ் சிக்ஸ் ஃபோர் சிக்ஸ்ன்னு முடியுதா?''.

''ஆமா, சிக்ஸ் சிக்ஸ் ஃபோர் சிக்ஸ்ன்னு தான் முடியுது.''

''எப்படிங்க இப்படி வருது?'' என்று அவள் இவனிடமே கேள்வி கேட்டாள்.

''அது எனக்குப் புரியலை. ஆனா, ரெண்டு நாளா ஏங்க வரலை?'' என்றான் இவன்.

அவள் சிரித்து விட்டாள். ''சார்... எனக்கு இந்த மாதிரி செல்ஃபோன்ல வழிஞ்சுக்கறது - பேசிக்கறதெல்லாம் புடிக்காது சரிங்களா. ஐ ஆம் டீசன்ட்லி எம்ப்ளாய்ட். ஐ காட் மச் ஒர்க். இந்த மாதிரி அரட்டை அடிக்க எனக்கு நேரமில்லை'' என்றாள் அனுஸ்ரீ.

''அப்படிப் போடுங்க. இப்ப ஒரு ஸ்டேட்மெண்ட் சொன்னீங்க பாருங்க. இதுதாங்க எனக்கு ரொம்ப பிடிச்சது. இந்த மாதிரி ஒரு நண்பரோ தோழியோ வேணும்னுதான் நானும் தேடிட்டு இருக்கேன்'' என்றான்.

அவள் மறுபடியும் திகைத்துப் போனாள்.

''ஓ.கே. லெட் அஸ் பி ஃப்ரெண்ட்ஸ். நான் இமயவரம்பன். இந்தக் கம்பெனியில வேலை செய்யறேன்'' என்று அவன் அறிமுகப்படுத்திக் கொண்டான்.

இவனுடைய நேரடி தாக்குதலை எதிர்பார்க்காத அந்தப் பெண் ''ஓ.கே. சார் ரொம்ப சந்தோஷம் - உங்களைப் பத்தி அறிமுகப்படுத்திக்கிட்டதுக்கு. நான் தான் அனுஸ்ரீன்னு ஏற்கனவே சொல்லியிருக்கேன்ல. அதுக்கு மேல என்னைப் பத்தி சொல்லிக்கறதுக்கு ஒண்ணும் இல்லை. நீங்க எதிர்பார்க்கற மாதிரி நாங்க ப்யூட்டி குயினெல்லாம் கிடையாது. ரொம்ப ரொம்ப சாதாரணமான ஒரு பொண்ணு.

அதனால விட்டுட்டு வேற எங்காவது ட்ரை பண்ணுங்க'' என்று சொன்னாள் அனுஸ்ரீ.

''ஹலோ, ஹலோ... சும்மா ஃபோன் பண்ணினா ட்ரை பண்றேன்னு அர்த்தமா? ரொம்பத்தான் நினைப்புங்க. நாங்க அப்படியெல்லாம் வழியறவங்களெல்லாம் இல்லை. நாங்க டீசன்டா... நட்பா பழகுவோம்'' என்றான் இமயவரம்பன்.

''இருக்கட்டும். அப்படியே இருந்தாலும் ஃபோன்ல வந்த ஒரு ஆளோட நட்புப் பாராட்டற அளவுக்கு நாங்க ஒண்ணும் பெரிய ஞான சிகரங்கள் இல்லைங்க. ஜஸ்ட் ஆர்டினரி. அதனால குட் பை'' என்று அவள் ஃபோனை வைத்தாள்.

இவன் இதழ்களில் புன்னகை மலர்ந்தது. ''ஆரம்பம் நல்லாயிருக்கு'' என்று நினைத்துக் கொண்டான்.

அதே நேரத்தில் அந்தப் பக்கம் அனுஸ்ரீயின் முகத்திலும் கூட புன்னகை மலர்ந்தது. 'பாவம் அவரு டீசன்டா இன்டர்டியூஸ் பண்ணிட்டாரு. எதுக்காக இப்படிக் கடிச்சோம்' என்று தன்னைத் தானே கடிந்து கொண்டாள்.

அந்தப் புள்ளியில் அவள் விலகியிருந்தால் பின்னால் நேர்ந்த சேதங்களுக்கெல்லாம் அந்த சந்திப்பு காரணமாக அமைந்திருக்காது.

## 4



**ப**ன்னிரண்டு மணி வரைக்கும் நிமிரவே முடியவில்லை.

இமயவரம்பன் இரு கைகளையும் மேலே உயர்த்தி சோம்பல் முறித்தான். ''அப்பாடா... என்ன இன்னைக்கு இப்படி வேலை?'' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

வேலை முடிந்தவுடனேயே உடனடியாக அவனுக்குத் தோன்றிய எண்ணம் அனுஸ்ரீயின் ஞாபகம் தான். 'அடடே.... இன்னைக்கு காலையில இருந்து அனுவுக்கு ஃபோன் பண்ணலை. ஃபோன் பண்ணனும்' என்று அவன் செல்ஃபோனை எடுக்கையிலே சரியாக அனுவின் ஃபோன் அவனுக்கு வந்தது.

''ஹலோ, இப்பத்தான் நினைச்சேன். நூறு ஆயுசு'' என்றான் அவன்.

''ஏன்? மீட்டிங் முடிஞ்சு பதினைந்து நிமிஷம் ஆச்சு. ஃபோன் பண்ணுவீங்கன்னு எதிர்பார்த்தேன். நீங்க பண்ணலை'' என்றாள் அவள்.

''அடடா, உண்மையாவே மீட்டிங் இப்பத்தான் முடிஞ்சது'' என்றான் இமயவரம்பன்.



காலையிலேயே 'பனிரெண்டு மணி வரை மீட்டிங் இருக்கு' என்று ஏற்கெனவே ஒரு மெசேஜ் அனுப்பியிருந்தான்.

''அது சரிங்க, உங்களுக்கு ஏதோ வேலை இருக்குன்னு சொல்லிட்டு இருந்தீங்களே'' என்றான்.

''ஆமாம், எனக்கு வேலை இருந்ததுதான். ஆனா எப்பவும் காலையில இதுக்குள்ள ரெண்டு தடவை பேசியிருப்போம். அதனால நினைச்சேன்'' என்றாள் அவள்.

இமயவரம்பன் கலகலவென்று சிரித்தான். 'பரவாயில்லை. நம்மைப் போலவே அவளுக்கும் பார்க்க வேண்டும் - பேச வேண்டும் என்று தோன்றுகிறது' என்று எண்ணிக் கொண்டான்.

''அது சரி, வர சார்ட்டடே சண்டே என்ன புரோகிராம்?'' என்றான் இமயவரம்பன்.

''ஒரு புரோகிராமும் இல்லை. நான் தான் அந்த போஸ்டல் கோர்சுக்காக அந்த கிளாஸுக்குப் போகப் போறேன்.''

''அப்ப நான் அங்கே வந்து உங்களைப் பார்க்கட்டுமா?'' என்று கேட்டான் இமயவரம்பன்.

அனுஸ்ரீ சட்டென்று திகைத்துப் போனவளாக ''இல்லை, இல்லை, வேண்டாம். அங்கயெல்லாம் வர வேண்டாம்'' என்றாள்.

''ஏன்?'' என்றான் அவன் - நெற்றிப் புருவத்தை உயர்த்தி விட்டு.

''இல்லைங்க. நாம இப்பதான் ரெண்டு மாசமா பேசிட்டு இருக்கோம். அதுக்குள்ள நேர்ல பார்த்தா அவ்வளவு சுவாரசியமா இருக்காது. கொஞ்சம் நல்லா டீப்பா பழகிட்டு நேர்ல பார்க்கலாம்'' என்றாள் அனுஸ்ரீ.

''இது என்னடா வம்பாப் போச்சு? நேர்ல பார்த்தா டீப்பா பழகக் கூடாதுன்னு என்ன இருக்கு?'' என்று கேட்டான் அவன்.

அவள் முகம் அந்தப் பக்கம் வாடிவிட்டது.

''இல்லைங்க. ஒரு காரணமாத்தான் நான் சொல்றேன். வி ஆர் ஃப்ரெண்ட்ஸ் நவ். நாம இப்போதைக்கு இப்படியே இருக்கறதுதான் நல்லது. நேர்ல பார்த்து ஏதாவது ஒரு ஒப்பீனியன் ஃபார்ம் ஆயிடுச்சுன்னா கஷ்டம்'' என்றாள் அவள்.

''எங்கப்பா சாமி'' என்று அவன் தலையிலே கையை வைத்துக் கொண்டான்.

''சரிங்க... நீங்க என்னைப் பார்க்க வேண்டாம்னாலும் சரி. நான் உங்களைப் பார்க்கப் போறேன்'' என்றான் அவன்.

''ஐயய்யோ, வேண்டாங்க'' என்றாள் அவள்.

''சரி, உங்களுக்கு என்னமோ ஒரு பயம். இருக்கட்டும். நான் என்னோட போட்டோவை அனுப்பி வைக்கிறேன்'' என்று அவளுடைய ஈமெயில் ஐடியை கேட்டான்.

''ப்ளீஸ். நான் ஒரு பாலிஸி வச்சிருக்கேன். ஈமெயில் ஐடியெல்லாம் ஜென்ட்ஸுக்கு தர்றது இல்லைன்னு வச்சிருக்கேன். கோபிச்சுக்காதீங்க'' என்றாள் அனுஸ்ரீ.

அவனுக்கு அடிபட்டாற் போல ஆகிவிட்டது.

''ஏங்க. நான் உங்க ஃப்ரெண்டுங்க'' என்றான் இமய வரம்பன்.

''அதான் சொன்னேனே, நாம பேச ஆரம்பிச்சே ரெண்டு மாசம் தான் ஆச்சு. இன்னும் கொஞ்சம் தீவிரமா பழகிட்டு ஒருத்தரை ஒருத்தர் நல்லா புரிஞ்சதுக்கு அப்புறம் இந்த போட்டோ எக்ஸ்சேஞ்செல்லாம் வச்சுக்கலாமே?'' என்றாள் அவள்.

''அப்ப சரிங்க!'' என்றான் அவன் சலிப்புடன். இப்படி சொன்னாலும் அதற்குப் பிறகு அவர்களுடைய நட்பு தீவிரப்படத்தான் செய்தது.

தினமும் காலையில் இருந்து இரவுக்குள்ளாக வேடிக்கையான மெசேஜ்கள், ஜோக்குகள், முக்கியமான செய்திகள், நல்ல பெரியவர்களுடைய மேற்கோள்கள் என்று அனுஸ்ரீயும் அவனும் மாற்றி மாற்றி அனுப்பிக் கொள்ளுவார்கள். மேலும் இரண்டு மூன்று மாதங்கள் ஓடியது.

இமயவரம்பனுக்கு அன்று பிறந்த நாள். இதயா கூட அன்றைக்கு அவன் வீட்டுக்கு போனாள். காலையில் செல்லும் பொழுதே ஒரு பரிசு வாங்கிக்கொண்டு போனாள். ''ஹாப்பி பர்த் டே அண்ணா'' என்று கொடுத்தாள்.

''தாங்க்யு தாங்க்யூ'' என்று வாங்கிக் கொண்டான்.

''நான், இன்னும் நேரத்துல வருவேன்னு எதிர்பார்த்தேன்'' என்றான்.

''அம்மாவுக்கு உடம்பு சரியில்லாமல் போச்சு. சமையல் நான்தான். காலையில சமைச்சு வச்சுட்டு அவசர அவசரமா ஓடி வந்தேன்'' என்றாள் இதயா.

''அப்ப நீ ஆஃபீஸுக்கு லீவு போடலையா?'' என்றான் இமயவரம்பன்.

''கண்ணா, இன்னைக்கு கண்டிப்பா போயே ஆகணும் ஆபீஸுக்கு'' என்று சமாதானம் செய்து விட்டு புறப்பட்டாள்.

''அப்ப நான் என்ன பண்றது? லீவு போட்டிருக்கேனே?'' என்றான் இமயவரம்பன்.

அதற்குள் அவன் அம்மா வந்து ''போட்ட லீவை கேன்சல் பண்ணிட்டு ஆஃபீசுக்கே போயிட்டு வா'' என்றாள்.

''போம்மா. லீவு போட்டுட்டு யாராவது ஆஃபீஸுக்கு போவாங்களா?''.

''ஏதாவது அவசியமான நேரத்துக்கு இந்த லீவு எடுத்துக்கலாம் இல்லே?'' என்றாள் அம்மா.

''அதெல்லாம் வேண்டாம். நீயும் அப்பாவும் கிளம்புங்க. நாம எங்காவது கோவிலுக்கு போயிட்டு வரலாம்'' என்றான்.

''சரிப்பா'' என்றாள் அம்மா.



''எங்கே போகலாம்? ஏதாவது ஒரு நல்ல கோயிலுக்கு காலையில போயிட்டு சாயந்தரம் வர்ற மாதிரி ப்ளான் பண்ணுங்க'' என்றான்.

அதற்குள் அமுதா ''அகிலாவுக்கு உடம்பு சரியில்லைன்னு சொன்னாங்க. அப்படி இருக்கையில அவங்களை விட்டுட்டு நாம கோயிலுக்கு போனா சங்கடப்படுவாங்கல்ல. இன்னொரு நாளைக்கு அகிலாவும் எல்லாரும் வர்ற மாதிரி ப்ளான் பண்ணிக்கலாம்.''

''சரி அப்படின்னா நான் என் ஃப்ரெண்ட்ஸோடு சேர்ந்து சினிமாவுக்காவது போயிட்டு வர்றேன்'' என்று அவன் திட்டம் போட்டுக் கொண்டு புறப்பட்டான்.

சற்று தூரம் வெளியில் வந்த பிறகுதான் அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

அனுவுக்கு ஃபோன் செய்தான். ''அனு, இன்னிக்கு என் பர்த் டே'' என்றான்.

''அய்யோ பர்த் டேவா? நீங்க ஏன் சொல்லலை- நான் உங்களுக்கு ஏதாவது கிப்ட் அனுப்பியிருப்பேனே'' என்று பரபரத்தாள் அனுஸ்ரீ அந்தப் பக்கம்.

''அதனால தான் சொல்லலை. வெட்டியா காசை போட்டு ஏதாவது ஒரு கிஃப்டை வாங்கி அனுப்ப வேண்டாம் அப்படின்னுதான் சொல்லலை.''

''அடடா, சிக்கன திலகமாக்கும்'' என்று கேலி செய்தாள் அவள்.

''சிக்கன திலகம் இல்லைங்க. விவரமான ஆளு'' என்றான் இமயவரம்பன்.

''புரியலை'' என்றாள் அனுஸ்ரீ.

''நீங்க மொதல்ல டேட்டை சொன்னா ஒரு கிஃப்டை வாங்கி அனுப்பி விட்டுடுவீங்க கொரியர்ல. பர்த்டே அன்னிக்கு ஒரு விஷ் ஒரு ஆசைன்னு கேட்டா மறுக்க மாட்டீங்கள்லே'' என்றான்.

அவளுக்கு ஏதோ வருகிறது என்று தெரிந்தது.

''சொல்லுங்க'' என்றாள் அடங்கிய குரலில்.

''இல்லை, உங்க ஆஃபீஸ் எங்கே இருக்குன்னு சொல்லுங்க. இன்னிக்கு நான் அங்க வரேன். ஏன்னா நான் இன்னிக்கு லீவு போட்டுட்டேன். நாம ரெண்டு பேரும் எங்காவது போகலாம்'' என்றான் இமயவரம்பன்.

அந்தப் பக்கம் மவுனம் நிலவியது. ''ஏய், அனு. அனுஸ்ரீ சொல்லுங்க'' என்றான்.

''எதுக்கு? அப்புறம் எங்க வீட்ல இருந்து 'நீ போயிட்டுவாத்தா அம்மணி'ன்னு டின்னு கட்டி அனுப்பிடுவாங்க'' என்றாள் அனுஸ்ரீ.

''ஓஹோ, ரொம்பக் கட்டுப்பாடான குடும்பமோ?'' என்றான்.

''ஆமாங்க. அதனாலதான் எனக்கு உங்ககிட்ட போட்டோ கொடுக்கறதுக்கோ நேரடியா பேசறதுக்கோ பயமா இருக்கு'' என்றாள் அனுஸ்ரீ.

''சரி, ஒரு ஹாப்பி பெர்த்டே கூட சொல்ல மாட்டீங்களா?'' என்றான் இமய வரம்பன்.

''கண்டிப்பா. ஹாப்பி பர்த்டே, விஷ் யு மெனி மோர் ரிட்டன்ஸ் ஆப் த டே. உங்க நட்சத்திரம் எல்லாம் சொல்லுங்க, நான் இன்னிக்கு சாயங்காலம் கோவிலுக்குப்போய் அர்ச்சனை பண்றேன்'' என்றாள்.

அவன் சற்று நெகிழ்ந்து போனான்.

''கண்டிப்பா உங்களுக்கு நான் ஏதாவது பரிசு அனுப்புவேன்'' என்றாள்.

''சரி, ஆனா லேட்டா போச்சே'' என்றான் அவன்.

''பரவாயில்லை, பி லேட்டட் விஷ்ஸஸ்ன்னு வச்சுக்கோங்க. நீங்க சொல்லலைதானே? அது உங்க தப்புதானே?'' என்றாள் அனுஸ்ரீ.

''சரிங்க, சரிங்க, தப்பை ஆராய்ச்சி பண்ணி என்ன பண்ணப் போறோம்?. இப்ப நான் உங்களைப் பார்க்கணுமே? அதுக்கு வழி சொல்லுங்க'' என்றான் இமயவரம்பன்.

''ப்ளீஸ், நான் சொன்ன ஆறு மாச கெடு ஆகட்டும். அதுக்கப்புறம் நாம சந்திப்போம்'' என்றாள் அனுஸ்ரீ.

''எதுக்கு இந்த ஆறு மாச கெடு? எனக்கு புரிய மாட்டேங்குது'' என்றான் இமயவரம்பன்.

''அதுக்கும் ஒரு காரணம் இருக்கு. அதையும் ஆறு மாசம் கழிச்சு சொல்றேனே'' என்றாள் அனுஸ்ரீ.

''எதுக்கெடுத்தாலும் ஆறு மாசம் அப்படின்னு ஒரு முடிவு பண்ணிட்டீங்க'' என்று சிரித்தான் அவன்.

''ஆச்சு, அது என்ன நாள் ஓடிடும். அதுவரைக்கும் நாம இப்படியே எஸ்எம்எஸ்... அதுக்கப்புறம் இந்த மாதிரி ஏதாவது கொட்டேஷன்ஸ்... இப்படியே நாம பேசிக்குவோமே'' என்றாள்.

''ஏங்க வேற எதாவது விதத்துல பயம் இருக்கோ?'' என்றான்.

அவள் பெருமூச்சு விட்டாள். ''அப்படியெல்லாம் இல்லைங்க. எங்க வீட்ல நான்தான் கடைசிப் பொண்ணு. எங்க வீட்ல என்னைப் பத்தி பயப்படறாங்க. அதுக்கும் ஒரு காரணம் இருக்கு'' என்று அவள் சொல்ல-

''சரி, 'ஆறு மாசம் கழிச்சுச் சொல்றேன்.' அதானே?'' என்று அவன் சிரித்தான்.

அவளும் அந்தப் பக்கம் சிரித்தாள்.

ஆனால், ஒன்றிரண்டு நாட்களுக்குள்ளாக அவனுடைய அலுவலகத்திற்கு கோவிலில் அர்ச்சனை செய்த விபூதி, குங்கமத்தோடு அழகான ஒரு ஃபோட்டோ ஃப்ரேம் அனுப்பியிருந்தாள்.

அதைப் பார்த்த அவன் நெகிழ்ந்து போனான். அன்று மாலை அவளுக்கு ஃபோன் செய்தான்.

''வெறும் ஃபோட்டோ ஃப்ரேம் தான் அனுப்பியிருக்கேன். அதுல உங்க மனசுக்கு பிடிச்சவங்களோட ஃபோட்டோ வச்சுக்கலாம்'' என்றாள் அனுஸ்ரீ.



'ஒருவேளை அது நீங்களா இருக்குமோ?' என்று சொல்ல நினைத்தவன் நாக்கை கடித்துக் கொண்டான்.

அவள் அந்தப் பக்கம் ''என்னமோ சொல்ல வந்தீங்களே?'' என்று கேட்டாள்.

''ஆமாமா, சொல்ல வந்தேன். ஆனா ஆறு மாசம் கழிச்சு சொல்றேனே'' என்றான்.

அவள் சிரித்தாள், ''சரி கிஃப்ட் பிடிச்சதா?'' என்று கேட்டாள்.

''கிஃப்ட் ரொம்ப பிடிச்சதுங்க. அதுகூட... அந்த கோவிலுக்கு போய் அர்ச்சனை பண்ணிட்டு வந்தீங்களே! அந்த அக்கறை ரொம்பப் பிடிச்சது. என்ன வேண்டிக்கிட்டீங்க சாமிகிட்டே?'' என்றுகேட்டாள்.

''உங்க நட்பு எனக்கு எப்பவுமே நிலைச்சிருக்கணும்னு வேண்டிகிட்டேன்'' என்றாள்.

அவன் நெகிழ்ந்து போனான். ''வெறும் நட்பு மட்டும்தானா?'' என்று கேட்டான்.

''ஆமாங்க. உலகத்துல எல்லாத்தையும்விட நட்பு ரொம்ப முக்கியம். ஆறு மாசம் கழிச்சு நான் உங்களை பார்க்கலாம். நீங்க என்னைப் பார்க்கலாம். அதுக்குள்ளே எது எது எப்படி மாறுமோ தெரியாது. ஆனா எப்பவுமே அனுஸ்ரீ உங்களுக்கு ஃப்ரெண்டுதான்'' என்றாள் அவள்.

அவன் ஒரு நிமிடம் ஒன்றும் பேசவில்லை. ''என்னங்க பேச்சைக் காணோம்'' என்றாள்.

''பேசறதுக்கு என்னங்க இருக்கு? வாயே எழும்பலை. அப்படி ஒரு நெத்திஅடியா அடிச்சிட்டீங்க'' என்றான் இமயவரம்பன்.

உண்மையிலே ஒருசில நேரங்களில் அவள் பேசுவது நெஞ்சைத் தொடுவது போல இருக்கும். ஆனால், ஏதோ தொண்டைக்குள் விக்கிக் கொண்டாற்போல இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு அவள் அவஸ்தைப்படுகிறாள் என்பதும் அவனுக்கு புரிந்தது. அதற்காக குடைந்து குடைந்து கேட்பதும் நாகரீகமில்லை என்பதும் அவனுக்கு புரிந்தது. அதனால் 'நடக்கிறபடி நடக்கட்டும். இப்போதைக்கு அவள் சொல்வதைப் போல நட்பே சுகமாக இருக்கிறது' என்று எண்ணிக் கொண்டான்.

நட்பு என்றால் சும்மா வெட்டிக் கதை பேசுகிற நட்பாக அவர்களுடைய நட்பு இருக்கவில்லை. அறிவார்ந்த விஷயங்களைத்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். நல்ல புத்தகங்கள், படித்த புத்தகங்களைப் பற்றிப் பேசுவார்கள். படித்த கவிதைகளைப் பற்றிப் பேசுவார்கள். பார்த்த காட்சிகளைப் பற்றிப் பேசுவார்கள். அனுஸ்ரீயுடன் பேசுவதில் அவனுக்கு செய்திகள் கிடைக்கும். அவளும் அதையே சொல்லுவாள்.

''இல்லைங்க இமயன், உங்ககிட்ட பேசினா கண்டிப்பா ஒண்ணு ரெண்டு மெசேஜாவது இருக்கு. ஒவ்வொரு நாளும் நான் தூங்கப் போகும் பொழுது நீங்க சொல்ற மெசேஜ்ஜைத் தான் எடுத்துக் கொண்டு போய்த் தூங்குவேன்'' என்பாள்.

அவன் அதை ரசித்துக் கொள்ளுவான். பரஸ்பரம் ஒருவர் மேல் ஒருவருக்கு மதிப்பு இருந்தது. ஆனால் ஏனோ அனுஸ்ரீ நேரில் பார்த்தால் அந்த மதிப்பு குறைந்து போய்விடும் என்று அஞ்சுகிறாற்போலத் தோன்றியது.

இதற்கு இடையிலேதான் ஒரு நாள் அவர்களுக்குள் திடீர் என்று அந்தப் பரிமாற்றம் நடந்தது. அவள் ஏதோ கலகலவென்று பேசிக் கொண்டிருந்தாள். இந்தப் பக்கம் இமயவரம்பன் ஒன்றுமே பேசாமல் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தான்.

ஏதோ வித்தியாசமாகப் பட அந்தப் பக்கம் இருந்து அனுஸ்ரீ, "என்ன இமயன் நான் பேசிட்டே இருக்கேன். நீங்க ஒண்ணுமே சொல்லலை".

"உங்க குரல் கேட்க கேட்க சுகமா இருக்கு. ஒரு நாளைக்கு கேட்கலைன்னாலும் அன்னைக்கு தூக்கம் வர மாட்டேங்குது. என்னமோ என் மனசு....." என்று இழுத்தான்.

அந்தப் பக்கம் அனுஸ்ரீ மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு "உங்க மனசு...?" என்றாள்.

"உங்க உருவம் தெரியாத அந்தக் குரலும் ஏதோ ஒண்ணும் என் மனசை ஆக்கிரமிச்சிருக்கு. ஐ திங்க்... ஐ திங்க்..." என்றான்.

அவள் அந்தப் பக்கம் மவுனமே காத்தாள். "வேணாங்க, அது ரொம்ப செயற்கையா இருக்கும். இப்படிச் சொல்றேனே அநேகமா நான் உங்களை நேசிக்கிறேன்" என்றான் இமய வரம்பன்.

இப்படி ஒரு வாக்கியத்தை எதிர்பார்க்காத அனுஸ்ரீ அந்தப் பக்கம் "என்ன சொல்றீங்க?" என்றாள் தடுமாறிய குரலில்.

"என்னங்க சொல்றேன்? தெளிவா சொல்றேன் - நான் நினைக்கிறேன் நான் உங்களை நேசிக்கிறேன் அப்படின்னு" என்றான்.

அவள் அந்தப் பக்கம் இருந்து என்ன பதில் சொல்லக் கூடும் என்று அவன் காத்துக் கொண்டிருக்கயிலேயே அவள் விசித்து விசித்து அழுகிறாற்போலத் தோன்றியது.

"ஏங்க? என்னங்க அழறீங்களா?" என்று இவன் இந்தப் பக்கம் பதைபதைக்க அவள் சட்டென்று போனை ஆஃப் செய்து விட்டாள்.



இமயவரம்பனுக்கு இருப்புக்கொள்ளவே இல்லை.

'ஏன் அழுதாள்? தான் சொன்னது ஒருவேளை பிடிக்கவில்லையோ? மனம் கலங்கி விட்டாளோ? ஏன் அழுதாள்? ஏன் அழுதாள்?' என்ற கேள்வியே அவனுக்குள்ளே அலை மோதிக் கொண்டிருந்தது.

'அப்படியென்ன தவறு செய்து விட்டேன் நான்?



உன் குரல் எனக்குப் பிடிக்கிறது. நீ பேசுகின்ற விதம் பிடிக்கிறது. உன்னுடைய அறிவு பிடிக்கிறது. மொத்தத்தில் உன்னைப் பிடிக்கிறது என்பதைத்தானே நான் சொன்னேன். அதை ஏன் அந்தப் பெண் அவ்வளவு சோகமாக எதிர்கொண்டாள்? ஒரு வேளை சோகம் இல்லையோ? ஆனந்தக் கண்ணீரோ?' என்று அவனுக்கு சந்தேகம் கூட வந்தது.

இமயவரம்பனுக்கு உறக்கம் பிடிக்கவில்லை. இரவு அவளை ஃபோனிலே அழைத்தான்.

அந்தப் பக்கம் சற்றுத் தயக்கத்திற்கு பிறகுதான் அவள் லைனில் வந்தாள். இமய வரம்பன் குழம்பிப் போன ஒரு குரலில் கேட்டான். "ஹலோ, நான் என்ன சொல்லிட்டேன் அப்படின்னு அனுஸ்ரீ நீ இப்படி கோபிச்சுக்கறே?" என்றான்.

அவள் "ப்ளீஸ், நாளைக்குப் பேசலாமே" என்றாள்.

"இல்லை, இல்லை, ஒரு அஞ்சு நிமிஷம் பேசிடுவோம். நீ வேண்ணா யாரோ லேடீஸ் கிட்ட பேசற மாதிரி வாடி போடின்னு பேசு" என்றான் இவன்.

அவள் நீண்டதொரு பெருமூச்சு விட்டு விட்டு "அப்படியெல்லாம் ஏமாத்தி எனக்கு பழக்கம் இல்லையே" என்றாள்.

"நீ தான் என்னைப்பத்தி உன் வீட்ல சொல்லியிருக்கேன்னியே. அப்புறம் என்ன?."

"தெரியும். ஃபோன்ல பேசுவோம். நண்பர்னு சொல்லியிருக்கேன். அவ்வளவுதான்"

"அப்புறம் என்ன? இல்லாட்டி ஃசெல்போனை எடுத்துட்டு வீட்டை விட்டு வெளியே வா. உங்கிட்ட நான் பேசியே ஆகணும்" என்றான்.

திடீரென்று அவன் உரிமையில் பேசுவது அவளுக்குத் தெரிந்தது. அவள் ஒரு நிமிடம் கழித்து "சரி சொல்லுங்க" என்றாள்.

"எங்கே இருக்கே?" என்று கேட்டான்.

"இல்லை. இப்பப் பேசலாம். பேசுங்க. ஆனால் ரொம்ப நேரம் அல்ல. ஒரு டு மினிட்ஸ் மட்டும்தான்" என்றாள்.

"அடேயப்பா, கண்டிஷன் எல்லாம் பெரிசா இருக்கு" என்று அவன் குறைபட்டுக் கொண்டான்.

அவள் அந்தப் பக்கம் எந்த விதமான பிரதிபலிப்பையும் செய்ய வில்லை.

"சொல்லுங்க" என்றாள்.

"ஏன் அனு? நான் சொன்னது ஏதாவது தப்பாப் போச்சா உனக்கு?" என்று கேட்டான்.

அவள் மவுனம் சாதித்தாள்.

"இங்க பாரு, அனு, நான் ஒரு புரொபோசல் சொல்லியிருக்கேன். உனக்கு அது புடிச்சிருந்தா ஏத்துக்கலாம். இல்லைன்னா விட்டுடலாம்" என்றான்.

அவள் மறுபடியும் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு "உங்களுக்கு என் நிலைமை புரியலைங்க. நான் ரொம்ப சாதாரண குடும்பத்துப் பொண்ணு. ரொம்ப சாதாரணமான ஒரு அப்பியரன்ஸ் உள்ள பொண்ணு. படிச்சிருக்கேன். வேலை பார்க்கறேன். நடுத்தரக் குடும்பம்தான். இதிலே இந்த மாதிரியான ஆசையெல்லாம் வச்சுக்கற அளவுக்கு தகுதி இல்லைங்க"

"ஓஹோ. இந்த மாதிரி ஆசை வச்சுக்கறவங்களெல்லாம் ஏதோ பரீட்சை எழுதி பாஸ் பண்ணி குவாலிஃபை பண்ணிக்கற மாதிரி சொல்லிக்கிட்டிருக்கிறே" என்றான் அவன் கடுப்புடன்.

"அது இல்லைங்க, நீங்க புரிஞ்சுக்கலை, ஒரு பொண்ணுக்கு சீக்கிரமா மாப்பிள்ளை அமையறதுக்கு உண்டான தகுதிகள் என்னென்ன இருக்குமோ அதெல்லாம் எங்கிட்ட இல்லை" என்றாள் அனுஸ்ரீ.

"அதை நான் தானேப்பா முடிவு பண்ணனும்?"

"வேண்டாம். என் அறிவுரையைக் கேட்டீங்கன்னா இதைத் தொடர வேண்டாம். நாம் நண்பர்களாக இருந்துக்கறதுதான் நல்லது அப்படின்னு நினைக்கிறேன்" என்றாள் அவள் அழுத்தம் திருத்தமாக.

இப்போது இமயவரம்பன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான், "ஓகே சரி, லெட் அஸ் பி பாசிட்டிவ். இப்போது எப்படியிருக்கோ அப்படியே இருக்கட்டும். ஆனா நான் என் முடிவை சொல்லிட்டேன். நீதான் யோசனை பண்ணி சொல்லணும்" என்றான்.

"இல்லைங்க. ஜஸ்ட்... நாம பேசியிருக்கோம். அவ்வளவுதான். உங்களைப் பத்தி எனக்குத் தெரியாது. என்னைப் பத்தி உங்களுக்கு முழுமையா தெரியாது. நான் ஒரு நல்ல கம்பெனின்னு மட்டும்தான் சொல்லியிருக்கேன். எங்கேன்னு கூட நான் சொல்லலை. ஏன் சொல்லலைன்னு யோசிங்க" என்றாள்.

"ஆமா பெரிய சஸ்பென்ஸ் கீப்பப் பண்றே. நான்தான் என் கம்பெனிய விவரமா சொல்லியிருக்கேனே. நீ வேண்ணா வந்து ஒரு நாளைக்குப் பாரு" என்றான்அவன்.

அவள் "நான் வந்து பார்த்துட்டேங்க" என்றாள்.

"அப்படியா? எப்போ வந்தே? எனக்குத் தெரியலையே? வந்து என்கிட்ட பேசியிருக்கலாமே" என்றான்.

"அது இருக்கும் - பத்து இருபது நாள். நான் உங்க ஆஃபீஸுக்கு வந்தேன். அங்கே எனக்கு வேண்டியவங்க ஒருத்தங்க இருக்காங்க. ஒரு லேடி. அவங்களைப் பார்க்கற மாதிரி வந்து உங்களை பார்த்துட்டுத்தான் வந்தேன்" என்றாள்.

"அப்படியா? யாரு அவங்க?" என்றான்.

"அதை சொல்லிட்டா எல்லாம் தெரிஞ்சிடுமில்லே? வேண்டாம். அவங்களையும் நான் காட்டிக் கொடுக்க விரும்பலை" என்றாள்.



"அட என்னடா இது? ஏதோ கொள்ளை . . க்கிற கூட்டத்துல இருக்கறவனைக் காட்டிக் கொடுக்கற மாதிரி பேசிட்டிரு..கிறே?" என்றான்.

"இல்லைங்க, இது உங்களுக்குப் புரியாது" என்றாள் அனு.

"என்னத்தைப் புரிஞ்சு என்ன பண்றதுன்னு எனக்குத் தெரியலை. ஏன் நீ வந்து பார்த்தேன்னு எனக்குச் சொல்லலை?"

"அதுவும் ஒரு காரணமாத்தான்" என்றாள்.

"இங்க பாரு. இப்படியே சஸ்பென்ஸ் மேல சஸ்பென்ஸ் வச்சிட்டிருந்தீன்னா லெட் அஸ் ஸ்டாப் திஸ். இதோட நிறுத்திக்கலாம். நான் இனிமேல் உன்னைக் கூப்பிட மாட்டேன். பேச மாட்டேன்." என்றான் அவன்.

அவள் "ப்ளீஸ் இமயன், புரிஞ்சுக்கோங்க. சின்னப்பிள்ளை மாதிரி அடம்பிடிக்காதீங்க. யூ ஆர் எ மெச்சூர்ட் பெர்சன். உங்க பர்சனாலிட்டிக்கும் உங்களோட ஜாப் நேச்சருக்கும் உங்களுடைய குடும்பத்துக்கும் நான் ஏத்தவ இல்லை. புரிஞ்சுக்குங்க." என்றாள்.

"இன்னொரு தடவை இந்தப் பல்லவியைப் பாடாதே! மே பி இன்னும் கொஞ்ச நாள் வேண்ணா டைம் எடுத்துக்கலாம். இன்னும் ஒரு திரி ஃபோர் மந்த்ஸ் டைம் எடுத்துக்கலாம். இதே மாதிரி நாம பழகிட்டு இருக்கலாம். அப்புறமா நாம டிசைட் பண்ணிக்கலாம்" என்றான்.

அவள் மறுபடியும் பெருமூச்சு விட்டுவிட்டு "இந்த நினைப்பை முளையிலயே கிள்ளி எறியறதுதான் நல்லது. அப்புறமா நாளைக்கு ஏதாவது பிரச்சினை வந்து யு ஷுட் நாட் பிளேம் மி. இது என்னோட ஃபால்ட்டா இருக்காது" என்றாள்.

"ஓகே, ஓகே. முழுப் பொறுப்பையும் நான் எடுத்துக்கறேன்"

"நாம இப்படியே த்ரீ ஃபோர் மந்த்ஸ் கழிப்போம். ஆன் ஒன் கண்டிஷன்" என்றாள் அவள்.

"நேரம்டா. பொண்ணுங்க எல்லாம் நல்ல பாய் ஃப்ரெண்ட் கிடைக்காதா? நல்ல புரொபோஸல் வராதா அப்படின்னு ஏங்கிட்டு இருக்கற காலத்துல நீ கண்டிஷன் போட்டுட்டு இருக்கறே?" என்றான்.

"எல்லாம் உங்க நல்லதுக்காகத்தான் நான் சொல்றேன்" என்றாள் அவள் சற்று முறுக்காகவே.

"சரிங்க தேவியாரே, சொல்லுங்க" என்றான்.

"ப்ளீஸ், இந்த மாதிரி கேலி பண்ணாதீங்க. இது நாள் வரைக்கும் எப்படிப் பேசினீங்களோ அப்படிப் பேசுங்க" என்றாள் அவள்.

அவனுக்கு சற்று முகத்தில் அடித்தாற் போல் இருந்தது. இருந்தாலும் "ஓகே ஓகே சொல்லு" என்றான்.

"த்ரீ மந்த்ஸ் கழிச்சு என்னை நீங்க ஒரு தடவை நேர்ல மீட் பண்ணிப்

பேசினதுக்கு அப்புறம்தான் எந்த முடிவும் எடுக்கணும். அதுவரைக்கும் எந்த முடிவும் எடுக்கக் கூடாது. ப்ராமிஸ்'' என்றாள்.

''என்னப்பா இது? கரும்பு தின்னக் கூலியா? மூணு மாசம் கழிச்சாவது பார்க்கலாம்னு சொல்றியே அப்புறம் என்ன?''

''சரி, இனிமேல் வழக்கம் போல ஜெனரல் டாபிக் மட்டும்தான் பேசணும். வேற எதுவும் பேசக்கூடாது'' என்றாள் அவள்.

அவன் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு ''அது கொஞ்சம் கஷ்டம்தான். ஒண்ணும் இல்லாததுக்கு இது எவ்வளவோ தேவலைதான். சம் திங் இஸ் பெட்டர் தேன் நத்திங்'' என்றான்.

அவளையும் மீறி அவளுக்கு சிரிப்பு வந்தது. ''அப்பாடா, இவ்வளவு நேரம் ஆச்சா சிரிக்கறதுக்கு?'' என்று சொல்லிவிட்டு ''ஓகே, எதைப்பத்தியும் ஓர்ரி பண்ணிக்காதே. குட் நைட்'' என்று ஃபோனை வைத்தான்.

அவள் செல்ஃபோனை எடுத்துக் கொண்டு தன்னுடைய அறைக்குப் போனாள்.

அவர்கள் சிறிய குடும்பம். மூன்றே அறைகள் கொண்ட வீடு என்றாலும் ஒரு பக்க வாட்டு அறை இருந்தது. அதைத் தவிர ஒரு சின்ன அறை இருந்தது. அந்த சின்ன அறையை அவள் பயன்படுத்திக் கொள்ளுவாள். பெரிய அறையை பெற்றோர்கள் பயன்படுத்திக்கொள்ளுவார்கள். அதைத் தவிர ஒரு சின்ன சமையல் அறையும் ஒரு உள் அறையும் இருந்தது. அண்ணன் திருமணமாகி தனியாக இருந்தான்.

அனுஸ்ரீ ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாள். வீட்டில் இருந்தது ஒரே பீரோ. அதிலே ஒரு கண்ணாடி பதித்திருந்தது. அதுவும் கூட அவள் வேலைக்குப் போன பின்னால்தான் வாங்கியது. அதன் முன்பாக நின்று தன் முழு உருவத்தையும் பார்த்துக் கொண்டாள்.

அவள் முகம் வாடிப்போனது.

அதேபோல ஒரு முறை திரும்பி கழுத்தைத் திருப்பி முதுகைப் பார்த்துக் கொண்டாள்.

நீளப் பின்னல். அளவான இடை. அழகான உடலமைப்பு. அதிலெல்லாம் எந்தக்குறையும் இல்லை. அப்படி இருக்கையில் ஒரே ஒரு விஷயம் மட்டும் அவள் மனதை உறுத்தியது.

இமயவரம்பன் பேசுவதெல்லாம் அறிவுபூர்வமாகப் பேசுகிறான். ஆனால் தன் பக்கத்தில் இருக்கக் கூடிய பெரிய குறையை அவன் ஏற்றுக் கொள்ளுவானா என்பது அவளுக்கு சந்தேகமாக இருந்தது.

இதோடு இந்த நட்பைத் துண்டித்துக் கொண்டு விட்டால் நல்லதாக இருக்குமோ என்று அவளுடைய ஆழ்ந்த அறிவு சொன்னது. ஆனால்,



இமயவரம்பன் பேசுகிற பேச்சும் அவன் அனுப்புகிற செய்திகளும் அவளுடைய அறிவுக்குத் தீனி போடுபவையாக இருந்தன.

இன்றைக்கு மட்டும் தான் அவன் இப்படிப் பேசியிருக்கிறான். கடந்த மூன்று மாதங்களில் ஒருமுறைகூட அவன் முறை தவறிப் பேசியதில்லை. ஒரு நல்ல நண்பனாக - தரமான நண்பனாகத்தான் அவளிடத்திலே அவன் நடந்து கொண்டிருந்திருக்கிறான். அதனால்தான் அவளுக்கு இமயவரம்பனின் நட்பை இழக்க விருப்பம் இல்லை.

நட்பு அடுத்த கட்டத்துக்குப் போய்விட்டதாக இமயவரம்பன் நினைக்கிறான். அது அடுத்த கட்டத்துக்குப் போகாமல் இருந்தால்தான் அந்த நட்பே பாதுகாக்கப் படுமோ என்ற கவலையில் அனுஸ்ரீ இருப்பது அவனுக்குப் புரியவில்லை.

ஆனால், ஒரு புறத்தில் அவளுடைய பெண் மனது அவனது குரலில் இன்றைக்குத் தெரிந்த வித்தியாசத்தை ஒரு பரவசத்தோடுதான் ஏற்றுக் கொண்டது. அந்தக் குரலிலே இருந்த குழைவும் அதிலே தெரிந்த ஒருநேசமும் அன்பும் அவளைக் கொஞ்சம் புரட்டிப் போட்டன என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால், அவள் பத்து இருபதுநாட்களுக்கு முன்பாக அலுவலகத்திற்குப் போய் பார்த்த காட்சி இப்பொழுது நினைவுக்கு வந்தது. அவளது கல்லூரித் தோழி பிந்து அந்த அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறாள்.

தன்னுடைய அலுவலகத்தைப் பற்றி இமயவரம்பன் சொன்னவுடனேயே அங்கே போய் பார்த்துவிடவேண்டும் என்று அனுஸ்ரீ முடிவெடுத்துக் கொண்டாள். பல நாட்களாக பழக்கம் விட்டுப் போயிருந்த பிந்துவினுடைய எண்ணைத் தொடர்பு கொண்டு ஒன்றிரண்டு முறை பேசிவிட்டு ஏதோ அவளைப் பார்ப்பது போல அங்கே போனாள்.

பேச்சுவாக்கிலே விசாரிப்பது போல இமயவரம்பனைப் பற்றி விசாரித்தாள். பிந்து ''அதோ அங்கே இருக்கிறாரே அவருதான்'' என்று காட்டினாள்.

''எதுக்குடி கேட்கறே?'' என்றாள்.

''எங்க உறவுக்காரங்கள்லே ஒரு புரொபோஸல் வந்திருக்கு. அவங்க நேரடியா வந்து பார்க்கறதுக்கு கஷ்டப்பட்டு என்னை அனுப்பிச்சாங்க'' என்றாள் அனுஸ்ரீ.

''ஓஹோ, இந்த வேலையெல்லாம் பார்க்கறியா?'' என்றாள் பிந்து. ஆனால் ஆளைக் காட்டினாள்.

அப்போது தன்னுடைய சுழல் நாற்காலியை ஒரு சுற்று சுற்றிவிட்டு யாருக்கோ அவன் ஆணையிடுவது போல ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான்.

பார்த்த கணத்தில் அனுஸ்ரீ துணுக்குற்றுப் போனாள். ஏனென்றால் இமயவரம்பன் அவள் எதிர்பார்த்ததற்கு நேர் மாறாக - நல்ல அழுத்தமான தோற்றம் உடையவனாக இருந்தான். நல்ல உயரம். தீர்க்கமான மூக்கு. நல்ல களை. அரும்பு மீசை. அதற்குள்ளே யாரோ ஒருவர் அவனைப் பார்க்க வந்தார்கள்.

அவன் ஒத்த வயதுக்காரர். அதே அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் போலும். அவர்களிடத்திலே அவன் வாய்விட்டு சிரிப்பதைப் பார்த்தாள். அவ்வளவு அழகாக இருந்தது. பார்த்தவுடனே அனுஶ்ரீயின் முகம் துணுக்குற்றது.

பார்த்துக் கொண்டிருந்த பிந்து கேட்டாள். ''ஏய் என்ன? எப்படி பர்சனாலிட்டி?'' என்றாள்.

''கொஞ்சம் தூக்கலாகத்தான் இருக்கு'' என்றாள் அனுஶ்ரீ.

''ஏண்டி... இப்படி ஆள் கிடைக்க அவங்கவங்க அலையறாங்க. பெஸ்ட் கேரக்டர் தெரியுமா?'' என்றாள் பிந்து.

''அப்படியா? அப்ப என்ன சொல்லட்டும் அவங்களுக்கு?'' என்றாள்.

''இப்படிப் பையன் கிடைக்கவே கிடைக்காது. கிடைச்சா லட்டு மாதிரி கொத்திட்டு போகச் சொல்லு - யாருக்கு புரொபோஸல் வந்திருக்கோ அவங்களுக்கு'' என்றாள் பிந்து.

''சரிப்பா, சொல்லிடறேன்'' என்று சிரித்துக் கொண்டே வெளியே வந்த அனுஶ்ரீ முகம் வாடிப் போய்த்தான் வீடு வந்து சேர்ந்தாள்.

இப்பொழுதும் தான் பார்த்த அந்தக் காட்சி நினைருக்கு வர முகம் வாடிப்போனாள். வாடிப்போனது மட்டும் அல்லாமல். தன் படுக்கையில் குத்துக்காலிட்டு அமர்ந்து கொண்டு முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு தேம்பி அழலானாள்.

## 6



அந்த வாரப் பத்திரிகையில் வந்திருந்த அழகான ஓவியங்களை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான் இமயவரம்பன்.

ஒரு இளம் பெண். பழைய காலத்தைப் போல பாவாடை அணிந்த பெண். கோலம் போடுவது போல, அடுப்பு வைத்து சமைத்துக் கொண்டிருப்பது போல, வீட்டு முற்றத்திலே சாய்ந்து கொண்டிருப்பது போல, என்று வித விதமாக வரையப்பட்டிருந்தன அந்த ஓவியங்கள்.

கிட்டத்தட்ட புகைப்படம் எடுத்ததைப் போல அந்த ஓவியங்கள் வரையப்பட்டிருந்த விதத்தை அவன் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். எவ்வளவு அழகான பெண் என்று ரசனையின் காரணமாக அவனுடைய மனது பூரித்துப் போனது.

உடனேயே இந்த உணர்வை அனுஶ்ரீயிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. உணவு இடைவேளையின் போது அலுவலகத்தினுடைய பின்பக்கத்தில் நின்று கொண்டு அவன் அனுஶ்ரீயை அழைத்தான்.



''அனு, இன்னைக்கு அந்த வாரப் பத்திரிகையில வந்திருக்கிற படங்களைப் பார்த்தீங்களா?'' என்று கேட்டான்.

''ஆமாங்க, நானும் பார்த்தேன். உங்களுக்கு இந்த ஓவியங்கள் ரொம்பப் பிடிக்குமே. உங்களுக்கு சொல்லலாம்னு நினைச்சுட்டிருந்தேன். நான் ரெகுலரா அந்தப் பத்திரிகை வாங்கறேன். ஆனால் நீங்க வாங்கறீங்களோ என்னமோ தெரியலை. சொல்லணும்னு நினைச்சேன்'' என்றாள் அவள்.

''பார்றா, ரெண்டு பேத்துக்கும் டேஸ்ட் ஒண்ணா இருக்கு. பார்த்தீங்களா'' என்று சிலாகித்துக் கொண்டான் இமய வரம்பன்.

அவள் அந்தப் பக்கம் சிரித்தாள். ''உங்க சிரிப்பு அதுக்கு மேல அழகா இருக்குங்க'' என்றான் இமயவரம்பன்.

சட்டென்று அவள் சிரிப்பை நிறுத்திக் கொண்டாள்.

''போச்சுடா, அது ஏங்க நான் சொன்னவுடனே டப்புன்னு நிறுத்திக்கறீங்க'' என்று கேட்டான்.

அவள் அதற்கு பதில் பேசவில்லை.

''ஓஹோ, வெட்கம் வந்துடுதோ. இந்த நேரத்துல நான் எதிர்க்க இருந்து பார்க்காம போனேனே'' என்றான்.

''அவ அந்தப் படத்துல அடுப்பு கிட்டே உட்கார்ந்து சமைக்கிற மாதிரி. பார்த்தீங்களா?'' என்றாள்.

அவள் பேச்சை மாற்றுவது தெரிந்த போதும் மெல்ல சிரித்துக் கொண்டு ''ஆமாமாம், ரொம்ப அருமையா இருந்தது. அந்த நாலு படத்துலயும் அந்தப் பொண்ணு வேற வேற விதமா டிரெஸ் பண்ணியிருந்ததை பார்த்தீங்களா?'' என்றாள் அனுஶ்ரீ.

''ஆமாம், பாவாடை தாவணிதான்... ஆனா-'' என்று அவன் இழுக்க

''ஓஹோ, அதையெல்லாம் நீங்க கவனிக்கிறீங்களா?'' என்றாள்.

''ஏன் கவனிச்சா என்ன? ஒரு ஓவியன் இவ்வளவு தத்ருபமா வரைஞ்சிருக்காரு அப்படிங்கும்போது எல்லாத்தையும்தானே கவனிப்போம்'' என்றான் அவன்.

''அவ்வளவுதானா?'' என்றாள் அனுஶ்ரீ.

''பின்னே வேற என்ன நினைச்சீங்க? ஏதோ அந்தக் காலத்துல ஒரே ஒரு முடி கிடைச்சவுடனே அதை வச்சுக்கிட்டு இந்த முடியை வச்சுப் பார்க்கும் பொழுது இந்தப் பொண்ணு ராஜகுமாரியாத்தான் இருப்பான்னு ஏதோ இளவரசன் முடியை வச்சுட்டு வரைஞ்சு தேடிப்போன மாதிரி கதையெல்லாம் இருக்கே. அதுமாதிரி நானும் இந்த ஓவியத்தைப் பார்த்து இதுக்கு மாடலா நின்ன பொண்ணு யாருன்னு தேடிக்கிட்டு போய்...'' என்று அவன் இழுக்க...

''போதும் போதும் ரொம்பத்தான் சுத்தறீங்க'' என்றாள் அனுஶ்ரீ.

''பின்னே என்னங்க? ஒரு அழகான விஷயத்தை ரசிச்சா உடனே அந்த ஆண் வேற மாதிரிதான் இருப்பான்னு நீங்களெல்லாம் நினைச்சுப்பீங்களா?'' என்றான்.

''சாரிங்க, நான் அப்படி நினைக்கலை, பரவாயில்லையே டிரஸ் கலரையெல்லாம் நோட் பண்ணியிருக்கீங்களேன்னுதான் நினைச்சேன்'' என்றாள் அனுஸ்ரீ.

''ஆமாங்க, அழகான அழகு. இதுல பார்த்தீங்கன்னா புள்ளி வச்ச காட்டன் டிரஸ். இன்னொண்ணுல பட்டுப் பாவாடை. பார்த்தாலே தெரியிற மாதிரி என்ன அழகா வரைஞ்சிருக்காரு பார்த்தீங்களா? நல்ல ரசனைங்க அந்த ஓவியருக்கு'' என்றான் அவன்.

''ஆமாங்க'' என்றாள் அவள்.

பிறகு மெதுவாக அனுஸ்ரீ ஒரு மாதிரி குரலில் ''ஏங்க, உங்களுக்கு அழகுன்னா ரொம்பப் பிடிக்குமா?'' என்று கேட்டாள்.

''ஏங்க... அழகு பிடிக்காதவங்க யாராவது இருப்பாங்களா? ஆண்டவன் மனுஷனைப் படைச்சிருக்கறதே அழகை ரசிக்கறதுக்குத்தான். எத்தனை அழகு கொட்டிக் கிடக்கிறதுன்னு அந்தக் காலத்துல பாட்டு கேட்டிருக்கீங்களா? அவ்வளவு ஏங்க... 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா' அப்படின்னு பாரதியார் பாடலை?அழகை ரசிக்கணுங்க. எங்கே அழகு இருந்தாலும் ரசிக்கணும்'' என்றான் அவன்.

அவள் மவுனமாக கேட்டுக் கொண்டாள்.

''என்ன பேச்சைக் காணோம்?'' என்றான் இந்தப் புறம் இருந்து.

''இல்லை, நீங்க பேசறதே அழகா இருக்கு. அதான் கேட்டுட்டு இருக்கேன்'' என்றாள்.

''ஒண்ணு சொல்றேன். கேளுங்களேன். எங்க வீட்ல ஒரு சின்ன தோட்டம் வச்சிருக்கோம்.. முன்னாடி கொஞ்ச இடம் பின்னாடி கொஞ்ச இடம். தோட்டம்னு சொல்ல முடியாது. முன்னாடி ஒரு நாலைஞ்சு செடி பின்னாடி நாலஞ்சு செடி இருக்கும்னு வச்சுக்கங்களேன்.

எங்க வீட்ல அழகான ஒரு பச்சைக்கலர் பட்டாம் பூச்சி. ரெகுலரா வரும்'' என்றான் அவன்.

''ம்...'' என்றாள் அவள்.

''அந்த பச்சைக் கலர் பட்டாம்பூச்சி ப்ளெய்ன் கலராதான் இருக்கும். ரெகுலரா வரும். அப்புறம் இன்னொரு பட்டாம் பூச்சி - அதோட இறக்கையைப் பார்த்தீங்கன்னா அவ்வளவு அருமையான டிசைன்ஸ் - அது எப்படித்தான் கடவுள் ஒரு சின்ன வட்டம் அதுக்குள்ள ஒரு புள்ளின்னு படைச்சிருக்கானோ? அற்புதங்க'' என்றான் அதனை ரசித்து.

''ம்ஹூம். பட்டாம் பூச்சியை ரசிக்கறதைத் தவிர வேற வேலை?'' என்று அவள் இழுக்க...



''வேற வேலை நிறைய எங்களுக்கு இருக்கு. அதுக்கு நடுவுல இதையும் பார்ப்போம்'' என்றான் அவன்.

''ம்... கலா ரசிகர்தாங்க நீங்க!'' என்றாள் அவள்.

''அது யாருங்க கலா?'' என்றான் அவன்.

''ஐயே... இது மொக்கை ஜோக்குங்க'' என்றாள் அனுஸ்ரீ.

''அனுஸ்ரீயோட ரசிகர்ன்னு சொல்லியிருந்தீங்கன்னா கூட ஓகேன்னு விட்டிருப்பேன். கலா - ம்ஹூம் அது சரிவராதுங்க'' என்றான்.

அவள் அந்தப் பக்கம் சிரித்தாள்.

''இருங்க, நான் இன்னும் முடிக்கலை'' என்றான் அவன்.

''சரி சொல்லுங்க. சாப்பிட்டாச்சா?'' என்றாள் அவள்.

''சாப்பாடு ஒரு பக்கம் கிடக்குதுங்க. இந்தப் பேச்சு எவ்வளவு சுவாரசியமா இருக்கு. சாப்பாட்டை வேற ஞாபகப்படுத்திட்டு'' என்று கடுப்பானான்.

''ஓகே, ஓகே, என்ன சொல்ல வந்தீங்களோ சொல்லுங்க'' என்றாள் அவள்.

''அப்புறம் குறிப்பிட்ட சில பட்டாம் பூச்சிதான் எங்க ஏரியாவுல சுத்திட்டு இருக்குமா? அப்ப எனக்கு டவுட். பட்டாம் பூச்சியெல்லாம் ஏரியா பிரிச்சுக்குமோ அப்படின்னு. ஆனா உண்மையாவே அப்படித்தானாம். ஒரு பத்திரிகையில படிச்சேன். ஒரு குறிப்பிட்ட ஏரியாவுக்கு வர்ற பட்டாம் பூச்சி அந்த ஏரியாவுக்குத்தான் வருமாம். வேற பட்டாம் பூச்சி வந்தா விரட்டிடுமாம். இது எப்படி இருக்கு?'' என்றான்.

அவள் சிரித்தாள். ''இதுக்கெல்லாம் சயின்டிஃபிக்கா விளக்கம் இருக்கா?'' என்றாள்.

''இங்க பாருங்க, அழகு சம்பந்தப்பட்ட விஷயங்கள்ல சயின்ஸைக் கொண்டு வராதீங்க. சயின்ஸ் எல்லாத்தையும் கூறு போட்டு அலசி போஸ்ட் மார்டம் பண்ணிடும்ங்க'' என்றான் அவன் வேகமாக.

அவன் குரலைக் கேட்ட அவள் ''எதுக்கு இவ்வளவு டென்ஷன் ஆகறீங்க?'' என்றாள்.

''பின்னே என்னங்க? ரொம்ப அழகான விஷயம் பேசிட்டிருக்கேன். அதுக்கு நீங்க ப்ரூப் கேட்கறீங்க'' என்றான்.

''ஆமாங்க, எங்க வீட்டுக்குப் பக்கத்துல கூட நேத்து ஒண்ணு நடந்ததே?'' என்றாள் அவள்.

''சொல்லுங்க'' என்றான்.

''இல்லை... ரெண்டு பச்சைக் கிளிங்க வந்து - எங்க வீட்டுக்கு பின்னாடி ஒரு கொய்யா மரம் இருக்கு. அதுல உட்கார்ந்துச்சு'' என்றாள் அவள்.

''அந்த மேல் கிளையில உட்கார்ந்துட்டு கீழ்க் கிளையில தொங்கற அந்த

கொய்யாப் பழத்தை அழகா கொத்தி கொத்தி கொத்தி ஒரு ஐஸ்கீரிம் கப் மாதிரி பண்ணிடுச்சு'' என்றாள்.

''ஓஹோ, அப்ப உங்களுக்கும் வேற வேலை...'' என்று இழுக்க

''எங்களுக்கும் வேற வேலையெல்லாம் இருங்குங்க. ஆனாலும் இந்த ரசனை சம்பந்தமான விஷயங்கள் வந்தால் கொஞ்ச நேரம் வேலையை விட்டுட்டுப் பார்க்கறதுதான்'' என்றாள் அனுஸ்ரீ.

''தட்ஸ் குட்'' என்றான் ஆழமான குரலில். ''அப்புறம் வேற என்னவெல்லாம் ரசிப்பீங்க?'' என்றான்.

''ஹலோ, நீங்க சாப்பிட்டாச்சா,இல்லையா? அதைச் சொல்லுங்க முதல்ல'' என்றாள்.

''அதெல்லாம் சாப்பிட்டுட்டேங்க. இன்னைக்கு புளி சாதம் கொடுத்திருந்தாங்க அம்மா. கொட்டிக்கிட்டாச்சு. நீங்க?'' என்றான்.

''நானும் இன்னிக்கு புளி சாதம் தான் கொண்டு வந்தேன்'' என்றாள் அவள்.

''சரி, இதுலேயும் ஒரே மாதிரியே!'' என்றான் அவன்.

''ம், எதுக்கு சாப்பாட்டை பத்தி கேட்டீங்க ?''என்றான்.

''இல்லை சாப்பிட்டுட்டா நிம்மதியா பேசலாமே'' என்றாள்.

''அப்ப சரி சொல்லுங்க, சொல்லுங்க'' என்று அதற்கு மேலும் கவிதையைப் பற்றிச் சொன்னாள்.

''நான் போன மாசம் ஒரு கவிதை படிச்சேங்க'' என்றான் அவன்.

''சொல்லுங்க'' என்றாள் அவள்.

''இல்லை இந்த வரிகள் மறந்து போச்சு. விஷயம் இதுதான். அதாவது கூட்டமாக இருந்தது. தரிசனம் பார்க்கறதுக்காக குழந்தையைத் தூக்கி தோளில் வைத்துக் கொண்டான் ஒருவன். கடவுளுக்கு கிடைத்தது குழந்தையின் தரிசனம்னு முடிச்சிருந்தாரு கவிஞர். ரொம்ப அருமை'' என்றான்.

''கடவுளுக்குக் கிடைத்தது தரிசனம். சூப்பர்ங்க.'' என்றாள் அனு.

''பின்னே? குழந்தயும் கடவுளும் ஒண்ணுன்னு எவ்வளவு அழகாக சொல்றார் பாருங்க'' என்று இரண்டு பேருமாக மாற்றி மாற்றி ரசித்த விஷயங்களைப் பேசிக் கொண்டார்கள்.

அரை மணி நேரம் ஓடியது. அதற்குப் பிறகு மெதுவான குரலில் 'அனு...' என்று அழைத்தான். அந்தக் குரலிலே தெரிந்த வித்தியாசம் அவளுக்கு மூச்சு முட்டச் செய்தது.

''ம்..''. என்றாள்.

''நம்ம ரசனையெல்லாம் எவ்வளவு அருமையா ஒத்துப் போகுது. ஏங்க அனு?'' என்றான்.



''ஆமாங்க'' என்றாள் அவள்.

''அழகை ரசிக்கறதுங்கறது எல்லாருக்கும் வராதுங்க. அப்படியே அழகை ரசிச்சாலும் அதை ஒரு தவறான கோணத்துலதான் எடுத்துப்பாங்க. ஆனா நீங்க பர்வாயில்லை'' என்றான் அவன் பாராட்டும் விதமாக.

''ஆமாங்க, வாழ்க்கையே அழகை ரசிக்கறதுக்குத்தான். நீங்களே சொல்றீங்களே?'' என்று ஒத்து ஊதினாள் அவள்.

அதற்குப் பிறகும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு அவன் மறுபடியும் மெதுவாக ''ஏங்க அனு, இப்படிப் பேசிட்டே இருந்தா காலம் போறதே தெரியாதே? ஏங்க, நாம ஒரு முறை சந்திக்க கூடாதா? ஏன் வேண்டாங்கறீங்க?'' என்றான் அவன்.

அவன் குரலில் தெரிந்த ஏக்கத்தைப் பார்த்தவுடன் அவள் ஒரு பெருமூச்சு விட்டாள். ''நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. நேர்ல சந்திச்சா இந்த சுவாரசியம் போயிடுமோன்னு எனக்கு கவலையா இருக்கு'' என்றாள் அனுஸ்ரீ.

''ஏங்க... நேர்ல சந்திச்சுட்டா இன்னும் நாம தீவிரமா பேசிக்கலாம். இந்த மாதிரி இல்லாம நல்லா ஒரு ரெண்டுமணிநேரம் கூட உட்கார்ந்து பேசலாமே?'' என்றான்.

''பேசலாம் தான். நான் கூட... இந்த வாரம் ஒரு அருமையான நாவல் படிச்சிட்டிருக்கேன். அதைப் பத்தி உங்ககிட்ட சொல்லணும்னு நினைச்சேன்'' என்றாள் அவள்.

''நானும் சயின்ஸ் ஃபிக்ஷன் ஒண்ணு படிச்சிட்டு இருக்கேன். அதைப் பத்தி உங்க கிட்ட சொல்லணும்னு நினைச்சுட்டு இருக்கேன்'' என்றான்.

''ஆமா... எப்ப சொல்றது? எங்கே சந்திக்கலாம்?'' என்றான் இமயவரம்பன்.

''ம்ஹூம். ஆறு மாசம் கெடு. மறந்துடாதீங்க'' என்றாள் அவள்.

''சரிங்க. நாலு மாசம் முடிஞ்சிருச்சு. இன்னும் ரெண்டு மாசம்தானே! பார்த்துடலாம். அதுக்குள்ள என்னென்ன படிக்க முடியுதோ படிச்சு வைங்க. என்னென்ன ரசிக்க முடியுதோ ரசிச்சு வைங்க. ஆனா எல்லாத்தையும் மறக்காம குறிச்சு வைங்க. அப்பதான் நாம ரெண்டு பேரும் பேசிக்கறது நிறைய இருக்கும்'' என்றான்.

''ம்... ம்... இதுக்காக ஒரு பெரிய நோட்டே வாங்கி வச்சிருக்கேன்'' என்று அவள் சிரித்தாள்.

''ஐ ஆம் சீரியஸ்ங்க. நிறைய விஷயங்கள் நமக்குள்ளே பேசறதுக்கு இருக்கு'' என்றான் அவன்.

''பேசிடலாங்க. எல்லாம் பேசிடலாம்'' என்று சிரித்து விட்டு. ''அப்ப சரி. லஞ்ச் டைம் முடிஞ்சிருச்சு. போனை வைக்கட்டுமா?'' என்றாள் அவள்.

''வைக்கறேன்கிறீங்களா? அதுக்குள்ளே ஆஃபனவர் முடிஞ்சிருச்சா?'' என்றான் அவன். ''அனு, நிஜமாவே அனு... ரெண்டு மூணு நாளைக்கு உங்ககிட்ட

பேசாம இருந்தேன்னு வச்சுக்கங்க... எனக்கு பைத்தியமே பிடிச்சிரும் போல இருக்கு.'' என்றான்.

''அதெல்லாம் ஒண்ணும் பிடிக்காதுங்க. ரெண்டு மூணு நாளைக்கு கஷ்டமா இருக்கும். அப்புறம்... 'இப்படி ஒரு பொண்ணுகிட்ட பேசிட்டிருந்தோமா என்ன...' அப்படிங்கறது கூட மறந்து போயிடும்'' என்றாள் அவள் சீண்டும்விதமாக.

''நல்லா உதை வாங்கப் போறீங்க - இப்படி பேசினீங்கன்னா'' என்றான் அவன்.

''உதைச்சுடுவீங்களா என்ன?'' என்றாள் அவள்.

''உதைக்கமாட்டேனா என்ன? நேர்ல மட்டும் பார்த்தேன்னு வச்சுக்கங்க. நல்லா காதைத் திருகி, 'இப்படிப் பேசுவியா... பேசுவியா'ன்னு தலையில ரெண்டு கொட்டு வச்சு...'' என்று அவன் ரசனையுடன் சொல்ல அவள் சிரித்தாள்.

''எத்தனை நாளா இப்படி கனவு கண்டுட்டு இருக்கீங்களோ? ஆனா நான் அதுக்கெல்லாம் சிக்கற மாதிரி இல்லைங்க சார்'' என்றாள்.

உடனே அவன் ''அப்படியே விட்டுட மாட்டோம் மேடம். கண்டிப்பா சந்திப்போம். ரெண்டு மாசந்தான் கெடு. ரெண்டே மாசம். அப்புறம் நீங்க எங்க போயிடுவீங்க. நாங்க எங்க போயிடுவோம் பார்க்கலாம்.''

''பார்க்கலாம்'' என்று சிரித்துவிட்டு அவள் போனை ஆஃப் செய்தாள்.

ஆனால், ஃபோனை ஆஃப் செய்து விட்டு அதையே பார்த்தபடியே சற்று நேரம் கலக்கத்தோடு நின்றாள்.

அதற்குள்ளாக இங்கே இமய வரம்பன் நீண்டதொரு யோசனையில் ஆழ்ந்தான். 'கண்டுபிடிக்கறேன். உங்களைக் கண்டுபிடிக்கறது என்ன பெரிய கஷ்டமா? எங்க ஆபீஸ்ல யாரோ தெரிஞ்சவங்க இருக்காங்கன்னு சொன்னீங்களே, அது யாராக இருக்கும்?' என்று யோசித்தபடியே அனுஸ்ரீயைக் கண்டுபிடிப்பதற்கான திட்டங்களில் ஆழ்ந்தான் இமயவரம்பன் -

அந்த முயற்சியின் விளைவு எப்படி இருக்கப் போகிறது என்பதை அறியாதவனாக.

## 7



புரண்டு படுத்தான் இமயவரம்பன். உறக்கமே வரவில்லை.

'அனுஸ்ரீ ஏன் இப்படி செய்கிறாள்? சாதாரணமாக பெண்கள் இவ்வளவு பழகியதற்குப் பிறகு சந்திப்பதற்குத்தானே விரும்புவார்கள். இவள் ஏன் சந்திக்க மறுக்கிறாள்?' என்று அவனுக்கு உள்ளூர ஒரு பெரிய கேள்வி இருந்தது.

'குடும்பத்தில் ஒருவேளை இப்படி சந்திப்பதை விரும்ப மாட்டார்களோ? அதனால் தான்



இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறாளோ? என்று யோசித்துக் கொண்டிருந்தான். அனுவிடம் பேசினாலே அன்றைக்கெல்லாம் பொழுது உற்சாகமாகப் போகிறது.

ரசனைகள் ஒத்துப் போகின்றன. தான் ரசிக்கிற கவிதையை அவளும் ரசிக்கிறாள். தான் ரசிக்கிற இயற்கைக் காட்சிகளை அவளும் ரசிக்கிறாள். தன்னைப் போலவே நிறையப் புத்தகங்களை படிக்கிறாள். அறிவு ஜீவியாகத்தான் இருக்கிறாள். இருந்தும் தன்னை சந்திக்க மறுக்கிறாளே என்ன காரணம்? அவர்கள் குடும்பத்தில் ஏதாவது கஷ்டம் இருக்கும்போல் என்று பலவிதமாக யோசித்துக் கொண்டிருந்தவனுக்கு ஒரு சித்தம் தோன்றியது.

மொத்தமாக நமது அலுவலகத்தில் பத்துப் பெண்கள்தான் இருப்பார்கள். அவர்களில் அனுஸ்ரீ யாருக்கு ஃப்ரெண்ட் என்று எப்படிக் கண்டுபிடிப்பது என்று யோசித்தான். அப்போது அவன் மனத்திலே ஒரு திட்டம் தோன்றியது.

சரி இது தான் சரியான வழி - என்று முடிவு செய்து கொண்டவன் அதற்குப் பிறகு நிம்மதியாக உறங்கினான்.

உறக்கத்தில் ஏதோ ஒரு பட்டாம் பூச்சி வடிவத்தில் அவள் பறந்து வருவது போலவும், முகம் தெரியாத அந்த தோற்றத்தில் அழகிய தேவதையாக இறங்கி வந்து தன் கன்னங்களை வருடிக் கொடுப்பது போலவும் ஒரு கனவு கண்டு லயித்தான்.

தனக்குள் சிரித்துக் கொண்டான். ஆனாலும் இந்தப்பெண் ரொம்பவும் தான் பாடுபடுத்துகிறாள் என்று எண்ணிக் கொண்டான்.

பேச்சு வாக்கில் அவளைப் பற்றிய சில செய்திகளையும் அவள் வாய் உதிர்த்திருந்தது. அதில் ஒன்று அவளுக்கு நீளமான கூந்தல் என்பது. ஏதோ ஒரு நாள் ''ஏங்க நீங்க எப்படிங்க? பாப் கட்டிங்கா?'' என்று கேட்ட பொழுது ''அதெல்லாம் எங்க வீட்ல பின்னி எடுத்துடுவாங்க. நாங்களெல்லாம் பழைய பட்டிக்காடுங்க. தலையப் பின்னி நீளமா தொங்க விட்டுட்டு வரணும்'' என்றாள்.

''ஓஹோ, உங்களுக்கு நீளமான முடிதானா அப்போ'' என்று அவன் கேட்கவும் உளறி விட்டவள் போலவும் பேச்சை மாற்றிவிட்டாள்.

எனவே அவன் கனவில் வந்த பட்டாம்பூச்சி தேவதை கூட நீளமாகத்தான் முடியைத் தொங்க விட்டுக் கொண்டு வந்தது.

விழித்ததற்குப் பிறகு இமயவரம்பனுக்கு சிரிப்பாக இருந்தது. கிட்டத்தட்ட தன்னை பைத்தியம் செய்கிறாள் இந்தப் பெண் என்று தோன்றியது.

ஆனால், இன்னமும் கூட அவன் இதயாவிடம் கூட தனது நட்பைப் பற்றி சொல்லிக் கொள்ளவில்லை. அவளை நேரில் பார்க்க வேண்டும். அதற்குப் பிறகுதான் இதயாவிடம் கூட சொல்ல வேண்டும் என்று முடிவு எடுத்துக் கொண்டிருந்தான். ஆனால், அடிக்கடி செல்ஃபோனில் பேசிக் கொண்டிருக்கிறான் மகன் என்பது புரிந்த பெற்றோர்களும் ஒருவரை ஒருவர்

பார்த்துக் கொண்டு கண் ஜாடை செய்து கொள்வார்களே ஒழிய அவனிடத்தில் விசாரிக்க வில்லை.

அலுவலகத்தில் இருந்து பெண்களும் பேசுவார்கள் என்பதால் அவர்களுக்கும் எப்படிக் கேட்பது என்பது புரியவில்லை.

மறுநாள் அலுவலகத்திற்குச் சென்ற இமயவரம்பன் ஒரு வேலை செய்தான். ஒரு பதினொரு மணி வாக்கிலே அனுஸ்ரீக்கு ஃபோன் செய்தான் ''குட்மார்னிங். நான் ரொம்ப பிஸியா இருந்துட்டேன். நீங்களும் பிஸியோ?'' என்று கேட்டான்.

''ஆமாங்க இமயன். காலையிலிருந்து வேலை பயங்கரம்'' என்றாள்.

''ஏன்... எப்பவும் நடக்கிற வேலைதானே?''.

''இல்லங்க இமயன். இந்த வாரத்துல ஆடிட்டிங் வராங்களாம். அதனால எங்களைப் போட்டு பிழிஞ்சு எடுக்கறாங்க. எங்க செக்ஷன்ல நான் எல்லாம் கரெக்டா தான் வச்சிருக்கேன்'' என்றாள்.

''உங்க செக்ஷன்னா?'' என்று கேட்டான் அவன்.

''என் செக்ஷன் - அக்கவுண்ட்டிங் செக்ஷன் தான்'' என்றாள் அவள்.

''அப்படியா?'' என்று கேட்டுக் கொண்டவன், ''ஏங்க நீங்க எந்தக் காலேஜ்ல படிச்சீங்க?'' என்றான்.

அவள் சற்றும் யோசிக்காமல் தான் படித்த கல்லூரியைப் பற்றிச் சொல்லிவிட்டாள்.

அவன் அதை கவனிக்காதது போல ''எந்தக் காலேஜ்ல படிச்சா என்னங்க? விஷயத்தை வாங்கியிருக்கணும். சும்மா டெய்லி நானும் காலேஜ் போனேன்னு - புத்தகத்தை தூக்கிட்டு போயிட்டு வந்தா போதுமா? நீங்களெல்லாம் அறிவு ஜீவி. நல்லா படிச்சிருப்பீங்க'' என்று சொல்லிவிட்டு வேறு ஏதோ பேச்சை மாற்றிவிட்டான்.

அதற்குப் பிறகும் பத்து பதினைந்து நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்து விட்டு போனை ஆஃப் செய்தான். 'மாட்டினீங்களா அம்மா மாட்டினீங்களா? வரேன். கண்டே பிடிச்சிடுவேன்' என்றான்.

அதே போல அவன் தன் கீழிருக்கக் கூடிய சூப்ரண்டெண்டை அழைத்து அவரிடத்திலே ஒரு விஷயம் சொன்னான். ''சார், ஏதோ ஒரு இன்ஷுரன்ஸ் கம்பெனியோ ஏதோ சொன்னாங்க. ஏதோ டேட்டா கலெக்ட் பண்ணனும்னு சொன்னாங்க. நம்ம ஸ்டாஃப்ல பட்டதாரிகள் யார் யாரு? அப்ளிகேஷன் ஃபார்ம்ஸ் இருக்குமே... எடுத்துட்டு வாங்களேன். நான் அதைப் பார்த்து டீடெய்ல்ஸ் கொடுத்துடறேன்'' என்றான்.

''சரிங்க சார்'' என்று அங்கே பணி புரிபவர்களுடைய வேலை கேட்டு வந்திருந்த விண்ணப்பங்கள் அடங்கிய ஃபைலை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார்.



அவர்களுடைய அலுவலகத்தில் மொத்தமாக ஐம்பது பேர் இருந்தார்கள். அதிலே பத்து பேர் பெண்கள். அவர் எதிரே அமர்ந்திருக்க முதல் விண்ணப்பத்தை பார்த்து விட்டு பிறகு நிமிர்ந்து அவரைப் பார்த்து ''நீங்க ஏன் சார் இருக்கீங்க. நீங்க போய் உங்க வேலையைப் பாருங்க. நான் முடிச்சிடறேன். முடிச்சுட்டு கூப்பிடறேன்'' என்றான்.

''ஓகே சார். நானே சொல்லலாம்னுட்டு இருந்தேன். நல்ல வேளை. நீங்களே சொல்லிட்டீங்க'' என்று எழுந்து போனார்.

அவன் மெள்ள சிரித்துக் கொண்டு பெண்கள் விண்ணப்பங்களாக பார்த்துக் கொண்டிருந்தான்.

பிந்து என்ற பெயருக்குக் கீழே அவளுடைய குவாலிஃபிக்கேஷன் அவள் படித்த கல்லூரி போட்டிருந்தது. 'ஹையா' என்று அவன் உள்ளம் துள்ளிக் குதித்தது. ஆனால், இன்னும் இரண்டு மூன்று விண்ணப்பங்களைத் தள்ளியபொழுது அதிலே லெட்சுமி பிரபாவும் அதே கல்லூரியில் படித்த மாதிரி இருந்தது.

ஆனால், லெட்சுமி பிரபா கொஞ்சம் சீனியர் மாதிரி தெரிந்தது. சரி எதற்கும் இருக்கட்டும் என்று இரண்டுபேருடைய தகுதி சார்ந்த விஷயங்களையும் மனதுக்குள் குறித்துக் கொண்டு வாங்கிய உடனே கொடுத்தால் சரியாக இருக்காது என்று ஒரு இருபது நிமிடம் அந்த ஃபைலை வைத்துக் கொண்டு புரட்டிப் புரட்டிப் பார்ப்பவன் போல் நடித்து விட்டு அந்த சூப்ரண்டெண்ட்டை அழைத்துக் கொடுத்து விட்டான்.

''போதுமா சார்!'' என்றார் அவர்.

''போதும், போதும்'' என்று அவன் குறித்து வைத்துக் கொண்டான். அதற்குப் பிறகு அடுத்த நாள் பிந்து கேன்டீன் செல்லும் நேரமாகப் பார்த்து அவனும் எழுந்து போனான். ''ஹாய் பிந்து'' என்று சொல்லி விட்டு நகர்ந்தான்.

அவளும் ''ஹாய் இமயன்'' என்று கையை ஆட்டிக் கொண்டே உடன் சேர்ந்து கொண்டாள். ''என்ன ஒரு காஃபி சாப்பிடலாமா?'' என்று கேட்டான்.

''ஆஹா என்னப்பா இன்னைக்கு மழை பெய்யும் போல இருக்கு. இமயனாவது காபி வாங்கிக் கொடுக்கறதாவது'' என்று சிரித்தாள். ''அதுவும் பெண்கள் கிட்ட பேசறது ரொம்ப ஆச்சரியம்தான்'' என்றாள் பிந்து.

''ஏங்க நாங்க ஒண்ணும் சாமியார் இல்லை. அதுக்காக ரொம்ப வழியவும் மாட்டோம். ஏதோ இன்னிக்கு தோணிச்சு. உங்க கிட்ட பேசலாம்னுட்டு வந்தேன்'' என்றான்.

அவளோடு போய் காபி சாப்பிடுவதற்காக கேன்டீனில் அமர்ந்தார்கள். ''வடை எதுவும் சாப்பிடறீங்களா?'' என்றான்.

''வடையா? நான் ஆயில் ஃபுட் எடுக்கறது இல்லை. பரவாயில்லை என்னைக்காவது ஒரு நாளைக்கு சாப்பிட்டா என்ன? அதுவும் நீங்க வாங்கித்

தர்றீங்க. செக்ஷன் மேனேஜர்'' என்று சிரித்தாள் அவள்.

''ஏங்க எனக்கு கஞ்சப் பிரபுன்னு பட்டம் குடுத்திடுவீங்க போல இருக்கு'' என்றான் இமயன்.

''இல்லை, இல்லை. நீங்க யாரையும் பர்பஸா கூப்பிட்டுப் போய் வாங்கிக் கொடுத்த மாதிரி தெரியலையே?'' என்றாள் பிந்து.

அவன் சிரித்தான். ''ரகசியத்தைக் கண்டு பிடிச்சுட்டீங்களே?'' என்றான்.

''என்னங்க ரகசியம் அது?'' என்றாள் பிந்து.

''அது ஒண்ணும் இல்லைங்க. ஒரு நாளைக்கு காஃபி வாங்கித் தரேன்னு கூப்பிட்டுப்போவாங்க. அடுத்த நாள் நாம வாங்கித் தரணும். அது கூட பரவாயில்லை, அப்படி பேசிட்டிருக்கும் போது ஆபீஸ் சீக்ரெட்ஸ் ஏதாவது நம்மளை அறியாம வந்திடுச்சுன்னு வச்சுக்கோங்க...வம்பு. அதுக்குத்தான் எப்பவுமே கொஞ்சம் டிஸ்டன்ஸ் வச்சுக்கறது.''

''ஆனாலும், நீங்க ரொம்ப சின்சியர்ங்க'' என்று சிரித்தாள் பிந்து.

''அது சரி... அந்த மாதிரி சுத்தினதெல்லாம் காலேஜோட போச்சுங்க. எனக்கு காலேஜ்ல கதிரேசன்னு ஒரு ஃப்ரெண்டு இருந்தான். அப்புறம் சுந்தர்னு ஒரு ப்ரெண்டு இருந்தான். இரண்டு பேரு கூட சுத்தின சுத்தெல்லாம் சொல்லவே முடியாதுங்க. அதுவும் டேஸ்ட் ஒரே மாதிரி இருக்குமா... எனக்கு கவிதைன்னா புடிக்கும், புத்தகம் படிக்கறதுன்னா புடிக்கும். இயற்கையை ரசிக்கறதுன்னா புடிக்கும் - அவனுங்களுக்கும் அது பிடிக்கும். அதனால ரொம்ப என்ஜாய் பண்ணினோம்''

அவள் கண்களை அகல விரித்துக் கொண்டு பார்த்து விட்டு. ''அப்படியா...? நீங்க ஆனா ஆபிஸ்ல ஸ்ட்ரிக்ட்டா உட்கார்ந்திருக்கறதைப் பார்த்தா இந்த ரசனையெல்லாம் உங்களுக்கு இருக்கற மாதிரியே தெரியலையே?'' என்றாள்.

''ஏங்க இப்படி டேமேஜ் பண்றீங்க? எனக்கு இப்படியெல்லாம் ரசனை இருக்குன்னு எழுதி ஒட்டிட்டா நடக்க முடியும்?''.

அவள் சிரித்தாள்.

''ஏங்க...! உங்களுக்கு அந்த மாதிரி ஃப்ரெண்ட்ஸெல்லாம் யாரும் காலேஜ்ல இருந்ததில்லையா?'' என்று கேட்டான்.

''இருந்தாங்க இருந்தாங்க... எனக்கும் ஒரு ரெண்டு மூணு ஃப்ரெண்ட்ஸ் இருந்தாங்க. முக்கியமா அதுல அனுஸ்ரீன்னு ஒரு ஃப்ரெண்டு இருந்தா. இப்படித்தான்... இதே மாதிரிதான்... உங்களை மாதிரிதான்!'' என்றாள்.

''ஓஹோ'' அசுவாரசியமாக கேட்டுக் கொண்டவன் போல ''அவங்க இப்ப இந்த ஊரில் இல்லையோ?'' என்றான்.

''இருக்கா இருக்கா. இந்த ஊர்ல தான் இருக்கா.''

''அப்ப நீங்க அடிக்கடி சந்திக்கறது இல்லையாக்கும்?'' என்றான் அவன்.



''எங்க சார் நேரம்? எப்பவாவது ஃபோன்ல பேசுவோம். அதுவும் அவளுக்கு இன்னும் கல்யாணம் ஆகலை. பேசுவா. எனக்கு ஃபேமிலி ஆயிடுச்சு. வீட்டுக்குப் போனா குழந்தை, மாமியார், அவருன்னு... சரியா இருக்கும். எப்பவாவது பேசறதுதான்'' என்றாள்.

''இந்த ஊர்லதான் இருக்கறாங்கன்றீங்க. சந்திக்க வேண்டியதுதானே? கண்டிப்பா ஃப்ரெண்ட்ஸ் சந்திக்கணும்ங்க. ஒரு மாசத்துக்கு ஒரு தடவையாவது சந்திக்கணும். அது ஒரு தனி உலகம்ங்க'' என்றான் அவன்.

''எங்கேங்க? இத்தனைக்கும் அவ நாலு தெரு தள்ளியிருக்கிற கம்பெனியில தான் வேலை செய்யறா'' என்று அவள் கம்பெனியினுடைய பெயரை வேறு சொன்னாள்.

உடனே இமயவரம்பனின் உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தது. 'அப்படிப் போடுங்க பாயிண்ட்டை' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டவன் அதற்குப் பிறகு எப்போதடா பேச்சை முடித்துக் கொள்வோம் என்பது போல அவள் காபி குடிக்கும் வரைக்கும் காத்திருக்க முடியாமல் ''சரிங்க போலாமா?'' என்றான்.

''என்னங்க? இது வரைக்கும் நல்லா பேசிட்டு இருந்தீங்க. இப்ப திடீர்னு பறக்கறீங்க'' என்றாள் பிந்து.

''இல்லை இல்லை. ஒரு ஃபைல் பாதியில விட்டுட்டு வந்துட்டேன். திடீர்னு ஞாபம் வந்தது. அப்ப நான் போகட்டுமா?'' என்றான்.

''சரி சரி. நீங்க போங்க. என்னால அவசர அவசரமா காஃபி குடிக்க முடியாது'' என்று அவள் அவனை அனுப்பி விட்டாள்.

விட்டால் போதும் என்பது போல அவனும் கிளம்பி வந்து விட்டான்.

அன்றைக்கெல்லாம் விட்டு அடுத்த நாள் காலை ''ஹலோ மேடம்! பிருந்தாவன் எக்ஸ்போர்ட்சினுடைய அஸிஸ்டெண்ட் மேனேஜர் தானே நீங்க?'' என்றான்.

அவள் அதிர்ந்து போனாள். ''எப்படிங்க கண்டுபிடிச்சீங்க?'' என்று கேட்டாள்.

''நீங்க எப்படி எங்க ஆபீஸுக்கு வந்தீங்க?'' என்றான் அவன்.

''அது... நீங்க எங்கே வேலை செய்யறேன்னு சொன்னீங்க. ஆனா நான் சொல்லலையே'' என்றாள் அவள்.

''அதாங்க ரொம்ப த்ரில்லிங்கா இருந்தது. கிடுகிடுன்னு கண்டுபிடிச்சுட்டேன்.''

அவள் அந்தப் பக்கம் சற்று சோர்ந்து போனாள் போல தெரிந்தது. ''ஏங்க... நான் கண்டு பிடிச்சது உங்களுக்குப் பிடிக்கலையா?''

''இல்லை...'' என்று அவள் இழுத்தாள்.

''எவ்வளவு கஷ்டப்பட்டு எவ்வளவு சித்து வேலையெல்லாம் செஞ்சு, உலக வேலையெல்லாம் செஞ்சு கண்டுபிடிச்சிருக்கிறோம். கண்டு பிடிச்சது நேத்தே

கண்டுபிடிச்சாச்சுங்க. ஒரு நாளைக்கு சஸ்பென்ஸா வந்து உங்க ஆபீஸ்ல நிக்கணும்னு நினைச்சேன்''.

''அய்யய்யோ அப்படி கிப்படி வந்துராதீங்க'' என்றாள் அவள் பதட்டமாக.

''ஏங்க இப்படி பதர்றீங்க. கண்டிப்பா நான் உங்களை சந்திச்சே ஆகணுங்க. இல்லை அப்படின்னா ஆபீஸ் நேரத்துல அங்க நின்னு உங்களை எம்பேரஸ் பண்ணுவேன்'' என்றான் அவன்.

''ப்ளீஸ் வேண்டாங்க'' என்றாள் அவள்.

''அப்படின்னா? இனிமேல் எங்கிட்ட இருந்து தப்பிக்கவே முடியாது. நாளைக்கு சாயங்காலம் நாம சந்திக்கிறோம்'' என்று ஒரு இடத்தைக் குறிப்பிட்டான்.

''ப்ளீஸ், நாளைக்கு வேண்டாங்க. நாளன்னைக்கு சந்திப்போம்'' என்றாள் அவள்.

''ஏன்?'' என்று கேட்டான் அவன்.

''இல்லை, நாளன்னைக்கு வெள்ளிக்கிழமை. அதுக்கப்புறம் சந்திச்சுட்டு போனீங்கன்னா அந்த அதிர்ச்சியிலிருந்து நீங்க மீளணுமில்லே'' என்றாள் அவள்.

''சனி ஞாயிறு வீட்ல இருந்து தேத்திக்கலாம்'' என்று சிரித்தாள்.

''ஹலோ, விளையாடாதீங்க. இன்னைக்கு ஆக்சுவலா செவ்வாய்க்கிழமை'' என்றான் அவன்.

''ஓ, அப்படியா'' என்றாள் அவள்.

''இதெல்லாம் சொல்லிட்டு இருக்காதீங்க. நாளைக்கு உங்களை நான் சந்திக்கிறேன்'' என்றான்.

அவள் மேற்கொண்டு பேசுவதற்கு முன்பாக ஃபோனை வைத்து விட்டான். அன்று இரவெல்லாம் அவனுக்கு உறக்கமே வரவில்லை. மனது இறக்கை கட்டிக் கொண்டு பறந்தது.

அடுத்த நாள் மாலை நாலு மணிக்கே அனுமதி பெற்றுக் கொண்டு தான் குறிப்பிட்ட இடத்திற்குப் போய் காத்திருந்தான்.

அனு நாலு மணி வாக்கில் ஃபோன் செய்தாள். ''அநேகமா இன்னிக்கு என்னால் வர முடியாது போலிருக்கு'' என்றாள்.

''இந்தக் கதையெல்லாம் சொல்லாதீங்க. வர்றீங்க. அப்புறம் நடக்கறது வேற'' என்று போனை வைத்து விட்டான்.

வேறு வழியில்லாமல் அனு அவனை சந்திப்பதற்கு வந்தாள்.

அனுவை நேரில் பார்த்தவன் அப்படியே திகைத்துப் போய் நின்று விட்டான்.



## 8



மணி பன்னிரெண்டு ஆகி விட்டது. ஆனாலும் இமயவரம்பனுக்கு உறக்கமே வரவில்லை. அனுஸ்ரீயை சந்தித்து விட்டு வந்ததற்குப் பின்பு ஒரு அதிர்ச்சி நிறைந்த மனநிலையுடன் தான் அவன் நடமாடிக் கொண்டிருந்தான்.

'அனுஸ்ரீ இதனால் தான் தன்னை சந்திக்க மறுத்திருக்கிறாள் போலிருக்கு' என்று இப்போது எண்ணி நொந்து கொண்டான்.

அனுஸ்ரீயின் குரல் அழகாக இருந்தது. அவள் பேசுகின்ற விஷயங்கள் அழகாக இருந்தது. அறிவுபூர்வமான அவளுடைய சிந்தனையும் கூட அழகாக இருந்தது. அந்த ஆவலில்தான் அவன் அவளை நேசிக்க ஆரம்பித்தான்.

உருவமற்ற அந்த கற்பனை உருவத்திடம் அவன் நேசம் செலுத்துவது எளிதாக இருந்தது. ஆனால் 'அவளைப் பார்த்துப் பேச வேண்டும். எத்தனை நாள் முகமற்ற ஒரு ஒலியிடமே போனில் பேசிக் கொண்டிருப்பது' என்று தனக்குத் தோன்றிய அந்த ஆவலுக்காக இப்போது வருத்தப் பட்டுக் கொண்டான் இமயவரம்பன்.

உண்மையில் வற்புறுத்தியவன் இவன்தான். இவனுடைய வற்புறுத்தலுக்காகத்தான் அனுஸ்ரீயும் வந்து அவன் குறிப்பிட்ட இடத்தில் காத்துக் கொண்டிருந்தாள்.

அது ஒரு அம்மன் கோவில். ''அனு இன்னைக்கு உங்களைப் பார்க்கப் போறேன். உன்னை பார்க்கப் போறேன். எனக்கு வேலையே ஓட மாட்டேங்குது'' என்று அவளிடம் ஃபோன் செய்து கொண்டிருந்தான். ஆனால், அவளோ பெருத்த உற்சாகம் காட்டவில்லை.

அது ஏன் என்று அப்போது அவனுக்குப் புரியவில்லை. ''சரியா ஐந்து மணிக்கு வந்துடுவேன். அந்தக் கோவில்ல உள் மண்டபத்துல ஒரு ஓபன் ப்ளேஸ் இருக்கில்லே. அங்கே வெயிட் பண்ணு. வந்துடறேன்'' என்றான் அவன்.

''ம்'' என்றாள் அவள்.

''ஏன் கோயில்ல சந்திக்கணுங்கறே? வேற எங்காவது சந்திக்கலாமே'' என்றான் அவன்.

''இல்லை வேண்டாம். கோயில்லே சந்திக்கலாம்'' என்றாள் அவள் உள்ளடங்கிய குரலில்.

''அம்மனுக்குப் போய் இந்த மாதிரியான எம்பேரசிங் சிச்சுவேஷன்லாம் கொடுக்கக் கூடாது அனு'' என்று அவன் சிரித்தான்.

''இல்லை, இல்லை. அதெல்லாம் இல்லை. அம்மன் பக்கத்திலிருந்தாத் தான் எனக்கு தைரியமா இருக்கும்'' என்றாள்.

''ஓஹோ, இப்படி ஒரு லாஜிக் வேற இருக்குதோ?'' என்றான் அவன்.

ஆறு மணி அளவில் கோயிலுக்கு வந்துவிடுமாறு அவள் கூறினாள்.

''ஆறு மணி வரைக்குமெல்லாம் நமக்கு தாங்காது. ஐந்து மணிக்கெல்லாம் அங்கே இருப்பேன்'' என்றான் அவன்.

அவள் நீண்டதொரு பெருமூச்சு விட்டுவிட்டு ''சரி'' என்றாள்.

''இரு. இரு. உன்னை எப்படி அடையாளம் கண்டுக்கறது?'' என்று கேட்டான்.

''கண்டுபிடிங்க'' என்றாள் அவள்.

''நீளக் கூந்தல். பின்னல் போட்டிருப்பே. அது தெரியும். சுடிதார் கூட போடமாட்டியா? சாரி தான் கட்டுவியா?'' என்றான்.

''இல்லை, சுடிதார் வேணா போட்டுட்டு வரேன்'' என்றாள் அவள்.

''சரி, என்ன கலர் சொல்லு?'' என்று கேட்டான்.

''டாப் ஆரஞ்ச் கலர்ல போட்டிருப்பேன்'' என்றாள்.

''ஓகே, வேற ஏதாவது அடையாளம்?'' என்றான்.

''நீங்க உள்ளே வரும்பொழுது செல்ஃபோன்ல கூப்பிடுங்க. நான் பதில் சொல்றேன்'' என்றாள் அவள்.

''சரி'' என்று ஆசை ஆசையாக புறப்பட்டுப் போனான்.

அவள் ஏனோ வாயிலுக்கு முதுகுப் புறத்தைக் காட்டிக்கொண்டுதான் ஒரு மரத்தின் கீழே வேறு பக்கம் பார்த்தவளாக நின்று கொண்டிருந்தாள்.

ஆரஞ்ச் கலர் டாப் சுடிதார் என்று இவன் முணுமுணுத்துக் கொண்டே அந்தக் கோவிலின் பக்கவாட்டு வழியாக உள்ளே நுழைந்தான்.

''அனு. ஐ'ம் ஹியர். நீ எங்கே இருக்கே?'' என்று கேட்கவும் அவள் செல்ஃபோனில் பேசிக் கொண்டே திரும்பினாள்.

இமயவரம்பன் நேரடியாக அவள் முன்னால் போய் நிற்பதற்கு முன்பு, சற்று ஒதுக்கமாக நின்று அவளைப் பார்த்து விட்டு பிறகு போய் எதிரிலே நிற்கலாம் என்று ஒரு சிறுவயது பையனைப் போல திட்டம் போட்டுக் கொண்டு அழைத்தான்.

இதை எதிர்பார்க்காத அனு ''நான் இங்கேதான் இருக்கேன்.'' என்று பேசிக்கொண்டே திரும்பினாள்.

இவன் சட்டென்று ஒரு தூணுக்குப் பின்னால் மறைந்து கொண்டு பார்த்தான்.

அவள் தேடி விட்டு ''எங்கிருக்கீங்க? எங்கிருக்கீங்க?'' என்று கேட்பது இவனுக்கு தெரிந்தது.

இந்தக் கணத்தில் இமயவரம்பன் முகத்தில் எல்லையில்லாத அதிர்ச்சிக்



குறிகள் தோன்றின. அவன் கற்பனையில் வரைந்து வைத்த உருவத்திற்கும் எதிரிலே இருப்பவளுக்கும் கொஞ்சம் கூட சம்பந்தமே இருக்கவில்லை.

அவன் அழகாக ஒரு பொன்வண்டு போல - பொன்னிறத்து கதாநாயகி ஒருத்தியைக் கற்பனை செய்து கொண்டிருந்தான். ஏற்கனவே நீளக் கூந்தல், அளவான உடல் என்றெல்லாம் இருந்ததால் சரி கண்டிப்பாக முகமும் அழகாகத்தான் இருக்கும் என்று ஒரு கற்பனையில் அவனாக ஒரு ஓவியம் தீட்டி வைத்திருந்தான்.

ஆனால், எதிரே நின்ற அந்தப் பெண் பத்து சதவீதம் கூட அந்த ஓவியத்துக்குப் பொருந்தி வரவில்லை. இமயவரம்பன் சற்று அதிர்ச்சியோடு பார்த்தான்.

சற்றே தூக்கலான முன் பல் இரண்டு; கொஞ்சம் முற்றிப் போன முகம்; அழகற்ற ஒரு தோற்றம் என்று - அந்த முகம் அவன் சற்றும் விரும்பாத ஒரு முகமாக இருந்தது.

இமயவரம்பன் திகைத்துப் போய் நின்றுவிட்டான்.

அதே நேரத்தில் கையில் செல்போனை வைத்துக் கொண்டிருந்த அவள் ''என்ன பார்த்துட்டீங்களா? அதிர்ச்சியாயிடுச்சா?'' என்று கேட்டாள்.

சட்டென்று சுதாரித்துக் கொண்டான். ''இல்லல்லே, அப்படியெல்லாம் எதுவும் இல்லை'' என்று சொல்லி விட்டு மெதுவாக அவள் எதிரிலே போய் நின்றான்.

''ஐம், ஐம் இமயவரம்பன்'' என்றான்.

அவள் ஒரு விதமாக சிரித்தாள். ''தெரியும். நான் பார்த்திருக்கேன்'' என்றாள்.

''சாரி அனு, ரொம்ப நேரமா நிக்கறியா?'' என்றான் ஏதோ பேச வேண்டும் என்பதற்காக.

''இல்லல்லே, வந்து பதினைந்து நிமிஷம்தான் ஆச்சு.''

நேரிலும் கூட அந்தக் குரல் இனிமையாகத்தான் இருந்தது. ஆனால் முகம்தான் சற்றும் எதிர்பார்க்காத விதமாக இருந்தது.

''ரொம்ப சந்தோஷம்'' என்றான் அவன். வார்த்தையில் தான் சந்தோஷம் தெரிந்ததே ஒழிய முகத்தில் சந்தோஷம் தெரியவில்லை என்பதை அந்தப் பெண் கண்டு கொண்டாள்.

சூட்டிகையான பெண்!

''சரி பார்த்துட்டீங்கள்லே? எனக்கு டைம் ஆச்சு. நான் ஆறு மணிக்குள்ளே வீட்டுக்குப் போகணும். இஃப் யூ டோண்ட் மைண்ட்'' என்று கிளம்பினாள்.

சூழ்நிலையை இதமாக்குவதற்காகத்தான் அவள் அப்படிச் செய்கிறாள் என்பது அவனுக்கும் தெரிந்தது.

''அப்படியா...? சரி.'' என்றான் மனம் இல்லாமல் சொல்வது போல.

அவள் தளர்ந்த நடையுடன் செல்வதை அவனும் ஒரு ஆழ்ந்த பாவனையுடன் பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு அங்கிருந்து அவசரமாக பைக்கை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டான்.

எப்போதுமே அழகு என்பதன்மேல் அவனுக்கு ஒரு ஈர்ப்பு உண்டு. தன் மனைவி தன் உருவத்திற்கு ஏற்றவளாக அழகாக வருவாள் என்றுதான் அவன் கற்பனை செய்து கொண்டிருந்தான். 'மடத்தனம் பண்ணிட்டமோ? முதல்ல நேர்ல பார்த்துட்டு அப்புறமா பேச ஆரம்பிச்சிருக்கணுமோ? வெறும் நட்போட நிறுத்தியிருக்கலாமோ?' என்று இப்போது மனது அலை பாய்ந்தது.

ஆனால் அவனது ஆழ் மனது கேட்டது. 'உண்மையாகவே நீ அந்தப் பெண்ணை நேசிச்சேதானே? அவளுடைய அறிவை, அவளுடைய மனசை நேசிச்சேதானே?' என்று கேட்டது.

'ஆனால், ஆனால்... அந்த அறிவும் மனசும் பொருந்தற உடம்புன்னு ஒண்ணு இருக்கில்லே?'' என்று அவன் இன்னொரு மனது வாதாடியது.

இரவெல்லாம் இதே ஒரு போராட்டம். ஒழுக்கமான ஒரு குடும்பத்தில் இருந்து வந்ததனால் 'சரி இதை விட்டா இன்னொண்ணு' என்று அவனால் தாவ முடியும் என்று தோன்றவில்லை.

இனி ஆயுளுக்கும் இன்னொரு பெண்ணை அவன் ஏறெடுத்துப் பார்க்க முடியாது என்று அவன் உள்ளம் உறுதியாக சொல்லிவிட்டது. அதற்காக இந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள முடியுமா? என்றால் அதுவும் தெரியவில்லை. குழப்பம் தலைக்கேறிவிட்டது.

தன்னோடு கூட அவள் நடந்து வந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தான். அந்தக் கற்பனையை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை. இப்படி ஒரு பெண்ணைக் கொண்டு வந்து இதயாவின் முன்னால், அம்மா அப்பாவின் முன்னால் நிறுத்தினால் அவர்கள் எப்படி அதிர்ந்து போவார்கள்? என்று எதையெதையோ கற்பனை செய்து கொண்டு அவன் உள்ளம் குழம்பிப் போனான்.

யாரிடமாவது பேசலாமா என்றால் பேசுவதற்கும் அவனுக்கு கூச்சமாக இருந்தது. 'யாராவது 'நீ என்ன? ஒரு பெண்ணுக்கு நம்பிக்கை கொடுத்து விட்டு இப்படிச் செய்யலாமா' என்று கேட்டால் நான் என்ன பதில் சொல்லுவது? ஒரு நல்ல பொறுப்பில் இருக்கிறவன். நன்கு படித்தவன். ஒரு பெண்ணின் மனதிலே ஆசையைக் கிளப்பி விட்டுவிட்டு அதற்குப் பிறகு பின்னடைவு செய்தால் எவ்வளவு கேவலம்?' என்று அவனுக்கே தன்னைக் குறித்து கேவலமாக இருந்தது.

குழப்பத்தின் முடிவில் யோசித்து யோசித்துப் பார்த்தான். அவன் மனசாட்சி அவனைக் குதறி எடுத்தது. 'நீ அழகுக்காக ஒரு பெண்ணைக் கை விடுவாயா?'



'ஆனால், எப்படி என்னால் அவளோடு வாழ முடியும்?' என்று இன்னொரு மனது போராடியது.

இந்தப் போராட்டத்தின் முடிவில்தான் திடீரென்று அவன் மனம் அந்த முடிவை எடுத்தது. 'நான் இருந்தால்தானே பெரிய பிரச்சினை? இல்லாவிட்டால்? இனிமேல் என்ன இருக்கிறது? வாழ்க்கையில் அவ்வளவு ஆசை ஆசையாக செய்த கற்பனைக் கோட்டைகள்எல்லாம் சீட்டுக் கட்டு போல சரிந்து போய் விட்டது.'

இனி வாழ்க்கையில் என்ன இருக்கிறது என்ற அளவற்ற கோபம் அவனுக்கு தனிமையில் ஏற்பட்டது. திரும்பத் திரும்ப 'இனி வாழ்வதற்கு ஒன்றும் இல்லை' என்று அவன் கோழை மனது எண்ணி விட்டது.

அழகு, ரசனை என்று எப்போதும் அழகு சார்ந்த விஷயங்களில் அவனுக்கு ஆர்வம் அதிகம். அதனால் இந்த அழகின்மையை ஜீரணிக்க அவனுக்கு முடியவில்லை.

ஒரே முடிவாக எடுத்தான். அப்பாவினுடைய மருந்துச் சீட்டை எடுத்துக் கொண்டு போய் ஒரே கடையில் வாங்காமல் பத்துப் பதினைந்து கடைகளில் தூக்க மாத்திரைகளை சேகரித்துக் கொண்டு வந்தான்.

அடுத்த நாள் முழுவதும் இந்த செய்கையை பொறுமையாக செய்தான். அன்றிரவு அம்மா, அப்பாவிடம் சற்று நேரம் பேசிக் கொண்டு இருந்தான். ஏனோ அம்மாவின் கன்னத்தைப் பிடித்துக் கொஞ்சினான். மூக்கைப் பிடித்து ஆட்டினான். கட்டிக் கொண்டான். எப்போதாவது இந்த மாதிரி சேட்டைகள் செய்வது உண்டு என்பதால் அவர்களுக்கும் வித்தியாசம் தெரியவில்லை.

ஒரே முடிவாக எவ்வளவு என்று தெரியவில்லை. கைக்கு கிடைத்த அளவிற்கு தூக்க மாத்திரையை விழுங்கி விட்டுப் படுத்து விட்டான்.

இதையெல்லாம் சொல்லி முடித்து விட்டுக் குலுங்கிக் குலுங்கி அழுகிற சகோதரனை இதயா வேதனையுடன் பார்த்தாள்.

மனதுக்குள் 'அய்யோ... உன்னை என்னமோன்னு நினைச்சேனே? நீ இவ்வளவுதானா?' என்ற எண்ணம் தோன்றியது.

ஆனால் அந்த நேரத்தில் அதைச் சொன்னால் அவன் மேலும் காயப்பட்டுவிடுவான் என்று எண்ணியவள் -

''ஓகே, ஓகே. எங்கிட்டேயாவது பேசியிருக்கலாமில்லே. ம்... நீயே வச்சு மனசுக்குள்ள புழுங்கி ஏம்பா இப்படி பண்ணினே? ஏதாவது பேசி நாம ஒரு முடிவுக்கு வரலாம். டோண்ட் ஒர்ரி'' என்றாள்.

''இனிமேல் என்ன முடிவுக்கு வர்றது? எனக்கு லைஃப் அவ்வளவுதான்.'' என்றான் அவன்.

''அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. எல்லாத்தைக் காட்டிலும் லைஃப் ரொம்ப முக்கியம். உயிர் வாழ்றது ரொம்ப முக்கியம். உயிரை நாம எடுத்துக்கறதுக்கு கடவுள் நமக்கு அதிகாரம் கொடுக்கலை. இனிமே தான் நீ நல்லா யோசிச்சு ஒரு முடிவுக்கு வரணும்.இப்போதைக்கு எதைப் பத்தியும் நினைக்காதே. கொஞ்ச நாள் பேசாம இரு. வி வில் திங்க் அபவுட் இட். வி வில் கம் டு எ டெசிஷன் ஆஃப்டர்வேர்ட்ஸ்'' என்றாள்.

''இதயா'' என்றான் அவன் நம்பிக்கையற்ற ஒரு பார்வையுடன்.

''ஓகே, விட்டுடு, எனக்குத் தெரிஞ்ச ஒரு ஃப்ரெண்டை இன்ட்ரொட்யூஸ் பண்றேன். அவரு கிட்ட நீ பேசு. ஹி இஸ் எ வெரி நைஸ் பர்சன். உன்னை கண்டிப்பா நல்லா கைட் பண்ணுவாரு'' என்று சொல்லி விட்டு தன்னுடைய செல்ஃபோனை எடுத்து ''ஹலோ'' என்றாள். ''ஆதர்ஷ் ஸ்பீக்கிங்'' என்று அந்தப் பக்கம் வந்தது.

''ஹலோ, ஆதி, நான் தான் இதயா பேசறேன்'' என்றாள்.

''ஹாய்'' என்றான் ஆதர்ஷ்.

''ஆதி உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும். நீங்க இங்க வரமுடியுமா?'' என்றாள்.

''எங்கே?'' என்றான் அவன்.

அவள் அந்த ஆஸ்பத்தியின் பெயரைச் சொல்லி விட்டு ஃபோனை ஃஆப் செய்து விட்டு சகோதரனைப் பார்த்து வாஞ்சையாக சிரித்தாள்.

பாதி உயிர் திரும்பி வந்தாற்போல இருந்தது இமயவரம்பனுக்கு.

## 9



**ஆ**தர்ஷ வரும் பொழுதே ஒரு நம்பிக்கை யையும் கலகலப்பையும் சுமந்து கொண்டு உள்ளே நுழைந்தான்.

''ஹாய் இதயா, உன்னால ஹேண்டில் பண்ண முடியாத விஷயமா?'' என்று புன்னகைத்தான்.

இதயாவும் பதிலுக்குப் புன்னகைத்தாள். பிறகு ''இமயன் என்னோட பிரதர். வெளியாளுங்களுக்கு வைத்தியம் பண்ற டாக்டர் அவங்கவங்க வீட்டுக்குன்னு வரும் பொழுது கொஞ்சம் நடுங்கிடு வாங்கல்ல...? அப்படித்தான்னு வச்சுக்கோங்க'' என்றாள் இதயா.

லேசாக ஒற்றைப் புருவத்தை தூக்கி அவளைப் பார்த்துவிட்டு ''அப்படிங்கறே?'' என்றான்.

''பை த பை. இது என் பிரதர் இமயவரம்பன்'' என்று அறிமுகப்படுத்தினாள் இதயா.



''ஹலோ, வெரி ஹாப்பி டு மீட் யூ'' என்று அவன் கையைப் பிடித்து குலுக்கினான் ஆதி. ''உட்காரலாமா?'' என்று ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.

சற்று நேரம் வரை அவன் இமயவரம்பனிடம் பேசிக் கொண்டிருந்தான். பேச்சில் எந்த இடத்திலும் ஒரு அறிவுரையோ ஆலோசனையோ இருக்க வில்லை. மாறாக இமயவரம்பனை பேச விட்டு கேட்டுக் கொண்டிருந்தான். அதிலும் 'இப்படி ஏன் செஞ்சீங்க?' என்ற கேள்வியை அவன் கேட்கவேயில்லை. இப்படிச் செய்வதற்கான சூழ்நிலை எப்படி ஏற்பட்டது என்பதையும் இமயவரம்பன் விளக்கவேயில்லை. மாறாக இமய வரம்பனுடைய அலுவலக விஷயங்களைப் பற்றி மட்டும்தான் ஆதர்ஷ் பேசினான்.

''நீங்க என்ன பண்றீங்க?'' என்று கேட்டான் இமயவரம்பன்.

''நான் சொந்தமா பிஸினஸ் பண்றேன்'' என்றான்.

''அப்படியா?'' என்று இமயவரம்பன் இழுக்க...

''ஆமாம் சார், இந்த மோட்டார் சம்பந்தமான ஸ்பேர் பார்ட்ஸ். அது ஆர்டர் எடுத்து ரெடி பண்ணிக் கொடுக்கறது. ஒரு முப்பது பேர் வேலை செய்யறாங்க எங்கிட்டே'' என்றான்.

''பரவாயில்லையே. இந்த வயசுக்கு ஒரு தொழில் எஸ்டாபிளிஷ் பண்ணிட்டீங்க'' என்றான் இமயவரம்பன்.

''சார்... வயசுக்கும் வாய்சுக்கும் சம்பந்தமே இல்லாத மாதிரி வயசுக்கும் தொழிலுக்கும் சம்பந்தம் இல்லை சார். இந்தத் தொழில் மேல ஒரு ஆர்வம். செய்தே முடிக்கணுங்கற ஒரு தீவிரம். இது ரெண்டும் இருந்தா போதும்'' என்றான்.

''அது உண்மை தான் சார்'' என்றான் இமயவரம்பன்.

சற்று நேரம் கலகலப்பாகப் பேசிவிட்டு ''அப்புறம் ஃபியூச்சர் ப்ளான் என்ன வச்சிருக்கீங்க?'' என்று கேட்டான் இமயவரம்பனைப் பார்த்து.

இமயவரம்பன் இந்தக் கேள்வி இடையிலே வரும் என்று எதிர்பார்க்கவில்லை. ''ஃபியூச்சர் ப்ளான்...ம் எங்க ஆஃபிஸ்லேயே இன்னும் ஹையர் பொசிஷனுக்குப் போகணும். அதான் வச்சிருக்கேன்.''

ஆதி அழுத்தமாக சிரித்துக் கொண்டான்.

இதயா மெது மெதுவாய் இமயவரம்பனை தன் வலைக்குள் கொண்டு வருவதை ஆச்சரியமாக பார்த்துக் கொண்டிருந்தாள். ''இவ்வளவு ப்ளானெல்லாம் வச்சுட்டு எதுக்கு சார் இப்படி செஞ்சீங்க?'' என்றான்.

இமயவரம்பன் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை. கலகலவென்று பேசிவிட ஒரு சூழ்நிலை ஏற்படுத்தி, தன் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளுகிற ஒரு நண்பனாகப் பேசி, அதற்குப் பிறகு மெதுவாக அவனிடத்திலே அந்தக் கேள்வியைக் கேட்டவுடன் இமயவரம்பன் மறுபடியும் ஒரு பெருமூச்சு விட்டான்.

'நீங்க ஒரு நல்ல பொஸிஷன்ல இருக்கீங்க. நல்ல ஆளுமை உள்ள பர்சனாலிட்டியா இருக்கீங்க' என்பதையெல்லாம் தன்னுடைய பேச்சுக்கு இடையிலே ஆதி சொல்லியிருந்ததால் இப்போது ஆதியின் கேள்விக்கு பதில் சொல்லும் போது தான் எடுத்த முடிவு எவ்வளவு அபத்தமாகத் தோன்றும் என்பது இமயவரம்பனுக்கு புரிந்தது.

ஒரு நிமிடம் அமைதி காத்துவிட்டு பிறகு சொன்னான் ''அது ஒரு முட்டாள்தனம்தான்'' என்றான்.

ஆதி உடனே ''சார்! வாழ்க்கையிலே எதுவுமே முட்டாள்தனம் இல்லை. அந்தக் கணத்தில நீங்க ஏதோ ஒரு வேதனையில் இருந்திருக்கீங்க. பட்டுன்னு முடிவு பண்ணிட்டீங்க. ஆனா எனக்கு என்ன தோணுதுன்னா... அந்த ஒரு நிமிஷத்தைக் கடந்திருந்தீங்கன்னா இந்த மாதிரி ஒரு பிரச்சினையில் ஜெயிச்சிருப்பீங்க'' என்றான்.

இமயவரம்பன் மறுபடியும் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு ''ஆமாம்'' என்றான்.

இப்போது அவனுக்குள் தோன்றியது. தன்னைப் போல இருக்கிற இந்த இளைஞன் சொந்தமாகத் தொழில் நடத்துகிறான். தொழிலில் சக்கை போடு போடுகிறான் போல இருக்கு. பேசுவதைப் பார்த்தால் நிரந்தரமாக வெற்றியைக் கோர்த்து எடுப்பவன் போலத்தான் தோன்றினான்.

அவனிடத்திலே போய் 'கேவலம்... ஒரு பெண்ணினுடைய தோற்றம் என் மனதுக்குப் பிடிக்காமல் போனதால் இப்படி முயற்சித்தேன்' என்று எப்படிச் சொல்லுவது. ஆனாலும், சொல்லத்தான் வேண்டும் என்றவன் மெதுவாகத் திரும்பி இதயாவைப் பார்த்தான். சகோதரியை வைத்துக் கொண்டு எப்படிச் சொல்ல முடியும் என்று யோசித்தான்.

அதை உணர்ந்து கொண்டவன் போல ஆதி இதயாவிடம் திரும்பி. ''இதயா, எங்களுக்கு கேன்டீன்ல போய் காபி, டீ ஏதாவது வாங்கிட்டு வந்து தரலாம்ல்ல?''என்றான்.

இதயா குறும்பாக அவனைப் பார்த்து விட்டு ''காபி மட்டும் போதுமா? இல்லை வேறு ஏதாவது ஐட்டம் ஒரு ஹாஃப் அன் அவர் ஸ்பெண்ட் பண்ணி வாங்கிட்டு வந்தால் போதுமில்லே'' என்றாள் மெல்லிய குரலில்.

ஆதி சிரித்தான். ''தேர் யு ஆர். சரி உனக்கு என்ன பிடிக்குதோ வாங்கிட்டு வா'' என்று அனுப்பி விட்டான்.

கதவைச் சாத்தி விட்டு வந்தான். ''சொல்லுங்க, சொல்லுங்க இமயன்'' என்றான்.

இமயவரம்பன் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு ''நான் ஒரு சிக்ஸ் மந்த்ஸா ஒரு பொண்ணு கிட்ட - சிக்ஸ் மந்த் கூட இல்லை ஒரு நாலு மாசமா ஒரு பொண்ணு கிட்ட - ஃபோன்ல பேசிட்டிருக்கேன். ரொம்ப நல்ல அறிவு ஜீவி. அவங்ககிட்ட பேசறதே சுகமா இருக்கும். அவ்வளவு அருமையா பேசுவாங்க.''



''அதெல்லாம் கேட்டு நீங்களா அவங்களைக் காதலிக்கறதா முடிவு பண்ணிட்டீங்களாக்கும்?'' என்றான் ஆதி.

''ஆமாம்,'' என்றான் இமயவரம்பன்.

''அவுங்ககிட்ட சொல்லிட்டீங்களா?'' என்றான்.

''சொல்லிட்டேன். ஆனால் அவங்க, 'ஒரு தடவையாவது என்னைப் பார்த்துட்டுதான் முடிவு பண்ணணும்'னாங்க'' என்றான்.

''அவங்க உங்களை முதல்ல பார்த்துட்டாங்களா?'' என்றான்.

''ஆமாம், எனக்கே தெரியாம என்னை ஆஃபீஸ்ல வந்து பார்த்திருக்காங்க. நான் அவங்களைப் பார்க்கணும்னு கேட்டுட்டே இருந்தேன். அவங்க தயங்கிட்டே இருந்தாங்க. கடைசியா ரொம்ப வற்புறுத்தவும் நேத்து பார்த்தேன்.நேத்து பார்க்கறதுக்கு ஒத்துக்கிட்டாங்க. போயிருந்தேன்; பார்த்தேன்'' என்றான்.

ஆதி மவுனமாக அவன் சொல்லுவதை ஆழ்ந்து கேட்பவனாக அமர்ந்திருந்தான். 'நீ தான் தொடர்ந்து சொல்ல வேண்டும்' என்பது போல அவனுடைய முகத்தைப் பார்த்தான். வேறு வழியின்றி இமயவரம்பன் தொடர்ந்தான்.

''ஆனா நான் கற்பனையில அவங்களபத்தி நினைச்சுட்டு இருந்ததற்கும் நேர்ல அவங்களுடைய தோற்றத்துக்கும் ரொம்ப வேறுபாடு இருந்தது.''

'ம்...' என்று உள் வாங்கிக் கொண்டான் ஆதி. ''ஒரு வேளை நீங்க ரொம்ப அழகா எதிர்பார்த்தீங்களோ?'' என்றான்.

இமயவரம்பன் தலையைக் குனிந்து கொண்டான்.

''தப்பில்லை, நீங்களும் ரொம்ப பர்சனாலிட்டியோட இருக்கற ஆளு. ஸோ அது நேச்சுரல். ஆனா எப்படி... ரொம்ப... பாக்கமுடியாத அளவுக்கு இருந்தாங்களோ?'' என்றான்.

அவன் ''ரொம்ப சகிக்க முடியாதுன்னு இல்லை. ஆனா கொஞ்சம் முத்திப் போன முகமா - கொஞ்சம் கலரும் கம்மியா - கொஞ்சம் திருத்தமா இல்லாம...'' என்று இழுத்தான்.

ஆதி புன்னகைத்தான். ''டோட்டலா உங்களுக்கு அப்பியரன்ஸ்ல ஒரு நம்பிக்கை எழவில்லை.''

இமயவரம்பன் திகைத்தான். பிறகு ''ஆமாம்'' என்பது போல மேலும் கீழும் தலையாட்டினான். ''சரி, அதை விடுங்க, இவங்க உங்க லைஃப்ல எத்தனை நாளா வந்திருக்காங்க?''.

''ஒரு நாலைஞ்சு மாசமா'' என்றான்.

''அதுக்கு முன்னாடி உங்க வாழ்க்கையில ஒரு லட்சியம் - வாழ்க்கை மேல பிடிப்பு எல்லாம் இருந்ததுதானே?'' என்றான் ஆதி.

''ஆமாம்'' என்றான் இமயவரம்பன்.

''நான்கு மாதத்துக்குள்ள ஒரு பொண்ணு லைஃபுக்குள்ள வந்து அவங்க நீங்க எதிர்பார்த்த மாதிரி இல்லைங்கறதால உங்க லட்சியம் எல்லாம் இல்லாம போயிடுச்சா? உங்க வாழ்க்கையோட பர்பஸெல்லாம் இல்லாம போயிடுச்சா?'' என்று கேட்டான் ஆதி.

இமயவரம்பனுக்கு பதில் சொல்ல முடியவில்லை. ''அநேகமா நான் அபத்தமான முடிவு எடுத்துட்டேன்னு தெரியுது''

''அநேகமா இல்லை சார். நிச்சயமா நீங்க அபத்தமான முடிவுதான் எடுத்தீங்க'' என்றான் ஆதி.

''பின்னே நான் என்ன செய்யட்டும் சொல்லுங்க? நான் அவங்களை ரொம்ப நேசிச்சேன்'' என்றான்.

''எவங்களை? நீங்க அவங்களைப் பார்த்து - அவங்க உருவத்தை மனசுல வச்சுட்டா நேசிச்சீங்க? இல்லையே? நீங்களா ஒரு உருவத்தைக் கற்பனை பண்ணிட்டு - அந்த உருவம் அவங்க மேல ஃபிட் ஆகணும்னு நினைச்சுட்டு - நீங்க கற்பனை பண்ணின உருவத்தைத்தான் நேசிச்சீங்க. அவங்களை இல்லை'' என்றான்.

''இல்லை .அனுவோட பர்சனாலிட்டியைத்தான் நேசிச்சேன்''.

''பர்சனாலிட்டின்னா எது சார்? தோற்றமா, இல்லை... உள்ளிருக்கக் கூடிய விஷயமா?'' என்றான் ஆதி

''தெரியலை. அதை யோசிச்சுத்தான் முடிவு பண்ணனும். இப்ப எனக்கு முடிவு பண்ணத் தெரியலை.''

ஆதி இமயவரம்பனுடைய இரண்டு கைகளையும் தன் கைகளில் எடுத்துக் கொண்டு ''அனலைஸ் பண்ணுங்க. எதுக்கு அதிர்ச்சியாகறது?'' என்றான்.

''இல்லை... நான் அவங்களுக்கு ஹோப் கொடுத்துட்டேனோ? என்னுடைய நேசம் உண்மை. இப்ப என்ன பண்றது? எப்படி இதிலிருந்து வெளியே வர்றது? என்னோட அன்பை என்னால மறுக்க முடியாது. ஆனா நான் நேசிச்சவங்க அவங்க இல்லை'' என்றபொழுது ஆதர்ஷ் குறுக்கிட்டான்.

''அந்தத் தோற்றம் இல்லை. அவ்வளவுதான்'' என்றான்.

இமயவரம்பன் தலையை ஆட்டினான்.

''ஒகே சார்! இப்ப என்ன... நீங்க அந்த உண்மையான அனுஸ்ரீயை நேசிக்கலை. உங்களோட கற்பனை அனுஸ்ரீயைத்தான் நேசிச்சீங்க. ஆனா கற்பனை எல்லா சமயத்துலயும் வாழ்க்கைக்கு ஒத்து வராது சார்'' என்றான்.

''புரியுது'' என்றான் இமயவரம்பன்.

''ஏன் சார்... நான் ஒரே ஒரு கேள்வி கேட்கறேன். அழகா இருக்கவங்களுக்கு மட்டும்தான் கல்யாணம் ஆகணுமா? இந்தச் சமுதாயத்துல தொண்ணூறு சதவீதம்



பேர்த்துக்கு மேலே அழகு அப்படிங்கற வரையறைக்குள்ள வராமத்தான் இருப்பாங்க. அவங்களையெல்லாம் என்ன சார் பண்ணலாம்?'' என்றவன்,

''தொண்ணூறு சதவீதம் பேருக்கு கல்யாணமே நடக்காது சார்'' என்றான்.

இமயவரம்பன் ஒன்றும் பேசவில்லை. ''ஆனாலும், இப்ப எந்த முடிவும் எடுக்க வேண்டாம். மைண்டை ஃப்ரீயா வச்சுக்கோங்க. அவங்க... அவங்க யாரு?'' என்றான்.

இமயவரம்பன், ''ம்... அனுஸ்ரீ'' என்றான்.

''அனுஸ்ரீ கிட்ட உங்களால தொடர்ந்து ஃப்ரெண்டா இருக்க முடியும்னா இருங்க. அப்படி இல்லைன்னாலும் பரவாயில்லை. ஒதுங்கிக் கறதுன்னாலும் ஒதுங்கிக்கங்க'' என்றான் ஆதி.

இமயவரம்பன் முகம் வெளிறிப் போனது.

''ஏன் சார்?'' என்றான் ஆதி.

''அவங்க கிட்ட பேசாமயும் என்னால இருக்க முடியாது. அவங்ககிட்ட பேசினாலே மனசு உற்சாகமாயிடும்; அவ்வளவு அருமையா பேசறவங்க; சிரிக்கறவங்க. அவங்களப் போய் நான் எப்படி...?'' என்று இழுத்தான்.

''அதான் சார்... இப்போ ஒண்ணும் முடிவு பண்ண வேண்டாம். அவங்க கிட்ட நீங்க ஒண்ணும் சொல்லலையில்லே?''

''இல்லை. நான் எதுவும் சொல்லலை. நான் போயிட்டு வர்றேன்னு மட்டும் சொல்லிட்டு வந்துட்டேன்''

''நீங்க எதையும் காட்டிக்காம அவங்ககிட்ட தொடர்ந்து பேசுங்க. ஆனா எந்த உறுதி மொழியும் கொடுக்காதீங்க. ஒரு முடிவுக்கு வாங்க. உங்க லைஃபைப் பத்தி முடிவு பண்றதுக்கு உங்களுக்கு உரிமை இருக்கு. உங்களுக்கு விருப்பமான தோற்றமுள்ள ஒரு பெண் வேணும்னா அதுக்காக வெயிட் பண்ணுவோம். அதனால் ஒண்ணும் தப்பு இல்லை''

ஆனால் அதை முழுவதுமாக ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இமயவரம்பன் இருக்கவில்லை. ''இல்லை. அவங்களை நான் கொஞ்சம் நேசிக்கவும் செஞ்சேன்'' என்றான்.

ஆதி சிரித்தான்.

''அதான் சார். உங்க கற்பனை உருவத்துக்கும் உண்மையான உருவத்துக்கும் இடையே பெரிய கான்ஃப்ளிக்ட் இருக்கு. முடிவுக்கு வருவோம் சார். அதுவரைக்கும் ஆறப்போடுங்க. ஆனா இது ஒரு சின்ன குழப்பம். லைஃப்ல வர குழப்பம்தான். இதுக்காக போய் உயிரை விலையாகக் கொடுக்கறது கொஞ்சம் ஓவர் சார்'' என்றான் கிண்டல் செய்வது போல.

இமயவரம்பன் புன்னகைத்தான்.

''இனிமேல் இந்த முடிவு எடுக்கமாட்டேன்னு உங்க பேரண்ட்ஸுக்கு உறுதி

மொழி கொடுங்க. மொதல்ல இதயாவுக்கு உறுதி மொழி கொடுங்க'' என்றான் ஆதி.

''புரியுது. ஒரு ரெண்டு நாள் டாக்டர் சொல்றவரைக்கும் முழுமையா ஓய்வு எடுத்துட்டு அதுக்கப்புறம் ஆபீஸுக்கு போகலாம் சார்'' என்றான் ஆதி.

''ஆபீஸ்ல...'' என்று இழுத்தான். ''யாருக்கும் தெரியாது. இதயாவோட ஃப்ரெண்ட்ஸ் ரெண்டு பேருக்கு மட்டும் தெரியும். அவங்ககிட்டே யாருக்கிட்டேயும் சொல்ல வேண்டாம்னு இதயா ரிக்வொஸ்ட் பண்ணியிருக்கு. அதனால யு ஃபீல் ஃப்ரீ. அனுகிட்ட கூட இப்போதைக்கு சொல்ல வேண்டாம்'' என்றான்.

''சரி'' என்று தலையசைத்தான் இமயவரம்பன்.

''சரி, நாம வேற விஷயம் பேசலாம்'' என்று அதை விட்டு விட்டு வேறு விஷயங்களுக்குத் தாவி அவனைச் சற்று நேரம் சிரிக்கவைத்து விட்டுத்தான் கிளம்ப ஆயத்தமானான் ஆதி.

சற்றுக் கழித்து உள்ளே வந்த இதயா, இரண்டு பேரும் கலகலவென்று சிரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து சற்று வியந்துதான் போனாள்.

## 10



''**அ**து ஒரு பெரிய கதை!'' என்றாள் இதயா. இமயவரம்பன் அவளை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். அப்போதுதான் அவர்கள் ஆதர்ஷின் வீட்டிற்குப் போய் விட்டு வெளியிலே வந்து கொண்டிருந்தார்கள். அங்கே எழில்வாணன் - பத்மஜா இரண்டு பேரையும் அறிமுகப்படுத்தி வைத்திருந்தாள் இதயா.

போகும் போதே இமயனிடம் சொல்லியிருந்தாள். ''இமயன்! நான் சொல்றதை நல்லா கவனிச்சுக்கோ. நான் இப்ப கூட்டிட்டு போய் அறிமுகப்படுத்தறவங்களை நல்லா பார்த்துக்கோ - அவங்களைப் பத்தி பெரியகதை இருக்கு. நான் உனக்கு சொல்றேன் அப்புறம்.'' அப்படி ஒரு பீடிகை போட்டு விட்டு அழைத்துக் கொண்டு போனதனால் இமயவரம்பன் ஒரு வித எதிர்பார்ப்போடு தான் இருந்தான்.

வீட்டினருடைய வற்புறுத்தலுக்காகவும் இதயாவினுடைய ஆலோசனைப் படியும் பதினைந்து நாட்களுக்கு அலுவலகத்துக்கு விடுமுறை எழுதிக் கொடுத்து விட்டான்.

வாரம் முழுக்க அலுவலகத்திற்கு சென்று விட்டு அந்த வார இறுதி நாட்களை அவனோடு கழிப்பதற்காக அவர்கள் வீட்டுக்கு வந்திருந்தாள் இதயா. மற்ற



நாட்களிலும் கூட மாலையில் வந்து விடுவாள். இரவு ஒன்பது மணி வரை இருந்து விட்டுத்தான் போவாள்.

அதுவும் ஆஸ்பத்திரியில் இருந்து வந்த இரண்டு மூன்று நாட்கள் பெரியப்பா வீட்டிலே தான் தங்கியிருந்தாள். தனக்கு இருக்கிற ஒரே சகோதரன். சற்றே மூத்தவன். அவன் மனம் நொந்து இருக்கிற நிலையில் அவனைக் கைவிடாமல் அவனுடைய மனசைப் பலப்படுத்துவது தன்னுடைய கடமை என்று எண்ணினாள் அந்த அன்புச் சகோதரி. எழில்வாணனையும் பத்மஜாவையும் பார்த்தவுடனே இமயவரம்பனுக்கு ஒரு எண்ணம் ஓடியது. இவர்களிடத்தில் என்ன பெரிய சஸ்பென்ஸ் இருக்கப் போகிறது என்று எண்ணிக் கொண்டான்.

பத்மஜாம்மா கருப்பாக குண்டாக இருந்தார். முகத்தில் அம்மைத் தழும்புகள் வேறு. எழில்வாணன் பெயருக்கு ஏற்றபடி இல்லையென்றாலும் கூட மாநிறமாக இருந்தார். அவரும் குண்டாகத்தான் இருந்தார். பெரிதாக - உலகத்தினுடைய அளவுகோல் படி - அவரும் அழகு, லட்சணம் என்று சொல்ல முடியாது. ஆனால் இரண்டு பேரும் மனம் ஒத்த தம்பதிகளாக இருக்கிறார்கள் என்பது மட்டும் தெரிந்தது.

ஆதர்ஷ் எங்கோ வெளியில் போயிருந்தவன் வந்தான். இவர்கள் இருவரையும் பார்த்தவுடன் மகிழ்ச்சி. இதயாவைப் பார்த்தவுடன் கொஞ்சம் கூடுதல் மகிழ்ச்சியோ என்று கூட இமயவரம்பனுக்குத் தோன்றியது. ''இதயா ஃபோன்... பண்ணி இருக்கலாம்ல...'' என்று கேட்டான்.

''ஃபோன் பண்ணா ஆர்ப்பாட்டம் பண்ணுவீங்க. பத்மஜாம்மா கிட்ட அதைச் செஞ்சு வைங்க இதைச் செஞ்சு வைங்கன்னு தொல்லை பண்ணுவீங்க, வேண்டாம். இருக்கறதை சாப்பிட்டு போகலாம்னு தான் நான் போன் பண்ணலை.''

''ஏய்... நீ சொல்லியிருக்கலாம். இப்ப எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கு தெரியுமா? நான் போயே ஆகணும். நீ வர மாதிரி தெரிஞ்சிருந்ததுன்னா அந்த வேலையை நாளைக்கு போஸ்ட்போன் பண்ணியிருப்பேன்'' என்றான் ஆதர்ஷ் மனத்தாங்கலுடன்.

''அதனாலதான் நான் சொல்லலை. நான் சொல்லியிருந்தா நீங்களும் இங்கே டேரா அடிச்சுட்டு தொல்லை பண்ணுவீங்க'' என்றாள் இதயா.

''ஓஹோ... நான் உனக்கு தொல்லையா?'' என்றான்.

''இல்லை இல்லை. தொல்லை இல்லை. இருந்தாலும் நானும் இமயனும் உங்க பேரன்ட்ஸ் மட்டும் சந்திக்கறதா தான் ஏற்பாடு'' என்றாள்.

''ஓஹோ... என்னமோ நடக்குது. சரி'' என்றவன், ஒரு அரை மணி நேரம் அவர்களோடு இருந்து விட்டு அவர்கள் இருவரையும் வெகுவாக உபசரித்து விட்டு 'ப்ளீஸ் எக்ஸ்கியூஸ் மீ' என்று இமயவரம்பனிடம் மன்னிப்பு கேட்டு விட்டு கிளம்பினான்.

இதயாவிடம் கண் அசைக்க அவள் வாயிற்படி வரை கூட போனாள்.

''எனக்கு ஒரு நல்ல சான்ஸை கெடுத்துட்டியே நீ'' என்றான் அவன்.

அவள்குறும்பாக சிரித்தாள். ''தெரியும். அதனாலதான் சொல்லலை'' என்றாள்.

''விடு விடு. உன் காலம் எங்க போயிடப்போகுது? நீ எங்க போயிடப்போற? நான் எங்க போயிடப்போறேன்?'' என்று பொறுமிக் கொண்டே கிளம்பினான் ஆதர்ஷ். இதயா அதை ரசித்துச் சிரித்தமாதிரி இமயவரம்பனுக்கு தோன்றியது.

இதயா உள்ளே வந்தாள். அங்கே அதிகபட்சம் ஒரு மணி நேரம் இருந்திருப்பார்கள். அதற்குப் பிறகு கிளம்பினார்கள். இமயவரம்பன் ஒரு சான்ட்ரோ கார் வைத்திருந்தான். ஆபீஸில் லோன் போட்டு வாங்கியதுதான். அந்தக் காரை ஓட்டிக் கொண்டு சகோதரியை அருகிலே வைத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள்.

''இங்க பார்... அங்க ஒரு பார்க் இருக்கில்ல? அதுக்குள்ள காரை விடு'' என்றாள் இதயா.

''ஏய்... வீட்ல போய் பேசலாம்டி'' என்றான் அவன்.

''இல்லை இல்லை. இங்கதான் பேசணும். இதெல்லாம் வீட்ல பேச முடியாது'' என்றாள்அவள்.

''என்ன... உனக்கும் ஏதாவது அஃபயரா?'' என்றான்.

அவள் முகம் ஒரு நிமிடம் சிவந்தது. ஆனால் உடனே சமாளித்துக் கொண்டு ''அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லை. இது வேற விஷயம்.''

சரி என்று அழைத்துக் கொண்டு போனான். அங்கே நிழலிருக்கிற ஒரு மரத்தின் கீழ் இருக்கிற சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தார்கள். மேல் உள்ள மரத்திலிருந்து இலைகள் சுற்றிலும் விழுந்து கிடந்தன. அவள் கைக்கு எட்டிய தூரத்திலிருந்த ஒரு கிளையிலிருந்து ஒரே ஒரு பூவை மட்டும் பறித்து ''இது புளிப்பா இருக்கும் தெரியுமா?'' என்றாள்.

''ஏய் இதையெல்லாம் சாப்பிடுவாங்களா?'' என்றான் இவன்.

''நாங்களெல்லாம் சின்னப் பிள்ளையில் சாப்பிடுவோம்பா.'' என்று அவள் கையிலே வைத்திருக்க-

''சரி விஷயத்துக்கு வா'' என்றான்.

அவன் ஆர்வம் மிகுதியாக தவித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து இதயா சிரித்துக் கொண்டு ''ஒரு சுவாரசியமான விஷயம் சொல்லட்டுமா?'' என்றாள்.

''சொல்லு'' என்றான் அவன்.

அப்பொழுதுதான் ஒரு பெரிய கதை என்று ஆரம்பித்திருந்தாள் இதயா. ஆர்வம் தாங்காமல் அவளை குறுகுறுவென்று பார்த்து அமர்ந்து கொண்டிருந்தான் இமயவரம்பன். ''இப்ப நாம இரண்டு பேரை பார்த்துட்டு இருந்தோம்ல - எழில்வாணன் ஐயாவையும், பத்மஜாம்மாவையும்'' என்றாள்.



''ஆமாம்'' என்றான்.

''அவங்க ரெண்டு பேரும் ரொம்ப நாளா லவ் பண்ணினவங்க'' என்றாள்.

அவன் ஆச்சரியம் தாங்காமல் அவளைப் பார்க்க -

''இன்னொரு விஷயம் தெரியுமா? இவங்க ரெண்டு பேரும் ரிட்டயர் ஆனதுக்குப் பிறகு கல்யாணம் பண்ணினாங்க.''

அவனுக்கு கிட்டத்தட்ட தலையே சுத்தியது. ''என்னது...'' என்றான்.

''ஆமாங்க சார். அவங்க ரெண்டு பேரும் ரொம்ப நாளா லவ் பண்ணினாங்க. அந்த எழிவ்வாணன் வீட்லயும் அவருதான் முக்கியமான பொறுப்பானவரு. இவங்க வீட்லயும் அப்படித்தான். இவங்க ரெண்டு பேருக்குமே தம்பி தங்கச்சிங்கன்னு ரெண்டு மூணு பேரு. அம்மா அப்பா வேற இவங்க லவ்வுக்கு எதிர்ப்பு.''

''ஓஹோ'' என்றான் அவன். ''அதனால எழில்வாணன் அய்யா பிடிவாதமா சொல்லிட்டாரு. ''கட்டினா கண்டிப்பா பத்மஜாவைத்தான் கட்டறதுன்னு.'' அவங்க வீட்ல ஒத்துக்கலை.

பத்மஜாம்மாவும் அப்படித்தான் சொல்லிட்டிருந்தாங்க. அதுக்கப்புறம் அவங்க தம்பி தங்கைக்கெல்லாம் கல்யாணம் பண்ணிட்டு அதுக்கப்புறம் ரிட்டையர் ஆனதுக்கு அப்புறம் திடீர்னு ஒரு நாள் பத்மஜாம்மா கிட்ட போய் 'நாம கல்யாணம் பண்ணிக்கலாம்'னு கேட்டிருக்காரு. 'இப்பவா' அப்படின்னு கேட்க, 'நல்லா யோசிச்சு பாரு - உன் தங்கச்சி, தம்பியெல்லாம் கல்யாணம் பண்ணிட்டு உன்னைக் கண்டுக்கறது இல்லை. என் தம்பி, தங்கச்சியெல்லாம் என்னைக் கண்டுக்கறது இல்லை. இப்பதான் நமக்கு ஆதரவு வேணும். இப்பவும் அதே அன்பு எனக்கு இருக்கு.' என்று சொன்னபொழுது...'' என்று இதயா விவரித்த பொழுது பத்மஜாவினுடைய அம்மைத் தழும்பு தோய்ந்த முகம் இமயவரம்பனின் கண்ணுக்குள் வந்தது.

''அப்புறம் என்ன... இரண்டு பேரும் கல்யாணம் பண்ணிட்டாங்க.''

அவன் சிந்தனையுடன் அவளைப் பார்த்தான். ''அப்ப ஆதர்ஷ்...?'' என்றான்.

''ம்... அதுவும் ஒரு கதை'' என்றாள்.

''சும்மா சஸ்பென்ஸ் வைக்காம சொல்லுடி'' என்றான் இமயவரம்பன்.

''அதான்... ஆதர்ஷ் வந்து ஆக்சுவலா ஒரு ஆர்ஃபன், அநாதை'' என்றாள்.

இன்னும் வியந்து போனான் இமயவரம்பன். ''ஆமா. அது பத்மாஜாம்மா வளர்த்தது முதல்ல அவனை. தம்பி தங்கச்சியை கல்யாணம் பண்ணிவச்சதுக்கு அப்புறம் கொஞ்சம் லோன்லியா ஃபீல் பண்ணாங்க. அப்ப எழில்வாணன் ஐயா தான் இந்த ஐடியா கொடுத்து ஒரு அநாதை விடுதியிலிருந்து பத்து வயசுப் பையனா அவனைக் கூட்டிட்டு வந்தாங்க. வளர்ப்பு மகனா வளர்த்துட்டு இருந்தாங்க. அவருதான் நின்னு ரெண்டு பேருத்துக்கும் கல்யாணம் பண்ணி

வச்சாரு'' என்றாள் இதயா.

இது கதையா இல்லை கனவா என்பது போல சற்று நேரம் இமயவரம்பனால் ஒன்றுமே பேச முடியவில்லை.

''சரி... இப்ப எதுக்கு இது எங்கிட்ட சொல்ற?''

''எதுக்கு சொல்றேனா? மக்குப் பயலே! பத்மஜாமா அம்மாவைப் பார்த்தீல்ல? பெரிய பர்சனாலிட்டி கிடையாது. இப்ப கொஞ்சம் வயசானதும் நல்லா குண்டு வேற ஆயிட்டாங்க. முகம் பார்த்தில்ல. அம்மைத் தழும்பு முகம். ஆனாலும் எழில்வாணன் ஐயா அவங்களை உண்மையா காதலிச்சாரு. அவங்களுக்காக வேற கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்னு காத்துட்டு இருந்தாரு.

இரண்டு பேருமே ரிட்டையர் ஆனதுக்கப்புறம் கல்யாணம் பண்ணினாங்க. அந்தக் காதல் எவ்வளவு புனிதமானது இல்ல...!'' என்றாள்.

இமயவரம்பன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். ''இப்படி மனுஷங்களும் இருக்காங்க'' என்றான். ''ஏன் இதயா! நீ என்ன சொல்ல வர்ற...?'' என்றான்.

''இல்லை. நான் என்ன சொல்ல வரேன்னு உனக்குப் புரியலையா?'' என்று கேட்டாள்.

''கொஞ்சம் புரியற மாதிரி இருக்கு. எதுக்கும் வெளிப்படையாவே சொல்லு'' என்றான் அவன்.

''அன்புங்கறது உருவத்தைப் பார்த்து வர்றது இல்லை அப்படிங்கறதை சொல்றதுதான் என்னோட நோக்கம்'' என்றாள்.

இமயவரம்பன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

''புரியுது இதயா. ஆனா நான் வந்து வேறு விதமா கற்பனை பண்ணிட்டேன்'' என்றான்.

''அது உன் தப்பு. நீ அப்படி ஒரு எண்ணம் வரப்பவே அவங்களைப் பார்த்துட்டு அதுக்கப்புறம் முடிவு பண்ணியிருக்கணும். இப்ப போய் திடீர்னு உன் முடிவை மாத்தினேன்னா எப்படி நியாயம்?'' என்றாள் அவள்.

அவன் ஒன்றும் பேசவில்லை.

''இங்க பாரு இமயன். நல்லா யோசனை பண்ணு. டைம் எடுத்துக்கோ- ஆனா அதுக்காக மனசுக்குப்பிடிக்காம சரின்னு சொல்லாத. ஆனா அன்புன்னு வரும்பொழுது உருவமா, உள்ளமா, மனசா, தோற்றமா அப்படிங்கறதை நல்லா அனலைஸ் பண்ணி முடிவு பண்ணிக்கோ. இப்ப அவங்களைப் பாரு. எவ்வளவு சந்தோஷமா இருக்காங்க. ஆதர்ஷ் பாரு எவ்வளவு சந்தோஷமா இருக்கான். நியாயப்படி அவங்க இறந்து போன காலங்களை நினைத்து வருத்தப்படணும். அப்படியெல்லாம் வருத்தப் படாம - இருக்கற காலத்தை சந்தோஷமா கழிக்கறது ஒண்ணு. ரெண்டு பேரும் அவ்வளவு சந்தோஷமா இருக்காங்க!'' என்றாள்.

இமயவரம்பனின் நெஞ்சைத் தொட்டது அந்தக் கதை. சரி என்பது போல



சற்று நேரம் அமைதியாக அமர்ந்திருந்தான். அதற்குப் பிறகு இதயா அந்தப் பேச்சையே பேசவில்லை. மாறாக ஆதர்ஷை பற்றி விரிவாகப் பேசினாள்.

''ஆதர்ஷ் ரொம்ப நல்ல பையன். சொந்தமா பிஸினஸ் பண்றான். தானே உழைச்சு பணம் சேர்த்து - அம்மாவுக்கோ, அப்பாவுக்கோ தொல்லை கொடுக்காம - சின்ன முதலீட்டில் ஆரம்பிச்சு இப்போ நாற்பது ஐம்பது பேர் வேலைக்கு வச்சிருக்கான் தெரியுமா? ஹி இஸ் சிம்ப்ளி கிரேட் தெரியுமா?'' என்றாள் இதயா.

அப்போது இமயவரம்பனுக்கு தோன்றியது இதயாவும் ஆதர்ஷை விரும்புகிறாளோ? என்று. ஆனால் அதை நேரடியாக கேட்கவில்லை. எப்படிக் கேட்பது என்று தயங்கிக் கொண்டிருந்தான். 'எப்படியிருந்தாலும் சரக்கு மலிந்தால் சந்தைக்கு வந்துதானே ஆக வேண்டும்' என்று எண்ணிக் கொண்டான். சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு ''போலாமா?'' என்று கிளம்பினாள் இதயா.

''சரி'' என்று கிளம்பினான்.

காரில் ஏறி அமர்ந்தவுடனே ''அப்ப... நான் என்ன சொல்லட்டும்?'' என்று கேட்டான்.

''இப்போதைக்கு ஒண்ணும் வேண்டாம். அனுஸ்ரீ கிட்ட தொடர்ந்து உன்னால நட்பா பேச முடியும்னா பேசு'' என்றாள்.

''பார்க்கறேன்'' என்றான் இமயவரம்பன். அதற்கு மேல் இதயாவும் அவனை வற்புறுத்தவில்லை. ஆனால் அதே சமயத்தில் அனுஸ்ரீ அவனுடைய அலுவலகத்திற்கு வந்து பிந்துவை சந்தித்து பேசிக் கொண்டிருந்தாள். இத்தனைக்கும் இமயவரம்பன் ஃபுட் பாய்சன் என்று சொல்லித்தான் விடுமுறை கேட்டிருந்தான். ஆனால் நெருங்கிய நண்பர்கள் உறவினர்கள் மூலமாக அரசல் புரசலாக ஏதோ தெரிந்து அவன் தற்கொலை முயற்சி பற்றி பிந்துவுக்கும் கொஞ்சம் தெரிந்திருந்தது.

அவள் அனுஸ்ரீயிடம் லேசாக கோடிட்டு காட்டி விட்டாள். அனுஸ்ரீ ''எப்போ அப்படிப் பண்ணாரு?'' என்று கேட்டுக் கொண்டிருந்தாள் பிந்துவிடம். ''அனு... எனக்கு டெஃபனட்டா தெரியாது. ஆனா அப்படின்னு பேசிக்கறாங்க. புட் பாய்சனிங்னு சொல்லித்தான் லீவு கேட்டிருக்காங்க. பட் அவரு ஏதோ ஒரு பொண்ணை லைக் பண்ணின மாதிரியும் அந்தப் பொண்ணு அவருடைய எதிர்பார்ப்புக்கு இல்லைங்கற மாதிரியும் ஏதோ பேச்சு அடிபடுது. என்னன்னு தெரியலை'' என்றாள்.

அனுஸ்ரீயின் முகம் வாடிவிட்டது.

சற்று குடைந்து குடைந்து பிந்துவிடம் விவரம் கேட்டுக் கொண்டு அவன் தன்னைச் சந்தித்து விட்டு வந்த மறுநாள்தான் இது நேர்ந்திருக்கிறது என்று தெரியவும் மிகவும் நொந்து போனாள்.

பிறகு பிந்துவிடம் ''ஏன் பிந்து அவங்க ஃபேமிலியில யாரையாவது உனக்குத் தெரியுமா?''

''அவங்க பேமிலில அவர் ஒருத்தர்தான். ஆனா இவருக்கு ஒண்ணு விட்ட சிஸ்டர் இதயான்னு அந்தப் பொண்ணு கூட ஆபிஸுக்கு வரும். அந்தப் பொண்ணோட நம்பர் வேண்ணா யாருக்கிட்டயாவது வாங்கித் தரேன். எதுக்கு?'' என்று கேட்டாள் பிந்து.

''இல்லை ஒரு விஷயமாதான். நான் அவருகிட்ட ஒரு நன்கொடை மாதிரி கேட்டிருந்தேன் - ஒரு ஆர்கனைசேஷனுக்கு - இப்படி அவரு இருக்கும் பொழுது எப்படி அவரைப் போய்பார்த்து பேசறது. அதனால அவரு வீட்ல வேற யாருக்கிட்டயாவது தொடர்பு...'' என்று இழுத்தாள்.

''ஒகே ஒகே. நல்ல காரியத்துக்காக கேட்கறே. நான் கண்டிப்பா எப்படியாவது இதயாவோட நம்பரை வாங்கித்தரேன்'' என்றாள் பிந்து.

அப்படியே யாரையோ பிடித்து எண்ணையும் வாங்கிக் கொடுத்தாள். அனுஶ்ரீ மிகுந்த யோசனைக்குப் பிறகு இதயாவை தன் செல்ஃபோனில் இருந்து தொடர்பு கொண்டாள்.

அந்தப் பக்கம் இதை எதிர்பார்க்காத இதயா திகைத்துப் போனாள்.

## 11



**ஆ**தர்ஷ் இதயாவின் முகத்தை ஆழ்ந்து பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான். ''அன்புன்னா இப்படித்தான் இருக்கணும் இல்ல ஆதர்ஷ்'' என்று சொல்லிக்கொண்டிருந்தாள் இதயா.

ஆதர்ஷ் ஐயய்யோ என்று தலையை தேய்த்துக் கொண்டான்.

''என்ன ஆதர்ஷ்... இவ்வளவு உணர்ச்சி வசமா சொல்லிட்டு இருக்கேன். நீங்க என்ன இப்படி மசமசன்னு பதில் சொல்றீங்க'' என்றாள்.

''நீ எத்தனை தடவை சொல்ற. இதோட நூறாவது தடவை சொல்ற. நான் ரொம்ப ஆச்சரியப்பட்டு பாராட்டி எல்லாம் முடிஞ்சத இப்ப மறுபடியும் உட்கார்ந்துட்டு அன்புன்னா அப்படியிருக்கணும் இப்படியிருக்கணும்னு சொல்லிட்டு இருந்தா கடுப்பா இருக்குமா இல்லையா?''

''என்ன ஆதர்ஷ்... நீங்க புரிஞ்சுக்குவீங்க - நீங்க ஒருத்தர் தான் புரிஞ்சுக்குவீங்கன்னு நினைச்சுட்டு உங்க கிட்ட சொல்லிட்டு இருக்கேன்'' என்றாள்.

''சரிம்மா. அந்தப் பொண்ணு உண்மையிலே கிரேட். உங்க அண்ணனுக்குத் தான் புரிஞ்சுக்கற சக்தியில்லை. விடு...'' என்றான் ஆதர்ஷ்.



''இதயா பெருமூச்சு விட்டாள்.'' அப்ப அப்படியே விட்டுடறதா?

''என்ன பண்ணணுங்கற? சாப்பாடு செல்லலைன்னா குச்சி வச்சு குத்தலாம். ஆனால் ஃபிலீங்ஸ்சுக்கெல்லாம் குச்சி வச்சு குத்த முடியாது கண்மணி.''

அவனுடைய 'கண்மணி' என்ற அழைப்பில் இதயாவின் முகம் சிவந்தது. ஆதர்ஷ் லேசாக விசில் அடித்தான். பிறகு அவளிடம் திரும்பி ''நானும் உங்கிட்ட ஒண்ணு சொல்லணும்.'' என்றவன் சுற்றும் முற்றும் பார்த்தான். அவர்கள் இப்பொழுது ஒரு பார்க்கிலே அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

அது பெரிய பார்க். நிறைய பேர் வாக்கிங் போய்க் கொண்டிருந்தார்கள். மாலை நேரம். மெல்ல ஒரு பக்கமாக அவளை இழுத்துக் கொண்டு வந்து அமர்ந்து கொண்டிருந்தான்.

உண்மையில் இதயாதான் அவனிடம் தனியாகப் பேச வேண்டும் என்று சொல்லி இந்த சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தாள். வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்திருந்தான் ஆதர்ஷ்.

அவன் இதயா சொன்ன விஷயத்தைக் கேட்டு சற்று நெகிழ்ந்துதான் போனான். சரி இப்போது விட்டால் வாய்ப்பு போய்விடும் என்ற நினைப்பு தோன்றவும் மீண்டும் இதயாவிடத்திலே ''எனக்கும் சொல்லணும்'' என்றான்.

''சொல்லுங்க'' என்றாள் இதயா. ஆனால் அவள் இன்னமும் அந்தப் பெண்ணை பாராட்டுகிற மனப்பான்மையில் இருந்து வெளியே வரவில்லை என்பது அவனுக்கு புரிந்து.

''ஹலோ இப்ப இந்த நிமிஷத்துக்கு இந்த இடத்துக்கு வா'' என்றான்.

இதயா சிரித்து விட்டு தன்னை ஒரு உலுக்கு உலுக்கின்றாற் போல நடித்து விட்டு ''வந்துட்டேன் சொல்லுங்க'' என்றாள்.

ஆதர்ஷ் புன்னகைத்தான். அவன் கண்கள் அவளின் முகத்தின் மேல் ஆழப் பதிந்தன. பிறகு ஒரு பெருமூச்சு விட்டுவிட்டுச்சொன்னான். ''ஏன் இதயா... அந்தப் பொண்ணைப் பத்தி புரிஞ்சுக்கறே. உங்க அண்ணனைப் பத்தி யோசிக்கிறே. உன்னைப் பத்தி யோசிக்க மாட்டியா?'' என்றான்.

அவள் வியப்புடன் அவனைப் பார்த்து விட்டு ''என்னைப் பத்தியா? என்னைப் பத்தி யோசிக்கறதுக்கு இப்ப என்ன இருக்கு?'' என்றாள்.

''நிறைய இருக்கு பெண்ணே. யாரோ யார் மேலயோ அன்பு வச்சுக்கறதைப் பத்தி இவ்வளவு கவலைப்படற. உன் மேல அன்பு வச்சுட்டு ஒரு ஜீவன் பரிதாபமா சுத்திட்டு இருக்கு. அதைப் புரிஞ்சுக்க மாட்டியா நீ?'' என்றான்.

இதயாவுக்கு லேசாக ஏதோ பிடிபடுகிறாற் போல இருந்தது. ஒரு விதமாக அவனைப் பார்த்தாள். ''என்ன சொல்ல வர்றீங்க?'' என்றாள். குரல் தழைந்து விட்டது.

''ம்... சொரக்காய்க்கு உப்பில்லைன்னு சொல்றேன்.'' என்றான் அவன். அவள்

களுக்கென்று சிரித்தாள். ''ஆதர்ஷ் உங்களுக்கு இப்படியெல்லாம் கோபம் வருமா?''

''கோபம் மட்டுமா... எனக்கு இன்னும் என்னென்னமோ ஃபீலிங் வரும். அதைத்தான் நான் இப்போ சொல்லிட்டு இருக்கேன்'' என்றான்.

அவள் உடனே தன்னை ஒழுங்கு படுத்துவது போல நடித்து விட்டு, ''சரி நான் ஒழுங்கா கேட்கறேன் சொல்லுங்க.'' அவன் குரல் குழைந்து போனது. பார்வை மாறியது. ''ஏய், நிஜமாவே உனக்குப் புரியலையா'' என்றான்.

இதயாவுக்கு கொஞ்ச நாளாவே புரிந்துதான் இருந்தது. ஆனால் இப்போது ஆண் பெண் பழக்கத்தை வைத்து எளிதாக முடிவு செய்வதற்கில்லை. எல்லோருமே இயல்பாகப் பழகுகிறார்கள். இப்படித்தான் சிரிக்கிறார்கள்; பழகுகிறார்கள். அதனால் ஆதர்ஷுக்கு தன் மேல் பெரிய நாட்டம் என்று எப்படி முடிவு செய்து கொள்வது என்ற எண்ணம் அவளுக்குள்ளும் இருந்தது.

ஆனால் ஆதர்ஷ் இப்பொழுது நேரடியாகக் கேட்கவும் திணறிப் போனாள். முகம் சிவந்து விட்டது. அவன் குரலே எழும்பாத ஒரு குரலில் அவளுடைய சிவந்த முகத்தை ரசனையுடன் பார்த்துக் கொண்டு ''இன்னும் புரியலையா உனக்கு? உனக்காக இங்க ஒரு பைத்தியம் ஏங்கிட்டு இருக்கேன்'' என்றான்.

''ஆதர்ஷ்...!'' என்றாள் அவள்.

''ஆமா ஆதர்ஷ் தான். நீ ஆதி ஆதின்னு கூப்பிடுவியே... அந்த ஆதிதான்'' என்றான் அவன்.

ஒரு சில நேரங்களில் அவள் தன்னை மறந்து அவனை ஆதி என்று அழைப்பதுண்டு. இப்பொழுதும் அவள் அதே போல மறுபடியும் ஆதி என்றாள்.

''ஆதியேதான்... ஆதியேதான். இந்த ஆதிதான் இதயா இதயான்னு ஒரு பொண்ணுக்காக ஏங்கிப் போய் கிடக்கறான். தட்டுத் தட்டுன்னு அடிச்சுக்குது... தெரியுதா இதயம்? என் இதயத்தை இந்த இதயாகிட்ட கொடுத்துட்டு'' என்று விளையாட்டாக சொன்னவன் சட்டென்று சிரித்தான்.

''ம்ஹூம்... இந்த டயலாக்கெல்லாம் நம்மளுக்கு ஒத்து வராது'' என்றவன் ஆழ்ந்து பார்த்தான்.

அவள் திணறிப் போய் தலையைக் குனிந்து கொண்டாள்.

சுற்றும் முற்றும் பார்த்தான் ஆதர்ஷ்.

''நல்ல வேளை சுத்தி முத்தியும் யாரும் இல்லை. சொல்லு இதயா. நானும் கொஞ்ச நாளா உன்னைக் கவனிச்சுட்டுத்தான் இருக்கேன். எனக்கும் ஏதோ பட்சி சொல்லுச்சு... என்னடா'' என்று கேட்டான்.

இதயா மெல்ல ஓரக் கண்ணால் அவனை நிமிர்ந்து பார்த்து விட்டு தலையை மேலும் கீழும் ஆட்டினாள். அப்பாடா என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டான் ஆதர்ஷ்.



''ஆதி... நீங்க எப்போயிருந்து...?'' என்று அவள் கேட்டாள்.

''எப்போயிருந்துன்னா தெரியலை. அநேகமாக நாம ஒரு வருஷமா பழகிட்டு இருக்கோம்.

முதல் பார்வை - அந்த கவுன்சிலிங் டிரெயினிங்குக்கு வந்திருந்தியே அப்பவே உன்னைப் பார்த்தவுடனே பிடிச்சிருந்தது. இன்னொண்ணு சொல்லட்டுமா? நானா தேடி வந்து பார்த்த ஒரே பொண்ணு நீங்கதான்.''

''தாங்க்ஸ் ஆதி'' என்றாள். ''இல்லை இல்லை...'' என்று இழுத்தாள்.

''என்ன இல்லை?'' என்றான் அவன்.

''இல்லை... உங்க வீட்ல - எங்க வீட்ல ஒத்துக்குவாங்களான்னு தெரியலையே?'' என்றாள்.

''அதை அப்புறம் பார்த்துக்கலாம். கொஞ்ச நாளைக்கு லெட் அஸ் என்ஜாய் திஸ்'' என்றான். ''அப்படியே ரகசியமாய் பாத்துக்கறது சிரிக்கிறது ரசிக்கறது இதுலெல்லாம் ஒரு த்ரில் இருக்கு தெரியுமா? ம் என் ப்ரெண்ட்ஸ் எல்லாம் மணிக்கணக்கா பேசிட்டிருப்பானுங்க. என்னத்தடா பேசறானுங்கன்னு அப்ப எனக்கு கடுப்பா இருக்கும். இப்பதான் எனக்குத் தெரியுது.

எப்ப எதைப் பார்த்தாலும் அதைப் பத்தி உங்கிட்ட சொல்லணும்னு தோணுது. முக்கியமான ஏதாவது ஒரு விஷயம்னா சொல்லணும்னு தோணுது. பேசிட்டே இருக்கணும் போலத் தோணுது'' என்றான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டு தன் வலது கையில் இருந்த நகத்தை பெருவிரலால் நீவி விட்டுக் கொண்டிருந்தாள்.

''ம் ப்ளீஸ்'' என்றாள் இதயா. அவன் சற்றே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு. ''இவ்வளவு இமிடியட் ரிப்ளை வரும்னு நான் நினைக்கலை.''

''நானும்தான் இப்படி இமிடியட்டா ரிப்ளை கொடுப்பன்னு நானும் நினைக்கலை'' என்றாள் இதயா.

அவன் கலகலவென்று சிரித்தான். ''ரெண்டு பேருக்கும் உள்ள இருந்திருக்குடப்புனு வெளிய வந்திடுச்சு. விடு. அதுக்காக ஏன் இவ்வளவு கவலைப்படறே?'' என்றான்.

அவள் முறைத்தாள். ''கவலைப்படறனா?'' என்றாள்.

''ஆமா... பின்ன எவ்வளவு பெரிய விஷயம் சொல்லியிருக்கேன். உடனே சந்தோஷமா ஒரு பரிசு கிரிசு ஏதாவது கொடுக்கறது...'' என்றான்.

''என்னது பரிசா'' என்றாள் அவள். ''ஆமாம். ஹலோ... நாம எங்க உட்கார்ந்திருக்கோம்னு தெரியுதா?'' என்றாள் அவள்.

''எங்க உட்கார்ந்திருந்தா என்ன? சும்மா இப்படி லேசா கையைத் தொடக் கூடாதா?'' என்று அவன் அவள் கையைப் பிடித்தான்.

அவள் தடுக்கவில்லை. ஆனால் உடனே விடுவிடுத்துக் கொண்டாள்.

''வேண்டாம் ஆதி. இப்போதைக்கு நீங்க சொன்ன விஷயம் முழுசா என் மனசுக்குள்ள இறங்கியிருக்கு. ரொம்ப சந்தோஷமா தான் இருக்கு. ஆனா அதை முழுசா என்னால என்ஜாய்ப் பண்ண முடியாது'' என்றாள்.

''ஏன் அதுக்கென்ன தடை?'' என்றான் அவன்.

''இல்லை... இமயன் இப்படி குழப்பத்துல இருக்கும் போது நான் மட்டும் எப்படி சந்தோஷமா இருக்கறது?'' என்றாள்.

''ஓஹோ இது வேற பிரச்சினையா? இங்க பார்... இமயன் பண்ணினது முட்டாள் தனம். இமயன் தானா வரவழைச்சுக்கிட்டான். அவன் முதல்ல போய் பொண்ணை பார்த்து புடிக்குதான்னு தெரிஞ்சுட்டு அப்புறம் பழகியிருக்கணும்.

ஒண்ணு அறிவுக்காக அழகை விட்டுக் கொடுக்கணும். இல்லை ஒரே முடிவா வேண்டாம்னு சொல்லிடணும். பழகிட்டு இப்படிப் பண்ணினா என்ன அர்த்தம்?'' என்றான்.

''இல்லை. அவனுக்கும் மனசாட்சி இருக்கு. அதனால தான் தான் செய்யறது தப்போன்னு உருகி உருகிப் போறான்.''

''சரி இதயா. இப்ப சொல்லு. இமயவரம்பன் என்ன முடிவுல இருக்கான் சொல்லு.'' என்று கேட்டான்.

''ஆனா அவனுக்கு அனுவினுடைய மனசு, பிகேவியர் எல்லாம் பிடிச்சிருக்கு. ஆனால் அந்த முகம் மட்டும் இவன் எதிர்பார்த்த மாதிரி இல்லை போலிருக்கு'' என்றாள்.

''சரி... நீ என்ன நினைக்கிற? அதைச் சொல்லு'' என்றான்.

இதயா ஒரு நிமிடம் ஆழ்ந்து யோசித்தாள். பிறகு ஒருபெருமூச்சு விட்டு விட்டுச் சொன்னாள். ''இமயவரம்பன் கண்டிப்பாக அனுஸ்ரீயை ஏத்துக்கணும். அதான் நியாயம்னு நான் நினைக்கிறேன்'' என்றாள்.

''குட்... வெரி குட்... நான் உன்கிட்ட இந்தப் பதிலைத்தான் எதிர்பார்த்தேன்'' என்றான் ஆதி.

அவன் கண்கள் அவளை விழுங்குவது போலப் பார்த்தன.

''என்ன இப்படிப் பார்க்கறீங்க?'' என்றாள் அவள் வெட்கத்துடன்.

''இல்லை. எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு. எங்க நீ உங்க அண்ணன்கிறதுனால அவனுக்கு சப்போர்ட் பண்ணி பேசுவியோன்னு நினைச்சேன்.''

அவள் சற்று நேரம் அமைதியாக இருந்தாள்.

பிறகு நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''ஹலோ... நீங்க எங்கிட்ட ஒரு புரொபோஸல் சொல்லியிருக்கீங்க. அதுக்கு நான் ஒரு கண்டிஷன் போடப்போறேன்'' என்றாள்.



''ஏற்கனவே நீங்க சரின்னு சொல்லியாச்சு'' என்றான் ஆதர்ஷ்.

''ஆதி நான் சரின்னு சொல்லிட்டேன். ஆனா நம்ம கல்யாணம் நடக்கணும்னா ஒரு கண்டிசன் இருக்கு'' என்றாள்.

போச்சுடா என்று அவன் தலையில் கை வைத்துக் கொள்ள கையை உயர்த்தினான்.

அவள் சட்டென்று அவன் கையைத் தட்டிவிட்டு கலகலவென்று சிரித்தாள். ''சும்மா நடிக்காதீங்க. நல்லா அப்சர்வ் பண்ணி எனக்கும் உங்களைப் புடிச்சிருக்குன்னு தெரிஞ்சுட்டு டைம் பார்த்து அடிக்கறீங்க. அப்புறம் என்ன நடிப்பெல்லாம்'' என்றான்.

அவனும் மகிழ்ச்சியாகச் சிரித்தான். ''சரி தேவியார் என்ன கண்டிஷன் போடுறீங்களோ போடுங்க'' என்றான்.

''பெரிய கண்டிஷன் எல்லாம் ஒண்ணும் இல்லை. இமயவரம்பனுக்கு விஷயத்தை புரியவச்சு அனுவையும் இமயவரம்பனையும் சேர்த்துவைக்கணும். இதுக்கு நீங்க ஒத்துக்கிட்டிங்கன்னா நானும் கல்யாணத்துக்கு ஒத்துக்கறேன்'' என்றாள்.

அவன் முகத்தில் கோபம் ஏறியது. ''இத பார். இது வேற அது வேற'' என்றான்.

''என்ன ஆதி'' என்றாள்.

''பின்ன உனக்காக அனுமாரு மாதிரி போய் சஞ்சீவி மலைய வேண்ணாலும் எடுத்துட்டு வர்றேன். எனக்கு ஹெல்ப் பண்ணுங்கன்னு கேளேன். ஏன் கண்டிஷன்னு போடறே? அப்ப கண்டிஷன் போட்டுக் கல்யாணம் பண்ற அளவுக்கு நான் என்ன கீழையா போயிட்டேன்?'' என்றான்.

''ஏன்... இதை நிறைவேற்றி வைச்சுட்டு பண்ணக்கூடாத அள்வுக்கு நான் என்ன கீழ போயிட்டனா'' என்றாள் அவள்.

''ஓகே ஒகே சரண்டர்...'' என்று அவன் இரண்டு கைகளை உயர்த்தி சிரித்தான். பிறகு குரலைத் தழைத்துக் கொண்டு. ''இங்க பார் - இப்ப நீ ஆடுறா? ராமா ஆடுன்னா நான் ஆடப் போறேன். எங்கிட்ட போய் கண்டிஷன் எல்லாம் போட்டுட்டு...'' என்றான்.

அவள் வெட்கத்துடன் புன்னகைத்தாள்.

''இப்படி லேசா ஓரக்கண்ணில் பாரு - என்ன வேண்ணாலும் செய்வேன். அதான் பாரதியே சொல்லிட்டானே. 'காதல் பெண்கள் கடைக்கண் பார்வையில்' காற்றில் ஏறி விண்ணையும் சாடுவோம்' அப்படின்னு அவரே பாடியிருக்காரு.''

அவள் முகத்தில் வெட்கம் மின்னியது.

''ஓகே... இமயவரம்பனைப் பக்குவப்படுத்தி அனுஸ்ரீயைக் கல்யாணம் பண்றதுக்கு நான் ஏற்பாடு பண்றேன். நீ அதுவரைக்கும் அப்பப்ப என்னை கவனிக்கணும்'' என்றான்.

அவள் வெட்கத்துடன் அவனைப் பார்த்து முறுவலிட்டு விட்டு, ''என்ன கவனிக்கணுமாம்?'' என்றாள்.

''அதெல்லாம் நாங்க இப்ப சொல்லமாட்டோம். தவணை தவணையா சொல்லுவோம். அப்பப்ப நிறைவேத்தணும்'' என்றான் அவன்.

''ம்'' என்றாள் அவள் வெட்கத்துடன்.

ஆதர்ஷ் கலகலவென்று சிரித்தான்.

''இவ்வளவு நம்பிக்கையா சொல்றீங்க'' என்றாள் அவள். ''பின்னே ஆதி யாருன்னு நினைச்ச? இதயாவைத் திருமணம் செய்து கொள்ளப் போகிற ஆதி குறைவா இருப்பான்னு நினைச்சியா?'' என்றான்.

''எப்படியோ அது நடந்தாத்தான் இது நடக்கும்?'' என்றாள்.

''ஏய் ஏய்... மறுபடியும் அந்த மாதிரி கண்டிஷன் போடாதேன்னு சொல்றேன்.'' என்றான் அவன் உண்மையிலே சற்று கோபத்துடன்.

அவள் சிரித்தாள். ''சரிசரி... நான் கண்டிஷன் போடலை. ரிக்குவஸ்ட் பண்றேன். நடத்திக் கொடுங்க'' என்றாள்.

''இது வேண்ணா நீ சொல்லு. நான் செய்யறேன்'' என்றான்.

''என்ன சொன்னாலும் செய்வீங்களாக்கும்?'' என்றாள்.

''நீ சொல்லிப் பாரு'' என்று ஒரு விதமாகப் பார்க்கவும் அவள் சட்டென்று எழுந்தாள். அவன் சற்றே அவள் அருகில் நெருங்கி வந்தான். ''நீ என்ன சொன்னாலும் கேட்பேன்'' என்றான் அவள் காதோடு.

அவள் வெட்கிப் போய் நின்றாள்.




இதயாவுக்கு வேலையே ஓடவில்லை. திரும்பத் திரும்ப ஆதர்ஷின் பேச்சு அவள் நினைவிலே ஓடிக் கொண்டிருந்தது. 'எவ்வளவு நாசூக்காக ஆனால் பட்டென்று போட்டுடைத்தான். எந்தத் தயக்கமும் இல்லாமல் தன் விருப்பத்தை எவ்வளவு எளிதாக நாகரீகமாக வெளிப் படுத்தினான்.' நினைக்க நினைக்க அவளுக்கு இன்பமாக இருந்தது.

அதே சமயத்தில் இன்னொரு புறத்தில் துன்பமும் இருக்கத்தான் செய்தது. தனது அன்புச் சகோதரன் மனத்துன்பத்தில் இருக்கையில் தான் மட்டும் இப்படி மகிழ்ச்சி அடைவது எந்த விதத்தில் நியாயம் என்ற ஒரு குற்ற உணர்வும் அவளுக்குத்தோன்றியது. கூடவே இன்னொன்றும் அவளை சிந்திக்கச் செய்தது.

அதுதான் அனுஶ்ரீயிடம் இருந்து வந்த போன்.



யாரையோ பிடித்து தன் போன் நம்பரை வாங்கியிருக்கிறாள் பாவம். எப்படிக் கிடைத்தது என்று கேட்டதற்கு 'எப்படியோ பிடிச்சேன்' என்று சொன்னாள்.

தன்னிடத்தில் அவள் பேசிய அந்த நினைவு இப்பொழுது இதயாவின் மனதில். ''ஹலோ. நான் அனுஶ்ரீ பேசறேங்க'' என்றாள் அந்தப் பக்கம் இருந்து. இதயாவுக்கு ஒரு நிமிடம் என்ன செய்வது என்றே தெரியவில்லை. கொஞ்சம் தடுமாறி விட்டு ''சொல்லுங்க'' என்றாள்.

''மேடம்... நான் உங்களை தொந்தரவு படுத்தறதா நினைச்சுக்காதீங்க - ஒரு ஒரே நிமிஷம் மட்டும் நான் உங்ககிட்ட பேசிடறேன். அதுக்கு நீங்க அனுமதி கொடுக்கணும்.''

''அய்யோ என்னங்க அனுமதி கினுமதின்னு பேசறீங்க. சொல்லுங்க. என்ன வேணும் சொல்லுங்க'' என்றாள். ''இல்லை பத்து நாளா இமயாவோட நம்பர் கிடைக்கல'' என்றாள். ''அது... அது அவன் கொஞ்சம் உடம்பு சரியில்லாம இருந்தான். ஹாஸ்பிட்டல்ல இருந்தான்... அதான்'' என்று தடுமாறினாள் இதயா.

''கேள்விப்பட்டேன். நானும் கொஞ்சம் விஷயம் தெரிஞ்சுக்கிட்டேன். அதனால தான் உங்களுக்கு நான் இந்த போனைப் பண்றேன்'' என்றாள்.

'வரப் போவது வம்பா?' என்ற கவலை இதயாவுக்கு தோன்றியது. ஆனாலும் காது கொடுத்துக் கேட்கத் தயாரானாள்.

''இதயா மேடம், எனக்காக நீங்க இமயவரம்பன் கிட்ட ஒரு மெசேஜ் கொடுக்கணும்'' என்றாள். 'அய்யய்யோ இது என்ன வம்பாப் போச்சு. காதல் விடு தூது மாதிரி. தயவு செய்து இவளைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி கெஞ்சுவாளோ. நாம எப்படிப் போய் இமயவரம்பன் கிட்ட வற்புறுத்த முடியும்? இமயவரம்பன் செய்தது தப்புதான். எனக்கும் தான் தெரியுது. ஆனால் படிப்படியாதானே - அவனை சரிபண்ணனும்' என்ற எண்ணங்களும் இதயாவின் மனசில் ஓடியது.

இந்தப் பக்கம் இருந்து பதில் இல்லாததால், ''மேடம்...'' என்று இழுத்தாள் அனுஶ்ரீ.

''இல்லை இல்லை. கவனிச்சுட்டுதான் இருக்கேன். சொல்லுங்க'' என்றாள் இவள்.

''இமயவரம்பன்... நான் கேள்விப்பட்டது நிஜமான்னு தெரியலை. என்னோட சூழ்நிலையில் நான் தெரிஞ்சுக்கணும்னு விரும்பறேன். இஃப் யூ டோன்ட் மிஸ்டேக் மி. ஏதோ சூசைட் அட்டன் பண்ணதா கேள்விப்பட்டேன்'' என்றாள்.

''இல்லையே. ஃபுட் பாய்சன் தானே!'' என்று மறைக்க முயன்றாள் இதயா.

''ப்ளீஸ் மறைக்க வேண்டாம். எனக்குத் தெரிஞ்ச தகவல் நம்பகமான தகவல்தான். ஃபுட் பாய்சன்னு வெளியே சொல்லியிருக்கீங்க. ஆனா எனக்கு சொன்னவங்க இந்த விஷயத்தை லீக் பண்ண மாட்டாங்க. ஆனா எனக்குத் தெரியும். ஏன் இமயன் அப்படிப் பண்ணினாருன்னு தெரியும்'' என்றாள்.

அப்படிச் சொல்லும் பொழுது அனுஸ்ரீயின் குரலில் எல்லையற்ற வேதனை தெரிந்தது. சொல்லொணாத துக்கம் நிரம்பிய அந்தக் குரலைக் கேட்டவுடன் இதயாவின் மனமும் வாடி விட்டது. இப்படி ஒரு நிலைமை எந்தப் பெண்ணுக்கும் நேர வேண்டாம் என்று தோன்றியது.

''உண்மையா!'' எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலைங்க என்றாள் இதயா.

''இல்லை. நீங்க எதுவும் சொல்ல வேண்டாம். நான் சொல்றதை மட்டும் கொஞ்ச நேரம் கேளுங்க'' என்றாள் அனுஸ்ரீ.

''சொல்லுங்க'' என்றாள் இதயா.

''மேடம். நான் சொல்ற மெஸேஜ் மட்டும் நீங்க இமயன் கிட்ட சொல்லிடுங்க. இமயன் தான் புரொபோஸ் பண்ணாரு. ஆனா அப்பவே நான் அவருகிட்ட சொன்னேன். 'நான் ரொம்ப சாதாரண பொண்ணுதான். நான் நடுத்தர குடும்பத்துல இருந்துதான் வரேன். என்னை வச்சு நீங்க எந்தக் கனவும் வளர்த்துக்காதீங்க. மொதல்ல என்னை சந்திச்சிடுங்க. அப்புறமா முடிவு பண்ணுங்க'ன்னு அவருகிட்ட படிச்சு படிச்சு சொன்னேன். ஆனா அவருதான் கொஞ்சம் கற்பனையை வளர்த்துட்டாரோ என்று எனக்கு கவலையா இருக்கு'' என்றாள்.

''ம்'' என்றாள் இதயா.

''கொஞ்சம் சீரியஸா பேச ஆரம்பிச்சப்புறம்தான் கண்டிப்பா 'நீங்க என்னை வந்து பார்த்துட்டு அப்புறமா முடிவு எடுங்க' அப்படின்னு நான்தான் சொன்னேன். ஆனா என்னைப் பார்த்து அவருக்கு இவ்வளவு பெரிய அதிர்ச்சியாகும்னு நான் நினைக்கலை'' என்றாள்.

இதயாவுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. ''இப்ப ஒரு காம்பிலிக் ஆயிடுச்சு. அவனுக்கு இன்னும் சரியான முடிவு எடுக்கத் தெரியலை. தோற்றம், உள்ளம் இது இரண்டுக்கும் இடையில எது மேல உண்மையான அஃபெக்ஷன் வச்சோம்னு தெரியாம தவிச்சிட்டிருக்கான். அந்தக் குழப்பத்துல தான் அவன் ஏதோ இப்படி டிரை பண்ணிட்டான். நீங்க மனசு விட்றாதீங்க'' என்றாள் இதயா.

''இல்லைங்க. எனக்கு ஆறுதல் சொல்லணுங்கற அவசியம் இல்லை. ஏன்னா அடிபட்டு அடிபட்டு எனக்கு பழக்கமாயிடுச்சு. எத்தனையோ விமர்சனங்கள் வாங்கியாச்சு. எவ்வளவோ நேரடி தாக்குதல்கள் - மறைமுக தாக்குதல்கள் எல்லாம் வாங்கி எனக்கு மரத்துப் போச்சு. ஆனா பாவம் இமயன் ரொம்ப மென்மையான மனசு உள்ளவரு. அழகை ஆராதிக்கறவரு. அவருக்கு இது பெரிய அதிர்ச்சியாத்தான் இருக்கும்'' என்றாள் அனுஸ்ரீ.

இந்தக் கட்டத்தில் இதயாவின் மனம் உண்மையிலே நெகிழ்ந்து போனது. தனக்கு நேர்ந்திருக்கிற அவமானத்தைப் பற்றியோ துன்பத்தைப் பற்றியோ வருத்தப்படாமல் அந்தப் பெண் இமயவரம்பனுக்காக உருகிப் போகிறாள். எவ்வளவு நல்ல உள்ளம்! இப்படி ஒரு உள்ளத்தை - இப்படி ஒரு மனசை இழந்தால்



அது இமயவரம்பனுக்குத்தான் நஷ்டம்' என்று இதயாவுக்கு புரிந்தது.

"''சாரிங்க... எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை'' என்றாள் இதயா.

''ஏங்க... நீங்க ஒண்ணும் வருத்தப்பட வேண்டாம். நீங்க ஆஸ் எ சிஸ்டர் ஒரு நல்ல பொண்ணா பார்த்துதானே அவருக்கு கல்யாணம் பண்ணி வைக்கணும்னு நினைப்பீங்க. ஆனா என்னைப் பார்த்து இவ்வளவு ஷாக் ஆவாரு; இப்படி ஒரு முடிவு எடுப்பாருன்னு நான் நினைக்கலை'' என்றாள் அனுஸ்ரீ.

சொல்லும் போதே அவள் குரல் கலங்கி விட்டது. தழுதழுத்தது. அழுதாள் போலும். இதயாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரு நிமிடம் அழ விட்டாள். பிறகு சொன்னாள், ''மனசை தேத்திக்குங்க. நாம லேடீஸ் லைஃப்ல நிறைய அடிபடுவோம். அதனால இதிலிருந்து நம்மளை நாம்தான் காப்பாத்திக்கணும்'' என்றாள் இதயா.

அவள் அந்தப் பக்கம் மூக்கை உறிஞ்சினாள். முகத்தைத் துடைத்துக் கொண்டாள் போலும். ஒரு விநாடி கழித்துச் சொன்னாள். ''புரியுதுங்க. எனக்குப் புரியுது. நான் உங்ககிட்ட ரிக்வெஸ்ட் பண்றதெல்லாம் என்னன்னா இமயன் கிட்ட சொல்லுங்க ஜஸ்ட் என்கிட்ட புரொபோஸ் பண்ணினதுனாலயோ அல்லது என்கிட்ட கொஞ்சம் ப்ரீயா பேசினதுனாலயோ அவருக்கு எந்த பைண்டிங்கும் இல்லை.

அவருகிட்ட சொல்லுங்க. அவரை நிம்மதியா இருக்கச் சொல்லுங்க. இனிமேல் நான் அவரோட வாழ்க்கையில குறுக்கிட மாட்டேன். ஒரு ஆறு மாசன்னாலும் ஆறு மாசம் அவரு கிட்ட எனக்கு நல்ல ப்ரெண்ட்ஷிப் கிடைச்சது. நிறைய விஷயங்கள் தெரிஞ்சுட்டேன். அந்த நட்பு தொடர்பான ஹாப்பினஸ் போதும். அதையே நான் மனசுல நினைச்சுட்டு என் மிச்ச வாழ்க்கையை ஓட்டிடுவேன். என்னால இனிமேல் அவருக்கு எந்தத் தொந்தரவும் இருக்காது.

'அய்யோ! இப்படி நடந்திருச்சே'ன்னு எந்தக் குற்ற உணர்ச்சியும் வச்சுக்க வேண்டியதில்லை. ப்ளீஸ் ஆஸ்க் ஹிம் டு பி ஹாப்பி. அவரு நிம்மதியாவும் சந்தோஷமாவும் ஒரு மூலையில வாழ்ந்திட்டிருந்தார்னா அதுவே எனக்குப் போதும். அதை நினைச்சுட்டே நான் நிம்மதியா இருந்துடுவேன்'' என்றாள்.

இந்தப் பக்கம் இதயாவின் மனது கூட கலங்கி விட்டது.

ஒரு நிமிடம் ஒன்றும் பேசவில்லை.

அதற்குள் அனுஸ்ரீ தவித்துப் போனாள். ''ஹலோ மேடம்'' என்றாள் அந்தப் பக்கம்.

இதயா கலங்கிப் போன குரலில் ''ப்ளீஸ் அனு! நிஜமாவே நீங்க ஒரு அருமையான லேடி. ரொம்ப அற்புதமான பெண். ரொம்ப நல்ல மனசு உங்களுக்கு. இப்ப நான் சொல்றேன் கேளுங்க. உங்க அப்பியரன்ஸ் எப்படி இருந்தாலும் சரி. உங்களை இழந்தால் இமயவரம்பனுக்கத்தான் பெரிய லாஸ். அவன் புரிஞ்சுட்டான்னா நல்லது. புரியலைன்னா அது அவன் துரதிருஷ்டம்.

நீங்க கவலைப்படாம நிம்மதியா இருங்க. நான் என்ன செய்ய முடியும்னு பார்க்கறேன். நீங்களும் மனசு விட்டுடாதீங்க. தெம்பாதான் பேசறீங்க. ஆனா உள்ளுக்குள்ளே உங்களுக்கும் கலக்கம் இருக்கு. எல்லாத்தையும் கடவுள் கிட்ட விட்டுடுங்க. அவரு பார்த்துக்குவாரு'' என்று தன்னால் இயன்ற மட்டும் இதயா அனுஸ்ரீக்கு ஆறுதல் சொன்னாள்.

அனுஸ்ரீக்கும் அந்த நேரத்தில் இந்த ஆறுதல் தேவையாக இருந்தது. ''ரொம்ப நன்றிங்க. ரொம்ப நன்றி. எங்க நீங்க எங்கிட்ட கோவிச்சுக்குவீங்களோன்னு நினைச்சேன்'' - அனுஸ்ரீ.

''எப்படிங்க உங்ககிட்ட கோவிக்க முடியும். நீங்க இவ்வளவு ஃப்ராங்கா, இவ்வளவு எதார்த்தமா, இவ்வளவு நல்லவங்களா இருக்கும் போது எப்படிங்க உங்ககிட்ட கோபிக்க முடியும்? கடவுள் உங்களுக்கு நல்லதே செய்வாருங்க. நானும் உங்களுக்காக பிரார்த்திக்கிறேன். தைரியமா இருங்க'' என்று சொல்லி விட்டு இதயா போனை ஆஃப் செய்தாள்.

அதற்குப் பிறகு அவள் மனம் முழுக்க முழுக்க அனுஸ்ரீயின் பக்கம் சாய்ந்து விட்டது. அவள் எவ்வளவு கோரமான முகம் படைத்தவளாக இருந்தாலும் சரி. நிச்சயமாக மனிதர்களிலே அவள் அபூர்வப் பிறவி. தன்னுடைய நன்மையைப் பற்றி யோசிக்காமல் இமயவரம்பன் மகிழ்ச்சியாக இருந்தால் போதும் என்று எண்ணுகிறாளே - எவ்வளவு உயர்ந்த மனது, என்று எண்ணி அதையே நினைத்து நினைத்து மறுகிப் போனாள்.

அதைத்தான் ஆதர்ஷிடம் கூடப் பகிர்ந்து கொண்டாள். ஆதர்ஷும் கூட இவள் சொன்னதற்குப் பிறகு, 'அந்தப் பெண் உண்மையிலே ரொம்பப் பெரிய பொண்ணாதான் இருக்கணும். ஷி மஸ்ட்பி சிம்ப்ளி கிரேட்' என்று அனுஸ்ரீயை பாராட்டிக் கொண்டான்.

அப்போது தான் இதயா அவனிடத்திலே அதை ஒரு கண்டிஷனாக சொன்னாள்.

''ஆதி... எனக்கு என்னமோ அனுவையும் இமயனையும் சேர்த்து வச்சுட்டு அதற்கப்புறமா நாம கல்யாணம் பண்ணலாம்னு தோணுது'' என்றாள்.

''இது என்னமோ போகாத ஊருக்கு வழி சொல்ற மாதிரி தெரியுது.''

''இல்லை இல்லை. நீங்க நினைச்சா எதுவுமே முடியும். நீங்க பேசற விதத்துல பேசினா இமயனைக் கரைக்க முடியும்'' என்றாள் இதயா.

''ஏங்க... இது மேரேஜ்ங்க. அப்படி கரச்சு கிரைச்சு விஷயத்தை நடத்த முடியாது. அவங்கவங்களுக்கா தோணனும்'' என்றான் ஆதி - நேற்று பேசிக் கொண்டதற்கு. ஆனால் இப்பொழுது இதயா ஒரு முடிவு எடுத்தாள். அலுவலகம் முடிந்தவுடனே தன்னுடைய ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு நேராக இமயவரம்பனிடத்தில் போய் நின்றாள்.



இமயவரம்பன் இப்பொழுதுதான் சற்று தேறியிருந்தான். ஏதோ புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தவன் இவளைப் பார்த்த உடனே ''வா இதயா. நீ இன்னைக்கு ஈவ்னிங் வர மாட்டேன்னு நினைச்சேன்.''

''ஏன்?'' என்றாள் இதயா.

''இல்லை. ஆதியோட ஏதோ ப்ரோகிராம் போட்டுட்டியோன்னு நினைச்சேன்'' என்றான்.

''ஆதியோடவெல்லாம் இந்த வாரத்துக்கு எந்தப் புரோகிராமும் கிடையாது. எல்லா கவுன்சிலிங் கிளாஸுக்கும் ஆதியையே போகச் சொல்லிட்டேன்'' என்றாள் இதயா.

''ஓ அதான் இந்த வாரமெல்லாம் தப்பிச்சுட்டேன் என்று கிண்டல் அடித்தாரா'' என்றான்.

இதயா புன்னகைத்தாள். ''இந்த விளையாட்டுப் பேச்செல்லாம் இருக்கட்டும். நான் உங்கிட்ட முக்கியமான விஷயம் பேசணும்னு வந்தேன்'' என்றாள்.

''சரி சொல்லு. இரு இரு. நான் அதுக்குள்ள போய் காஃபி போட்டுட்டு வரேன்'' என்று நுழையவும் -

அதற்குள் இமயவரம்பனின் தாயே வந்தாள். ''இருடி நானே காபி கொண்டு வரேன்'' என்றாள். கொண்டு வந்து கொடுத்து விட்டு ''சரி ரெண்டு பேரும் பேசிட்டு இருங்க. நான் கோவிலுக்கு போயிட்டு வரேன்'' என்று கிளம்பினாள். இப்பொழுதெல்லாம் இதயா வந்தால் அவளை இமயவரம்பனிடம் பேச விட்டுவிட்டு பெரியவர்கள் இருவரும் ஒதுங்கிக் கொள்ளுகிறார்கள்.

இதயா இமயவரம்பனிடம் பேசிப் பேசி அவனைத் தெளிவித்துக் கொண்டிருக்கிறாள் என்பது அவர்களுக்கும் புரிந்தது.

''இமயன்! இன்னைக்கு நான் ஒரு விஷயம் சொல்லப்போறேன். உன் மனசைத் தயார் பண்ணிக்கோ'' என்றாள் இதயா.

''நீ பேசறதெல்லாம் கேட்டுட்டு தானே இருக்கேன். அதிலேயே ஒண்ணும் ஆகாத மனசு இன்னைக்கு நீ ஏதாவது சொல்லப் போறதுலதான் ஏதாவது ஆயிடப்போகுதாக்கும்.''

''சரி நான் விஷயத்தை சொல்றதுக்கு முன்னாடி நான் ஒரு கேள்வி கேட்கறேன் - அதுக்கு பதில் சொல்லு'' என்றாள் இதயா.

''கேளம்மா கேளு'' என்றான் இமயவரம்பன்.

''இப்பவும் உனக்கு உள்ளத்தை விட தோற்றம் தான் பெரிது என்று தோன்றுகிறதா'' என்றாள்.

இமய வரம்பன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான். ''தெரியலை இதயா. ஆனா அந்த இனிஷியல் ஷாக் முடிந்தவுடனே அனுவோட நல்ல குணங்கள் தான் நிறைய திரும்ப திரும்ப மனசுக்குள் நிழலாடிட்டு இருக்கு.

உண்மையிலே அனு நல்ல பொண்ணுதான். அதான் எனக்கும் என்ன பண்றதுன்னு தெரியலை. என் மனசுகிட்ட நான் பேசிட்டு இருக்கேன். ஆராய்ச்சி பண்ணிட்டு இருக்கேன்னு வச்சுக்கயேன்.''

இதயாவுக்கு அவனுடைய பதில் திருப்திகரமாகவே தெரிந்தது. ''தட்ஸ் ரியலி குட். உன்னோட அஸெஸ்மெண்ட்ல இப்ப நான் சொல்லப் போற பாயின்டையும் சேர்த்துக்கோ'' என்றாள். என்னவாக இருக்கும் என்று கண்களை ஆர்வத்துடன் பார்த்தான் இமயவரம்பன்.

''அனு என்கிட்ட பேசினாப்ல.''

''ஓ'' என்றான் இமயவரம்பன்.

''அனுவுக்கே எப்படியோ உன்னோட சூசைட் அட்டம்ட் தெரிஞ்சிருக்கு'' என்றாள்.

அவன் அதிர்ச்சியாக பார்த்தான். ''அதிர்ச்சியா வெல்லாம் பார்க்காதே அனு தெளிவாதான் இருக்காப்ல. அனு என்கிட்ட ஒரு ரிக்வஸ்ட் பண்ணிட்டாப்ல. உனக்கு ஒரு மெசேஜ் கொடுக்கச் சொன்னாப்ல'' என்றாள்.

இமயவரம்பன் கூர்மையாக அவளைப் பார்த்துக் கொண்டு நிமிர்ந்து அமர்ந்தான். அனு தன்னிடம் சொன்னவற்றையெல்லாம் மீண்டும் ஒரு முறை இமயவரம்பனிடம் ஒப்பித்து முடித்தாள் இதயா.

இமயவரம்பன் சற்று நேரம் வாய்திறக்கவே இல்லை. ''என்ன இமயன் ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறே'' என்றாள் இதயா.

''நீ ஒரு பெரிய விஷயம் சொல்லியிருக்க. நான் அதை ஜீரணிச்சுக்கறேன். எனக்கு கொஞ்சம் டைம் கொடு இதயா'' என்றான்.

இதயாவுக்கு முதல் முறையாக இமயவரம்பனின் சிந்தனை குறித்து ஒரு நம்பிக்கை விதை மனதிலே விழுந்தது.




**க**ண்ணாடி முன் நின்று ஷேவ் செய்து கொண்டிருந்தான் இமயவரம்பன். கை பழக்கத்தின் காரணமாக லாவகமாக தன்னுடைய வேலையைச் செய்து கொண்டிருந்த போதும் அவனுடைய எண்ணம் எங்கெங்கோ ஓடியது. இன்றைக்குத்தான் அலுவலகத்திற்கு கிளம்பிக் கொண்டிருக்கிறான்.

மறுபடியும் வேலைக்கு கிளம்புவது ஒரு வகையில் உற்சாகமாகஇருந்தது. ஆனால் அலுவலகத்தில் யார் யார் என்னென்ன கேட்பார்களோ என்ற கவலையும் இருந்தது.

இந்த தற்கொலை முயற்சி வெளியே பரவாமல் தடுப்பதற்கு எவ்வளவோ



முயற்சிகள் செய்து விஷயத்தை மூடி விட்டார்கள் என்றாலும் கூட அரசல் புரசலாக சில பேருக்கு தெரிந்துதான் இருந்தது. அதனால் இதயாவும் ஆதர்ஷும் அவனுக்கு பலவிதமாக அறிவுரை சொல்லியிருந்தார்கள்.

''வழக்கத்தை விட உற்சாகமாக இன்னைக்கு நீ நடந்துக்கணும். அப்ப கேள்வி கேட்கறவங்களெல்லாம் தானே பதில் சொல்ல முடியாம போயிடுவாங்க'' என்று சொல்லியிருந்தாள் இதயா. அதை முழுவதிலும் மனதில் வாங்கிக் கொண்டவனாக இப்பொழுது விசிலடித்துக் கொண்டு ஷேவ் செய்ய ஆரம்பித்தான் இமயவரம்பன்.

அப்பாவும் அம்மாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

வாய் விசிலடித்துக் கொண்டிருந்தது. கை ஷேவ் செய்கிற வேலையில் இருந்தாலும் கூட எண்ணமெல்லாம் அவனுக்கு எங்கெங்கோ பறந்தது.

எழில்வாணன் ஐயாவும், பத்மஜா அம்மாவும் அவன் நினைவுக்குள் வந்து மோதினார்கள். அந்த அம்மாவின் குள்ளமான உருவம். அம்மைத் தழும்பு நிறைந்த முகம். ஆனால் ஒளி வீசும் கண்கள். முதல் முறை பார்க்கும் பொழுது கொஞ்சம் வித்தியாசமாக தெரிந்தாலும், பழகப் பழக அவர்களுடையதோற்றம் எல்லாம் மறந்து போய் அவர்களுடைய இயல்பும் அவர்களுடைய அன்பும் அவர்களுடைய உபசரிப்பும்தான் அவன் மனத்தில் மேலோங்கி நின்றது.

எழில்வாணன் ஐயாவும் பத்மஜா அம்மாவும் ரிட்டையர் ஆனதற்கு பிறகு என்னத்தைக் கண்டு திருமணம் செய்து கொண்டார்கள் என்று யோசித்தான். அந்த வயதிற்குப் பிறகு தாம்பத்தியமா எதிர்பார்ப்பாக இருக்கும்? இருந்தாலும் அது ஒரு நிலைத்த அன்பாக பல காலம் காத்திருந்து திருமணம் செய்து கொண்டிருக்கிறார்களே. திரைப்படங்களில் பார்க்கிற எந்தக் கதையையும் விட இந்தக் கதை சுவாரஸ்யமாக இருக்கிறது.

வாழ்க்கையைச் சந்தித்து இருக்கிறார்கள். கடமைகளைச் செய்திருக்கிறார்கள். அதற்குப்பிறகு இரண்டு பேரும் நிறைவாக சேர்ந்து வாழ்கிறார்கள். இந்த ஆதர்ஷ் மட்டும் என்ன... எந்த நேரத்திலும் தான் ஒரு அநாதை என்று புலம்புவதில்லை. வளர்ப்பு பெற்றோர்களை அவ்வளவு அக்கறையாக கவனித்துக் கொள்ளுகிறான். மூன்று பேரும் அமர்ந்து புலம்புவது என்றால் எவ்வளவு புலம்ப வேண்டும். ஆனால் அவன் சொந்த முயற்சியால் ஒரு தொழில் அதிபராக நிற்கின்றான்.

அது மட்டும் இல்லை. தன்னுடய வருமானத்தில் ஒரு பத்து சதவீதத்தை அநாதை இல்லங்களுக்காக செலவழிக்கிறான். அதே சமயத்தில் பெற்றோர்கள் இரண்டு பேரையும் அவன் அவ்வளவு அன்பாக கவனித்துக் கொள்ளுகிறான். இரண்டு பேருமே அரசுவேலைகளில் இருந்து ரிட்டையர் ஆனவர்கள் என்பதால் இரண்டு பேருக்குமே பென்ஷன் வசதிகள் என்று இருந்தாலும் இவன் அவர்களை எதிர்பார்க்காமல் தன்னுடைய வருமானத்தைத் தான் அவன் செலவு செய்கிறான்

என்றெல்லாம் பத்மஜா அம்மாவும் எழில்வாணனும் பெருமையாக சொல்லும் பொழுது இமயவரம்பனுக்கு ஆச்சரியமான ஆச்சரியம்.

இவர்கள்தான் வாழ்க்கையை அழகுபடுத்திக் கொள்ளத் தெரிந்தவர்கள். யாருக்கு இல்லை துக்கம் வாழ்க்கையில்? யாருக்கு இல்லை சோகம் வாழ்க்கையில்? ஆனால் இந்த மூன்று பேரும் இணைந்து வாழ்கிற இந்த ஒரு வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியைக் கொடுத்துக் கொள்ளுகிறார்கள்.

''இதல்லவா வாழ்க்கை?'' என்று தோன்றுகிறது. மீண்டும் ஒரு முறை அந்த நினைவு அவனுக்குத் தோன்றியது. முதல்முறையாக பத்மஜா அம்மாவைப் பார்க்கும் பொழுது - அவருடைய கறுப்பு நிறமும், குள்ளமான உருவமும், அம்மைத் தழும்பு முகமும் அவனுக்கும்தான் சற்று பிடிக்காதது மாதிரி இருந்தது.

ஆனால் பழகப் பழக அப்படியே அந்த உணர்வு மறைந்து போனதே... எப்படி என்று எண்ணிக் கொண்டிருக்கும்போதே இன்னொரு எண்ணமும் அவன் விரும்பா விட்டாலும் அவனுள்ளே வந்து குதித்தது. ஒரு வேளை அனுவிடமும் இப்படிப் பழகப் பழக அவளுடைய தோற்றம் மறைந்து விடுமோ? அவளுடைய அறிவார்ந்த பேச்சு, கவிதை, புத்தகங்கள் படிக்கிற பாங்கு இதெல்லாம்தான் மனசுக்குள் மேலோங்கி நிற்குமோ?

எவ்வளவு பண்பான பெண் என்பது அவளுடைய ஒவ்வொரு பேச்சிலும் தெரிகிறது - என்ற எண்ணம் தோன்றியது. இதற்காகத்தான் இதயா பத்மஜா அம்மாவையும் எழில்வாணன் அய்யாவையும் அறிமுகப்படுத்தினாளோ? எத்தனையோ பேர் கவுன்சிலிங் செய்வதற்கு இருந்தாலும் அவள் குறிப்பாக ஆதர்ஷை அழைப்பதற்கு காரணம் இதுதானோ. ஒருவேளை ஆதர்ஷுக்கும் இதயாவுக்கும் ஒரு ஈடுபாடு இருக்கிறதோ ஈர்ப்பு இருக்கிறதோ? என்ற எண்ணமும் அவனுக்குத் தோன்றியது.

அதை அப்புறம் பார்க்கலாம். இப்போதைக்கு தான் அனுவைக் குறித்து ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக அவன் மனத்திலே இருந்தது. 'பாவம் என்னைப் பார்த்ததில்தான் அவருக்கு அதிர்ச்சியாகி இருக்கிறது. என்னைத் திருமணம் செய்து கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை அவர் மகிழ்ச்சியாக இருந்தால் போதும். நான் முதலில் இருந்தே அவர் என்னை திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. முதலிலிருந்தே அவர் என்னைப் பார்த்ததற்கு பிறகுதான் முடிவெடுக்க வேண்டும் என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தேன். அவருடைய வாழ்க்கை நன்றாக இருந்தால் போதும். அவருக்குப் பிடித்த பெண்ணைப் பார்த்து திருமணம் செய்து கொள்ளச் சொல்லுங்கள்' என்று இதயாவிடம் சொன்னாளாமே.

அப்படி சொல்வதற்கு எத்தனை உயர்ந்த பண்பு இருக்க வேண்டும். எத்தனை உயர்ந்த தியாக மனப்பான்மை இருந்திருக்க வேண்டும். தான் எத்தனை முறை அந்த இளம் பெண்ணிடத்திலே அவளைத் தூண்டி விடுகிற மாதிரி



பேசியிருக்கிறோம். ஆனால் அதையெல்லாம் தூரத்திலே நிறுத்தி வைத்துவிட்டு அறிவார்ந்த பெண்ணாக யோசித்திருக்கிறாளே! நாம் இப்போது மனதில் இடம் கொடுத்தால் நாளைக்கு பிரச்சினைகள் வரலாம் என்பதைப் புரிந்துகொண்டு 'முதலில் நீங்கள் என்னைப் பாருங்கள். அதற்குப் பிறகு முடிவு செய்துகொள்ளலாம்' என்றே சொன்னாள்.

'நிறைய காயப்பட்டிருக்கிறாள் போலும் - அவளுடைய தோற்றத்தைப் பற்றி நிறைய விமர்சனங்கள் வாங்கியிருக்கிறாள் போலும்.' என்று எண்ணியவுடனே அவன் ஆழ் மனதில் இருந்து அனுஸ்ரீயின் மேல் அன்பு பொங்கிக் கொண்டு வந்தது.

இப்படிப் பட்ட நல்ல பெண்கள் சந்தோஷமாக வாழவில்லை என்றால் இந்த வாழ்க்கையில் என்னதான் இருக்கிறது. முடிந்த வரை நான் அவளை சந்தோஷப்படுத்த வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான்.

மனம் இப்பொழுது தெளிவாகி இருந்தது. குழப்பங்களெல்லாம் தீர்ந்து ஒரு மகிழ்ச்சி அலை அவன் அடிவயிற்றில் இருந்து பொங்கியது. அதே உற்சாகத்துடன் அலுவலகத்துக்குக் கிளம்பினான். கிட்டத்தட்ட முடிவெடுத்த மாதிரித்தான் என்று எண்ணிக்கொண்டு அம்மாஅப்பாவிடம் சொல்லிக்கொண்டு, 'அம்மா இப்பொழுது எனக்கு புடிச்சதா செஞ்சு கொடுப்பீங்களா' என்று கேட்டான். 'ஆமாடா உனக்குப் புடிச்ச பருப்பு சாதத்தை என்னமோ பிரியாணி அளவுக்கு பேசிக்கிறவங்க நீங்க ரெண்டு பேருதான்' என்று சிரித்தார் அப்பா திருச்சிற்றம்பலம்.

அமுதா கணவனைப் பார்த்து ''உங்களுக்கு நாங்க ரெண்டு பேரும் சந்தோஷமா இருந்தாலே பொறுக்காதே'' என்றாள்.

திருச்சிற்றம்பலம் அதைக் கண்டுகொள்ளவில்லை. ''சரிப்பா. நல்லா சாப்பிடு. கூட என்ன கொடுத்திருக்கா சைடு டிஷ்.?'' அம்மா சொன்னாள் ''அவனுக்கு புடிச்ச உருளைக்கிழங்கு பொரியல் வறுத்துக் கொடுத்திருக்கேன்'' என்று.

''சரி சரி எங்களை நினைச்சுட்டே வெட்டு'' என்றுகேலி செய்து கையாட்டி வழியனுப்பிவிட்டு உள்ளே வந்தார்.

''கொஞ்சம் தேறிட்டான்னுநினைக்கிறேன். தேறிட்டானோ - இல்லை தேர்ன மாதிரி நடிக்கிறானோ தெரியலை'' என்றார் மனைவியிடம்.

''தேர்னமாதிரி நடிச்சாலும் நாம கண்டுக்கக் கூடாதுங்க. அதை அப்படியேதான் ஏத்துக்கணும்'' என்றாள் அமுதா. சிற்றம்பலம் திரும்பி அவளை ஆச்சரியமாகப் பார்த்தார்.

''அமுதா! நீ கூட சிலநேரம் புத்திசாலித்தனமா பேசறே?'' என்றார்.

''ஆமா எனக்கு வேண்டியதுதான்'' என்று அவள் தோளில் முகவாய்க் கட்டையை இடித்துக் கொண்டு போவதை ரசித்து சிரித்துக் கொண்டிருந்தார்.

அலுவலகத்தில் இமயவரம்பன் நுழைந்தவுடனே எல்லோரும் எதையும் காட்டிக் கொள்ளாமல் அவனை மகிழ்ச்சியாகவே வரவேற்றார்கள். மேனேஜர் ''என்னப்பா என்னத்தை சாப்பிட்ட புட் பாய்சன் ஆகுற அளவுக்கு? எங்கோ கல்யாண வீட்ல வச்சாங்களா?''

''ஆமாம்பா, இப்பவெல்லாம் கல்யாண வீட்டுச்சாப்பாடுன்னு சாப்பிடறோம். சில இடங்கள்ல சேந்துக்குது. சில இடங்கள்ல சேர்றது இல்லை'' என்றார் அவன் வாயைப் பிடுங்குவதுபோல. அவன் மையாக சிரித்து விட்டு தன்னுடைய இடத்திற்குப் போனான்.

உடன் பணியாற்றுகிற சக ஊழியர்கள் எல்லாம் அவனுடைய டேபிளுக்கு வந்து ஒரு சில நிமிடங்கள் பேசிவிட்டுச் சென்றார்கள். அவனும் அவரிடத்தில் எந்த உணர்வையும் காட்டாமல் சிரித்தபடி பேசிக் கொண்டிருந்து விட்டு அலுவலக மேஜையிலிருந்த ஃபைல்களை புரட்டிப் பார்த்தான்.

மேனேஜர் மறுபடியும் அழைத்தார். திரும்பப் போனான். ''நிறைய வேலை பாக்கியிருக்குப்பா. ஃபிஃப்டீன் டேஸ் வரைக்கும் வைக்க முடியாத வேலையெல்லாம் பிரிச்சுக் கொடுத்துட்டேன். ஆனால் நீ மட்டும் செய்யற வேலைன்னு பாக்கி இருக்கறதை மட்டும் உன் டேபிளில் வச்சிருக்கேன். முடிஞ்ச வரைக்கும் பாரு. உடம்பு சரியில்லாமல் வந்திருக்கே - ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணிக்காதே.'' என்றார்.

''தாங்க்ஸ்ங்க சார்'' என்று சொல்லிவிட்டு திரும்பவும் தன்னுடைய டேபிளுக்கு வந்தான். தன்னுடைய செல்ஃபோனை எடுத்தான். அனிச்சையாக எடுத்தான். அது அவனுக்கு வழக்கம். எப்போதும் தன்னுடைய டேபிளில் வந்து அமர்ந்தவுடனேயே அனுஸ்ரீக்கு ஒரு குட்மார்னிங் மெசேஜ் அனுப்புவது வழக்கம். செல் போனை எடுத்ததற்குப் பிறகுதான் யோசித்தான். இப்போது அனுப்பலாமா வேண்டாமா என்று ஒரு எண்ணம் தோன்றியது.

பெருமூச்சு விட்டு விட்டு மறுபடியும் செல்போனில் மெசேஜ் அனுப்பினான். ''குட் மார்னிங் அனு. ஐ ஆம் வெரி சாரி பார் ஆல் தட் ஹாப்பன்ட்'' என்று அனுப்பினான். அனுஸ்ரீயிடம் இருந்து குட் மார்னிங் என்று மட்டும் பதில் வந்தது.

''நல்லாயிருக்கீங்களா'' என்று மறுபடியும் ஒரு மெசேஜ் வந்தது.

''ரொம்ப நல்லா இருக்கேன். சரி, நான் அப்புறம் பேசறேன்'' என்று அனுப்பினான்.

அந்தப் பக்கம் இவனுடைய மெசேஜை வாங்கிய அனுஸ்ரீ திகைத்துப் போனாள் இனிமேல் இமயவரம்பன் தன்னை தொடர்பு கொள்ள மாட்டான் என்று தான் எண்ணியிருந்தாள். தன் வாழ்க்கையில் வந்த அழகான ஒரு நட்பு தேவையில்லாத இந்த ஒரு புரபோஸலினாள் தடைபட்டுப் போனது என்ற



வருத்தம் தான் உண்மையில் அவளுக்கு மிஞ்சியது. தனக்கு ஒன்றும் பெரிதாக காதல்கல்யாணம் நடந்து விடும் என்ற எதிர்பார்ப்பெல்லாம் அவளுக்கு இல்லை. ஒரு வேளை தன்னுடைய வேலை சம்பளம் இவற்றை ஏற்றுக் கொள்வது என்று வந்தால் வரக்கூடும். அப்படி ஒரு வாழ்க்கை தனக்குத் தேவையில்லை என்றுதான் அவள் முடிவு செய்திருந்தாள்.

ஆனால் இமயவரம்பனுடைய பேச்சும் அவனுடைய ரசனையும் அவனுடைய சிந்தனையும் அனுஸ்ரீயினுடைய உள்ளத்தில் ஒரு பெரிய உயரத்தை ஏற்படுத்தித்தான் இருந்தது. ஆனாலும், இது எட்டாக் கனி என்ற பயத்திலேதான் அவளும் என்னை வந்து பார்த்து விட்டு பிறகு முடிவு செய்யுங்கள் என்று திரும்பத் திரும்ப சொல்லியிருந்தாள்.

ஆனால், 'இப்பொழுது என்ன நடக்கிறது. இது என்ன இது இமயவரம்பன் தன்னிடம் தொடர்பு கொள்ளுகிறாரே' என்று அதே சிந்தனையிலேயே நண்பகல் வரைக்கும் அவள் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வேலையிலும் மனது செல்லவில்லை. ஆனால் முடிக்க வேண்டிய வேலைகள் நிறைய இருந்தது என்பதால் இந்தச் சிந்தனையை ஒரு பக்கம் ஒதுக்கி விட்டு நண்பகல் வரையிலும் வேலையில் மூழ்கினாள். சொல்லப்போனால் இந்தப் பதினைந்து நாட்களாக வேலை தான் அவளைக் காப்பாற்றியது. மனதில் ஏற்பட்ட சிந்தனைகள், குழப்பங்கள் இவைகள் எல்லாவற்றையுமே அவள் வேலையில் மூழ்குவதன் மூலமாகத்தான் ஜெயித்துக் கொண்டிருந்தாள். இப்போதும் அப்படித்தான். நண்பகலில் வந்து சாப்பிட அமர்ந்தாள். டிபன் பாக்ஸை திறந்த பொழுது மறுபடியும் மெசேஜ் வந்தது.

எடுத்துப் பார்த்தாள். இமயவரம்பனிடம் இருந்து வந்தது. ஒரு நிமிடம் திகைத்துப் போனாள் அனுஸ்ரீ.

'அனுஸ்ரீ! நான் உன்னை நேசிக்கிறேன் - முழு மனதாக' என்று அவனிடமிருந்து வந்த குறுஞ் செய்தி அவளை திகைப்பில் ஆழ்த்தியது. அதே சமயத்தில் கண்களில் கண்ணீரும் நிரம்பியது. அவள் உடனே மறுமொழி அனுப்பினாள். ''ப்ளீஸ் டோன்ட் டீஸ் மி. இதையெல்லாம் இனிமேல் தாங்கற சக்தி எனக்கு இல்லை'' என்று அனுப்பினாள்.

அனுப்பிய மறுகணம் செல்போன் ஒலித்தது. அவள் கையிலே எடுத்தாள். ''அனு நான் இமயவரம்பன்தான் பேசறேன். ஐ ஆம் சாரி. நான் இப்ப ஒரு புது இமயவரம்பன் பேசறேன். வாழ்ந்தா அனுஸ்ரீயோட தான் வாழ்வேன் என்று முடிவு பண்ணியிருக்கிற இமயவரம்பன். அனுஸ்ரீயினுடைய உள்ளத்தை... அனுஸ்ரீ எப்படி இருக்காளோ அப்படியே முழுசா ஏத்துக்கற இமயவரம்பன். ஏத்துக்கறது என்ன... வாழ்ந்தா உன்னோடதான் வாழணும்னு விரும்பற இமயவரம்பன் பேசறேன்'' என்றான்.

இந்தப் பக்கம் அவள் பேசத் தெரியாதவளாக ஒரு நிமிடம் மவுனம் சாதித்து

விட்டு பிறகு குலுங்கிக் குலுங்கி அழலானாள்.

''ஏய்! ஏய்'' என்று அவன் அந்தப் பக்கம் திணறிப் போனான்.

சட்டென்று போனை ஆஃப் செய்து விட்டாள் அனுஸ்ரீ.

அந்தப் பக்கம் இமயவரம்பன் திகைத்துப் போனான்.




இமயவரம்பனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அந்தப் புறம் அனுஸ்ரீ அழுத அழுகை அவன் நெஞ்சைக் கரைத்தது. ''அனு! ப்ளீஸ் அனு, அழாதே! நாம இன்னைக்கு சந்திக்கலாம். இன்னைக்கு ஈவினிங் கண்டிப்பா சந்திக்கலாம். அதே கோவில்ல சந்திக்கலாம்'' என்றான்.

''இல்லைங்க வேண்டாம்'' என்றாள் அவள்.

''இல்லை, கண்டிப்பா நாம சந்திக்கிறோம். நான் ஃபோனை வைக்கிறேன். நான் அங்க வெயிட் பண்ணிட்டு இருப்பேன். நீ வரலைன்னா எவ்வளவு நேரம் ஆனாலும் அங்க தான் வெயிட் பண்ணிட்டிருப்பேன். இன் கேஸ் நீ நைட் வரலைன்னு வச்சுக்கோ. அந்தக் கோவில் வாசல்லே ப்டுத்துத் தூங்குவேன்'' என்றான். அனுஸ்ரீக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. ''என்ன வர்றியா?'' என்றான்.

அவள் அரை மனதாக 'ம்' என்றாள்.

அதே போல வரவும் செய்தாள். ஆனால், அவன் எதிர்பார்த்த அனுஸ்ரீயாக வரவில்லை. இதற்கு முன்பு அவளைச் சந்தித்த பொழுது ஒரு தாழ்வு மனப்பான்மையோடு சற்றே தயங்கி தயங்கிக் கொண்டிருந்த அனுஸ்ரீயாக இல்லாமல் நிமிர்ந்த பார்வையுடன் வந்தாள் அனுஸ்ரீ.

'அனு' என்று இவன் ஆர்வமாக நாலு எட்டு வைத்து அவள் அருகிலே போய் நின்றான்.

'உட்காரலாமா' என்றாள் அனுஸ்ரீ. அவள் குரலிலே ஒரு வறட்சி தென்பட்டது. ஏதோ ஒரு அழுத்தமான முகபாவம், அழுத்தமான ஒரு உணர்வு அவளிடத்திலே இருப்பதை இமயவரம்பனால் புரிந்து கொள்ள முடிந்தது.

'சரி! உட்காரலாம்' என்றான்.

அவர்கள் அந்தக் கோவிலின் சுற்றுப் பிரகாரம் அமைந்திருந்த இடத்தில் ஒரு மரத்தடியிலே இரண்டு கல் பலகைகள் போட்டிருந்தார்கள். அதன் மேல் அமர்ந்தார்கள். சுற்றுப் பிரகாரம் என்றால் அது வெட்ட வெளி மட்டும்தான்.



தமிழ்த்தேன் பதிப்பகத்தின்

புதிய வெளியீடு!

ஜெய்சக்தி எழுதிய

பேசிவிடு மனமே

பேசிவிடு...!

(முழுநாவல்)

விபரங்களுக்கு:

தமிழ்த்தேன் பதிப்பகம் பழைய எண். 26, புதிய எண். 23,
இராஜா அண்ணாமலை ரோடு,
சாய்பாபா காலனி, கோயமுத்தூர் - 11. தொலைபேசி 0422 - 4202731

அவர்கள் இரண்டு பேரும் அமர்ந்தவுடன் சற்று நேரம் ஒரு சங்கடமான அமைதி நிலவியது. அந்த அமைதியை கலைப்பவன் போல இமயவரம்பன் ''இரு, கோவில் பிரசாதம் வாங்கிட்டு வரேன். இங்கே புளி சாதம் தேங்காய் சாதம் நல்லாயிருக்கும், சர்க்கரைப் பொங்கல் வாங்கிட்டு வரட்டுமா'' என்றான்.

அவள் ஒன்றும் சொல்ல வில்லை.

அவன் எழுந்து போய் கொப்பரைகளில் வைக்கப்பட்ட அந்தப் பிரசாதத்தை, ஆளுக்கு மூன்று - தொன்னை என்று சொல்லப்படும் - கொப்பரைகளை வாங்கிக் கொண்டு வந்தான். அவளிடத்திலே நீட்டினான். அவள் கையிலே ஒன்றைக் கொடுத்து விட்டு மற்ற இரண்டு தொன்னைகளையும் அருகிலே வைத்தான்.

அவள் மறுக்காமல் வாங்கிக் கொண்டாள். மெதுவாக இரண்டு பேரும் சாப்பிட்டார்கள். ''அனு இதோ பாரேன், இயற்கையான கப்! அந்தக் காலத்திலெல்லாம் இப்படித்தான் யூஸ் பண்ணியிருக்காங்க. யூஸ் அன் த்ரோ சாப்பிட்டுட்டு தூக்கி எறிஞ்சுட்டு போயிட்டே இருக்கலாம். இயற்கைக்கு கூட எந்த விதமான டிஸ்டர்ப்பென்சும் இல்லை'' என்றான்.

அவள் மையமாக தலை அசைத்தாள். பிறகு மெல்லிய குரலில் ''நீங்க ரொம்ப வற்புறுத்தறீங்கன்னுதான் நான் வந்தேன்'' என்றாள்.

அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான். ''ஏன், அனு கோபமா'' என்றான்.

''இல்லை, வருத்தம், ஆழ்ந்த வருத்தம்'' என்றாள்.

அவன் ஒரு விதமான திகைப்புடன் அவளைப் பார்த்தான். அவன் வலது புறத்தில் அவள் அமர்ந்திருந்தாள்.

''சாரி அனு. நான் செஞ்சது பெரிய மடத்தனம்னு எனக்குப் புரியுது. ஆனா இப்ப நான் தெளிஞ்சுட்டேன்'' என்றான்.

அவள் சற்றே கோபமாக அவனைப்பார்த்தாள்.

''இப்ப நீங்க தெளிஞ்சிட்டீங்க. ஆனா என் மனசுல விழுந்த அடி?'' அவன் சற்று திகைத்துப் போனான். ''நல்லா யோசிச்சுப் பாருங்க. இதை விட ஒரு பொண்ணை அவமானப்படுத்த முடியுமா? ஒரு பொண்ணைப் பார்த்தேன் பிடிக்கலை அப்படின்னு சொல்லிட்டுப் போயிருக்கலாம். அதை விட்டுட்டு அதுக்காக போய் தற்கொலை முயற்சின்னா இதைவிட கேவலப்படுத்தியிருக்க முடியாது.''

''அனு'' என்றான் அவன் வாயடைத்துப் போய்.

''ஆமாங்க. அந்த அளவுக்கு என்னுடைய தோற்றம் அதிர்ச்சி ஏற்படுத்தியிருக்குன்னா, அதுக்கப்புறம் எதுக்காக மறுபடியும் என்னை பார்க்கணும், பேசணுங்கறீங்க? யூ டோன்ட் லவ் மி. உங்களுக்கு என் தோற்றத்தின் மேல தான் அட்ராக்ஷன் இருந்ததா?'' என்று கேட்டாள்.

இமயவரம்பன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

''நீ கேட்கற கேள்வியெல்லாம் கரெக்ட்தான். ஆனா இதைப்பத்தி நானும் யோசிச்சேன். நான் கோழைத்தனமா அந்த முடிவு எடுத்தேனான்னு எனக்குத் தெரியலை. கோழைத்தனம் தான். தற்கொலை முயற்சி யார் செஞ்சாலும் கோழைத்தனம்தான். உன் மேல வச்சிருந்த ஆழமான அன்பு தான் என்னோட இந்த முடிவுக்கு காரணம் என்று நினைக்கிறேன்'' என்றான்.

''நெவர். நீங்க ஒரு கற்பனை உருவமாக என்னை மனசுல வச்சுட்டு இருந்தீங்க. அந்த உருவத்துக்கும் உண்மையான உருவத்துக்கும் இடையில இருந்த வேறுபாட்டை உங்களால சகிச்சிக்க முடியலை'' என்றாள் அனு.

அவன் அவளை வியப்புடன் பார்த்தான். ''கரெக்ட். உண்மைதான்.''

''நான் அதுக்காகத்தான் சொன்னேன். என்னை சந்திச்சதுக்கப்புறம் எந்த



முடிவையும் எடுங்க அப்படின்னு'' என்றாள்.

''இதுவும் உண்மைதான்'' என்றான் இமயவரம்பன். அவன் எல்லாவற்றிற்கும் தலையை உருட்டுவதைப் பார்த்தவுடன் அவளுக்கு திகைப்பாக போய் விட்டது. ''நீ பேசி முடிச்சுட்டியா'' என்றான்.

அவள் வாயடைத்துப் போய் அவனைப்பார்க்க அவன் தொடர்ந்தான். ''உண்மைதான். அந்த சமயத்துல எனக்கு வாழ்க்கையோட ஆழம் புரியலை. ஆனா அதே சமயத்துல நான் உன் மேல வச்ச அன்பு நிஜம். அது கற்பனை உருவம்னா உன்னுடைய உள்ளம் - உன்னுடைய அறிவு - உன்னுடைய மனசு - இதையும் நான் வடிவமாக்கி வச்சிருந்தேன். மே பி உன்னோட வெளித்தோற்றம் அதுக்கு ஒத்துப் போகலை. அந்த அதிர்ச்சி ஏற்பட்டுச்சுத்தான். ஒத்துக்கறேன். ஆனா அதுக்கப்புறம் நான் ரொம்ப யோசிச்சேன் அனு.''

அனு அவனை ஆர்வமாக பார்க்க ஆரம்பித்தாள். ''இப்ப நான் உங்கிட்ட ஏதோ அனுதாபப் பட்டோ நடந்து போன தப்பை திருத்திக்கறதுக்காகவோ வரலை அனு. நான் இந்தப் பதினைந்து நாளா வீட்ல என்ன செஞ்சேன்னு நினைச்சே? என்னை நானே சுய பரிசோதனைக்கு உட்படுத்திட்டேன். நான் நேசித்த அனு இல்லாம வாழ முடியுமான்னு இந்த பதினைந்து நாள் யோசித்துப் பார்த்தேன். இருந்து பார்த்தேன். என்னால முடியலை அனு. உன்னோட அறிவான அந்தப் பேச்சு, உன்னுடைய அழகான மெசேஜஸ், உங்கிட்ட எல்லாத்தையும் பகிர்ந்துகிட்ட அந்தப் பகிர்தல் இதெல்லாம் இல்லாம இனிமேல் என்னால வாழ்க்கை நடத்த முடியும்னு தோணலை அனு.''

அனு இப்பொழுது கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

''உன்னோட கோபம் நியாயமானது. நீ சப்பு சப்புன்னு நாலு அறை விட்டால் கூட நான் வாங்கிக்கறேன். ஏன்னா உன்னோட அருமையும் எனக்குப் புரியலை. வாழ்க்கையோட அருமையும் எனக்குப் புரியலை.''

இப்பொழுது அனு அமைதியாகி விட்டாள். ''நல்லா யோசிச்சுக்கங்க'' என்றாள்.

''இந்தப் பதினைந்து நாளா இதயாவும் ஆதர்ஷும் என்கிட்ட உட்கார்ந்து ரொம்ப நேரம் பேசினாங்க அனு. அப்பதான் வாழ்க்கைன்னா என்னன்னு புரிஞ்சது'' என்று எழில்வாணனையும் பத்மஜா அம்மாவையும் சந்தித்தது பற்றி சொன்னான்.

அனு கூட மகிழ்ந்து போனாள். ''இப்படியெல்லாம் மனுஷங்க இருக்காங்களா'' என்றாள். ஆனால் அந்த மகிழ்ச்சியுடனே முகம் வாட்டமாக மாறிப் போனது.

''என்ன ஆச்சு இப்ப'' என்றான்.

''இல்லை. இப்பவும் இதயா ஆதர்ஷ் இவங்களெல்லாம் பண்ணின

இன்புளுயன்ஸ்ல தான் - அவங்க ரெண்டு பேரையும் பார்த்ததுலதான் உங்களோட திங்கிங்கை மாத்தியிருக்கீங்களோ அப்படின்னு தோணுது'' என்றாள்.

''அட, ஆண்டவா'' - அவன் தலையிலே அடித்துக் கொண்டான்.

அனு தன்னை மறந்து புன்னகைத்து விட்டாள்.

பிறகு இமயவரம்பன் சொன்னான். ''இதெல்லாம் என்னை யோசிக்க வச்சது நிஜம்தான். நிறைய பேருடைய வாழ்க்கையை அதுக்கப்புறம்தான் நான் அப்சர்வ் பண்ணிப் பார்த்தேன். வாழ்க்கையை அழகின் அடிப்படையில் மட்டும் அல்லாமல் அன்பின் அடிப்படையில் நீ வச்ச அன்பு எவ்வளவு ஆழமானதுங்கறது எனக்குப் புரிந்தது. ஏன்னா, எவ்வளவு அன்பு இருந்திருந்தா 'நான் வருத்தப்படலை. அவரு மகிழ்ச்சியா இருந்தாப் போதும். அவருக்கு யாரைப் பிடிக்குதோ கல்யாணம் பண்ணிக்கச் சொல்லுங்க' என்று சொல்லியிருப்பே இல்லை'' என்றான்.

அனு ஒன்றும் பேசவில்லை. ''இந்த மாதிரி சொல்றதுக்கு எவ்வளவு பெரிய மனசு வேண்டும். அந்த மனசைத்தான் நான் காதலிக்கிறேன். விடு. உனக்கு விருப்பம் இல்லைன்னா நாம சாதாரண தம்பதிகள்போல வாழணுங்கறது கூட இல்லை அனு. நான் உன்கூட இருந்தாப் போதும். இன்னும் பர்சனலா பார்த்தா இந்த உருவத்தை மீறின அழகு எனக்குத் தெரியும். இன்னைக்கே உன் மூக்கு எடுப்பா இருக்கற மாதிரி தெரியுது.

சில பேரைப் பார்த்த உடனே அழகாத் தெரிவாங்க. சில பேர் பழகப் பழகத்தான் அழகாத் தெரிவாங்க. எனக்கென்னமோ உன் கூட வாழ்ற அனுபவம் தான் ரொம்ப இனிமையான அனுபவமாக இருக்கும்னு தோன்றுகிறது.''

அனு சற்று நேரம் அமைதியாக இருந்தாள். 'யோசிக்கட்டும்' என்று அவனும் விட்டு விட்டான். ''சரி அனு நான் இப்ப கிளம்பறேன். இன்னும் இரண்டு நாள் கழித்து நாம சந்திக்கிறோம்'' என்றான். அதே போல சந்தித்தார்கள். இப்போது சந்தித்த இடம் தனி இடம்.

இதற்குள்ளாக அனுவினுடைய வாதத்தை ஆதர்ஷிடமும் சொல்லியிருந்தான் இமயவரம்பன். அப்போது ஆதர்ஷ் அவனிடம் ஒரு வேண்டுகோள் வைத்தான். ''இமயன் இந்த விஷயத்தை நீங்க இதயாகிட்ட சொல்ல வேண்டாம். நான் இதயாகிட்ட சொல்லிக்கிறேன். எனக்கு இதயாகிட்ட ஒரு கணக்கு இருக்குது'' என்று சொல்லி விட்டான். ''சரிப்பா ''நீயாச்சு இதயாவாச்சு'' என்று சிரித்துக் கொண்டான் இமயவரம்பன்.

தாங்கள் தனி இடத்தில் சந்திக்கும் போது அனு மலர்ந்த முகத்தோடு வருவதை பார்த்தே அவளுடைய பதிலை உணர்ந்து கொண்டான் இமயவரம்பன்.



இப்பொழுது அவர்கள் ஒரு நண்பனுடைய கெஸ்ட் ஹவுசில் சந்தித்திருந்தார்கள். ''அப்புறம் அனு'' என்றான் அவன்.

அவள் அவனை நிமிர்ந்து பார்ப்பதும் பிறகு தலையைக் குனிந்து கொள்ளுவதுமாக அவனோடு இணையாக கெஸ்ட் ஹவுஸ் நோக்கி நடந்து கொண்டிருந்தாள். உள்ளே வரவேற்பறையை நோக்கி நடந்தார்கள். ''இங்க நாம எவ்வளவு நேரம் வேணாலும் பேசலாம். என் ஃப்ரெண்டு எனக்கு பர்மிஷன் கொடுத்திருக்கான்'' என்றான்.

''அது யாருங்க அந்த ப்ரெண்டு'' என்றாள் அவள்.

''அதை நான் அப்புறம் சொல்றேன். அவனோட ஆபீஸ் கெஸ்ட் ஹவுஸ் இது'' என்றான் இவன். சுற்றிலும் பார்த்தார்கள். சின்ன அழகிய ஒரு கெஸ்ட் ஹவுஸ் இது. ஆடம்பரம் இல்லை. ஒரு படுக்கை அறை, ஒரு சின்ன ஹால், தேவைப்பட்டால் சமைத்துக் கொள்வதற்கு ஏற்ப ஒரு சின்ன கிச்சன். ஒரு சின்ன லிவிங் ரூம். மிகவும் அழகாக இருந்தது. மொத்தமாக ஒரு ஐந்து செண்டுக்குள் தான் அந்த இடம் இருக்கும். ஆனால் மிக அழகாக பராமரிக்கப்பட்டிருந்தது.

''அவன் இப்பதான் கம்பெனியை டெவலப் பண்ணிட்டு இருக்கான். இந்த இடம் வாடகைக்குத்தான் எடுத்திருக்கேன்னான். ஆனா கூடிய சீக்கிரம் இதையே விலைக்கு வாங்கிடறதா சொல்லியிருந்தான்.'' நேரத்தை கடத்துவதற்காகவும் தன் பதிலை வாங்குவதற்காகவும் அவன் எதையோ பேசிக் கொண்டிருக்கிறான் என்பது அனுவுக்குப் புரிந்தது.

அவன் சட்டென்று பேச்சை நிறுத்தி விட்டான்.

ஒரு கனமான அமைதி அங்கே நிலவியது. பிறகு அவன் மெல்லத் திரும்பி தன்னுடைய ஒற்றை விரலால் அவளுடைய முகத்தை நிமிர்த்தி 'ம்' என்றான்.

கண்ணால் காட்டப்பட்ட அந்த சைகைக்குப் பதிலாக அவளும் மேலும் கீழும் தலையாட்டி விட்டு 'ம்' என்றாள்.

''ஓஹோ... அப்புறம் இனி மனசு மாறமாட்டியே'' என்றான்.

''இந்தக் கேள்வியை நான் உங்களைப் பார்த்து கேட்கணும்'' என்றாள்.

''நான் மனசு மாறமாட்டேன். தெளிவான முடிவுக்குத்தான் வந்திருக்கேன்.''
''அப்ப நீங்க அதை நிரூபிக்கணும்'' என்றாள் அவள்.

''நிரூபிக்கணுமா? எப்படி'' என்றான் அவன்.

''எல்லாரும் எப்படி நிரூபிக்கிறாங்க?'' என்று கேட்டாள் அவள்.

''எல்லாரும் எப்படி நிரூபிக்கறாங்க? கல்யாணம். ஓகே. கல்யாணம் செஞ்சுப்போம்'' என்றான் அவன்.

## 15



அவள் கண்கள் படபடவென்று அடித்துக் கொண்டன. "ஃபைனலஸ்ட்டா?" என்றாள்

"அடடா இது என்ன கேள்வி? நான் வேண்ணா மேற்கத்திய பாணியில் சொல்லட்டுமா" என்றவன், ஒரு காலை மட்டும் மடக்கி மண்டியிட்டு இரண்டு கைகளையும் நீட்டி "மிஸ் அனுஸ்ரீ ஐ வான்ட் டு மேரி யூ" என்றான்.

அனு கலகலவென சிரித்தாள். அவளுடைய இந்த இனிமையான சிரிப்பைப் பார்த்தவன் மெல்ல எழுந்து அவளைத் தன் அருகில் இழுத்தான்.

"ஹலோ நீங்க கெஸ்ட் ஹவுஸ் கூட்டிட்டு வரப்பவே இந்த மாதிரி ஏதாவது நடக்கும்னு தெரியும். ஆனா அதெல்லாம் இப்ப இல்லை" என்றாள்.

"ஓகே ஓகே...! கொஞ்சமே கொஞ்சம் அட்வான்ஸ் மட்டும் தரக்கூடாதா?" என்று அவன் கெஞ்சுவதாக கேட்கவும், அவள் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள். எல்லையற்ற நிம்மதி அவளுடைய முகத்திலே தெரிந்தது. அவன் அவள் தலையைக் கோதிக் கொடுத்தான்.

"உன்னோட அன்புதான் என்னை மீட்டெடுத்திருக்கு. உன்னோட அன்புதான் எனக்கு மறுபடியும் வாழ்ற தைரியத்தை கொடுத்திருக்கு. மத்தது எல்லாமே ரெண்டாம் பட்சம்தான். அதை மட்டும் நீ நம்பு" என்றான்.

"நம்பறேன்" என்று அவள் மறுபடியும் அவன் மார்பில் தலையை அழுந்தப் புதைத்துக் கொண்டாள்.

அவன் மயங்கி நின்றான்.

"**ஹ**லோ ஹலோ" என்று தேடினான் ஆதர்ஷ். முன்தினம் இமயவரம்பனும் அனுஸ்ரீயும் சந்தித்துக் கொண்ட அதே கெஸ்ட் ஹவுஸ்.

"ஹலோ நான் இங்க தான் இருக்கிறேன்" என்று உள்ளறையில் இருந்து வெளியே வந்தாள் இதயா.

"எப்ப வந்தே" என்றான்.

"நான் வந்து ஒரு பத்து நிமிஷம் இருக்கும். உங்க வாட்ச் மேன் தான் 'உள்ளே போய் உட்காருங்க'ன்னு சொன்னாரு. வந்தேன். கெஸ்ட் ஹவுஸ் ரொம்ப நல்லாயிருக்கு. அதான் சுத்திப் பார்த்துட்டேன்."

"சுத்திப் பார்க்கறது என்ன இருக்கு? இதோ இங்க நடுவுல நின்னுட்டு ஒரு



சுத்து. உன்னையே சுத்திட்டீன்னா எல்லாத்தையுமே பார்த்துடலாம்" என்றான் அவன்.

அவள் சிரித்தாள். "ரொம்ப அழகா இருக்குதுங்க. உங்க கம்பெனிக்காக இந்த கெஸ்ட் ஹவுஸாமே?" என்றாள்.

"யார் சொன்னா?" என்றான் அவன்.

"இமயன்தான் சொன்னான்" என்றாள். "ம்ஹூம் அவருக்கு எப்படித் தெரியுமாம்?" என்றான்.

"அவன் நேத்து இங்க வந்து அனுஸ்ரீயை சந்திச்சானாமே?" என்றாள் இவள். "ஆமாமா, அது என்ன ஆச்சுன்னு தெரியுமா உனக்கு? அந்த விஷயத்தை சொன்னானா?" என்றான்.

"இல்லையே. சொல்லலையே!" என்றாள்.

"நீயும் ரொம்ப சந்தோஷப்பட்டுக்கிட்டியாக்கும். ஆகா. இமயனும் அனுஸ்ரீயும் ஒண்ணு சேர்ந்துட்டாங்கன்னு. அது ஆன்டி கிளைமாக்ஸா போச்சு தெரியுமா உனக்கு?"

இதயா திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள். "இல்லையே, இமயன் ஒண்ணும் சொல்லலையே, என்ன சொல்றீங்க" என்றாள் அதிர்ச்சியுடன்.

"உங்க இமயனுக்குத்தான் அனுஸ்ரீயை கேவலப்படுத்த தெரியுமா? அனுஸ்ரீ நல்லா மூக்கறுத்துட்டா தெரியுமா?" என்றான்.

"என்னங்க சொல்றீங்க?" என்றாள் இதயா.

"ஆமா, அனுஸ்ரீ ஒத்துக்கமாட்டேன்னு சொல்லிட்டாளாம்."

"என்னது?" என்றாள் இதயா திகைத்துப் போய்.

"ஆமா. அவனைக் கேளு, என்ன கேட்டாளாம் தெரியுமா? 'என்னைப் பார்த்துட்டுப் போய் நீங்க தற்கொலை முயற்சி பண்ணீங்கன்னா இதை விட கேவலம் எனக்கு வேறு என்ன இருக்கு? இதை விட கேவலமா ஒரு பொண்ணை அவமானப்படுத்த முடியுமா?' அப்படின்னு கேட்டாளாம்" என்றான்.

"அப்படியா?" என்றாள் இதயா அதிர்ச்சியாக.

"பின்ன இமயன் அதைப் பத்தி ஒண்ணுமே சொல்லலையே?" என்றாள்.

"எப்படி சொல்லுவான்? எந்த மூஞ்சியை வச்சுட்டு சொல்லுவான்? எப்படியோ இப்ப என்ன அவமானப்பட்டாலும் ஒண்ணும் பண்ணிக்கறது இல்லைன்னு தெளிவா இருக்கான்ல. அதனால சொல்லியிருக்க மாட்டான்." சொல்லச் சொல்லவே ஆதர்ஷுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. குபீரென்று

சிரித்தான்.

இதயா அவனை முறைத்தாள். "லொள்ளுதானே! ரெண்டு நிமிஷம் எனக்கு இதயமே நின்னு போச்சு" என்றாள்.

"இல்லை திடீர்னு அவன் இந்த மாதிரி அன்பு வயப்பட்டு - காதல் வயப்பட்டு புரொபோஸ் பண்ணும்போது - லேடீஸ் டிஸ்போஸ் பண்ணீங்கன்னா எப்படியிருக்கும்னு உங்களுக்கும் தெரியணும்ல" என்றான்.

அவள் சிரித்தாள். "கொஞ்ச நேரம் என்னை நடுங்க வச்சுட்டீங்க" என்று அவன் மார்பில் குத்து குத்தினாள். அவன் பார்வை மாறியது.

மெல்ல அவளை இழுத்து தன் அருகிலே இருத்திக் கொண்டான். "நீ கண்டிஷன் போட்டியே அப்ப எனக்கு இப்படித்தானே இருந்திருக்கும்?" என்றான்.

அவள் மெல்ல அவனை நிமிர்ந்து பார்த்து விட்டு சிரித்தாள். "அய்யோ நீங்க என்னை புரிஞ்சுட்டது இவ்வளவுதானா?" என்றாள்.

"என்ன என்ன சொல்றே?" என்றான் அவன்.

"கண்டிஷன் எல்லாம் போடலைங்க. ஏதோ இந்தப் பாயிண்ட்டை இதோட இணைச்சோம்னா கொஞ்சம் சுறுசுறுப்பா வேலை செய்வீங்க. எப்படியாவது இமய வரம்பனை தயார் படுத்திடுவீங்க அப்படிங்கறதுக்காகத்தான் சொன்னேன்."

இப்போது ஆச்சரியப்படுவது அவனது முறையாயிற்று.

"ஓஹோ இங்க கொண்டாந்து ஜாயின்ட் பண்ணிவிட்டா நம்ம மூளை வேகமா வேலை செய்யும் அப்படின்னு முடிவுபண்ணிட்டீங்களாக்கும். பரவாயில்லையே?" என்று சிரித்தான்.

"எது எப்படியானா என்னங்க? இப்ப அனுவும் இமயாவும் சேர்ந்தாங்களா இல்லையா?" என்றாள்.

"நல்லா சேர்ந்துட்டாங்கம்மா. இன்னைக்கு அய்யாவும், அம்மாவும் சுத்தக் கிளம்பியாச்சு" என்றான்.

"அப்படியா! எங்கே போயிருக்காங்க?" என்றாள்.

"எங்கயா? ஊட்டிக்குப் போற வழியில கல்லாறுன்னு ஒரு பழப் பண்ணை இருக்கு தெரியுமா? அங்க போயிருக்காங்க. பாதி வழி போயிருப்பாங்க. அப்புறம்... உன்னையும் என்னையும் கூப்பிட்டாங்க. நாம அங்க போகலாமா இங்கிருக்கலாமா?" என்று கேட்டான்.

"நம்மளும் போகலாமே" என்றாள் அவள்.

"போகலாம். அதுக்கு முன்னாடி கொஞ்சம் உங்கிட்ட தனியா பேசணும். எப்படி



இருந்தாலும் அங்கே ஆட்கள் போயிட்டு வந்துட்டு இருப்பாங்க. அங்கே பேச முடியாது. இங்க உட்கார்ந்து பேசுவோம்" என்றான்.

"என்ன பேசுவோம்?" என்றாள் அவள்.

"அநியாயம்பா. நாளைக்கு கல்யாணமாகப்போறவன்கிட்ட என்ன பேசணும்னு ஒரு பொண்ணு கேட்டா என்ன நியாயம்?" என்றான்.

அவள் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் அவனைப் பார்த்தாள். "இப்படியே பார்த்துப் பார்த்துதான் ஆளை ஒரு வழி பண்ணிட்ட. இப்ப மனசுல இருக்கறதெல்லாம் பேசலாம் அப்படின்னா என்ன பேசறதுன்னு கேட்கறே" என்றான் அவன் சோகமாக.

அவள் சிரித்தாள். "சொல்லுங்க. என்ன சொல்லணுமோ சொல்லுங்க."

"என்னத்தை சொல்றது? மனசுக்குப் பிடிச்ச பொண்ணைப் பார்த்தாலே இந்த மலர்க்கணை பாஞ்சுடுது இல்லை?" என்றான்.

"மனசுக்கு பிடிச்சதுக்கு அப்புறம் பாஞ்சதா? பாஞ்சதுக்கு அப்புறம் மனசுக்குப் பிடிச்சதா?"

"இது கொடி அசைந்ததால் காற்று வந்ததா காற்று வந்ததால் கொடி அசைந்ததாங்கற மாதிரி இருக்கு. இரண்டும் ஒண்ணுக்கொண்ணு இன்டர் லிங்க்ன்னு வச்சுக்கயேன்."

"ஆனால் எனக்கு தோணுதுங்க. மனசுக்குப் பிடிச்சுதுனாலத்தான் மலர்க்கணை பாஞ்சதுன்னு."

"இப்ப அனுஸ்ரீயை பார்த்தவுடனே எங்க அண்ணனுக்கு ஷாக் ஆயிடுச்சு. இருந்தாலும், அவன் மனசு பிடிச்சுப் போயிதானே அவன் மனசை மாத்திட்டான்."

"ஆனா ஒரு விஷயம் நான் சொல்றேன்" என்றான் ஆதர்ஷ்.

"ஒரு விஷயம்தான் சொல்லப் போறீங்களா?" என்றாள் அவள் கிண்டலாக.

"நிறைய இருக்கு நிறைய சொல்லணும். நேரம் காலம் பார்க்காம சொல்லணும். காலை, மாலை, நண்பகல், பிற்பகல்னு நிறைய விஷயங்கள் சொல்லிட்டே இருக்கணும் உன்னோடவே இருக்கணும்."

"ஹலோ ஹலோ பாயிண்டுக்கு வாங்க" என்றாள்.

"இல்லை சட்டுனு தன்னுடைய உயிரை மாச்சுக்கறதா இமயவரம்பன் முடிவு எடுத்தது எனக்கு ஒரு ஷாக் தான். ஒரு இருபத்தேழு வயசுப் பையன் சட்டுன்னு இப்படி முடிவெடுத்தா எந்த ஊரு நியாயம்?" என்றான்.

"இல்லைங்க. அதுக்கு ஒரு காரணம் இருக்கு. அவன் பொதுவாவே அழகு

அழகுன்னு அழகை ரொம்ப நேசிக்கிற மாதிரி பழகிட்டான். ஆனா எது அழகு அப்படிங்கறது அவனுக்குப் புரியலை.'' அப்பொழுது ஆதர்ஷ் ஒரு பெருமூச்சு விட்டு விட்டுச் சொன்னான். ''நிறையப் பேரு எதை அழகுன்னு சொல்றாங்களோ அதைத் தான் நாம் அழகுன்னு நினைச்சுக்கறோம்.

ஆனா கசப்புன்னா பிடிக்காது. இனிப்புன்னா பிடிக்கும்னு தானே எல்லாரும் சொல்றோம். கசப்பை விரும்பிச் சாப்பிட்டா அது கூட ஒரு சுவையாயிடும் தெரியுமா?'' என்றான்.

''ஆமாங்க... அது மாதிரி வாழ்க்கையில எது இனிமை எது அழகுங்கறதெல்லாம் இதுவரைக்கும் வைக்கப்பட்ட வரையறைதானே.''

''அந்த வரையறைய்ய மாத்தி கொஞ்சம் நீ நினைச்சுப் பாரு வாழ்க்கையே சுவையா இருக்கும்'' என்றான் ஆதர்ஷ்.

''ஃபார் எக்ஸாம்பிள்?'' என்றாள் அவள்.

''உதராணத்துக்கு கஷ்டத்தை கஷ்டம்னு நினைக்காம ஏத்துக்கிட்டுப் பாரு. அந்தக் கஷ்டத்தோட சுமையே குறைஞ்சுடும்'' என்றான்.

''எனக்கு ரொம்ப டவுட்டா இருக்குங்க'' என்றாள் இதயா.

''என்ன டவுட்டு?''

''இல்லை தத்துவ கிளாஸ் மாதிரி தெரியுது. இந்த மாதிரி கிளாஸ் எடுக்கறதுக்கா என்னை கூட்டிட்டு வந்தீங்க.?''

அவன் சட்டென்று அவள் காதைப் பிடித்து திருகினான். ''இந்த கிளாஸ் வேண்டாமா? அப்ப வேற கிளாஸ் எடுக்கட்டுமா?'' என்றான்.

அவள் பார்வையை கீழே தாழ்த்திக் கொள்ள - அவன் வேறு பாடம் நடத்தத் தொடங்கினான்.

''இல்லை இல்லை. வேண்டாம் வேண்டாம். நீங்க அதையே பேசுங்க'' என்றாள் அவள்.

''ஆமா ஆமா. அதை முடிச்சிடுவோம். என்னத்துனால அவனுக்கு அப்படி ஒரு எண்ணம் வந்துச்சுன்னு நானும் யோசிச்சேன் இதயா. ஒரே பையன். செல்லமா வளர்ந்திருக்கான். கேட்டதெல்லாம் கிடைச்சிருக்கு. அதுவும் இல்லாம இதுதான் அழகு - இதுதான் நல்லதுன்னு. அவனா சில வரையறைகள் வச்சிட்டிருந்திருக்கான். அதனால இதை ஏத்துக்க முடியலை. ஆனா இப்ப யோசிச்சுப் பார்த்து எந்தக் காரணத்தைக் கொண்டும் அனுகிட்ட இருந்து தன்னோட மனசை பிரிச்சு எடுக்க முடியாதுங்கறதை புரிஞ்சுட்டான்.''

''ஆமாங்க'' என்றாள் இதயா.



''நம்ம கதையும் அப்படித்தான். நானும் ஒருத்தர் கிட்ட மனசை கொடுத்துட்டேனே. அங்க இருந்து திரும்ப வாங்கவே முடியலை. நானும் என்னென்னமோ சொல்லிப் பார்த்தேன். நான் அப்பா அம்மா இல்லாத அநாதை'' எனவும் - அவள் அவன் வாயைப் பொத்தினாள்.

''உலகில் யாருமே அநாதை இல்லைங்க. எல்லா மனிதரும் ஒருத்தருக்கொருத்தர் சொந்தக்காரவங்கதான். உங்களுக்கு அருமையான அம்மா அப்பா எழில்வாணன் அய்யாவும் பத்மஜா அம்மாவும். ஒருவேளை இப்படி ஒரு அம்மா அப்பா கிடைக்கணுங்கறதுக்காகத்தான் உங்களைப் பெத்தவங்க உங்களை விட்டுட்டு போயிட்டாங்க போலிருக்கு. அப்படி எடுத்துக்கங்க'' என்றாள்.

''தாங்க்ஸ் இதயா'' என்றான் அவன் தலையாட்டிக் கொண்டு. ''ஆனால் ஒரு விஷயத்தில் நான் ரொம்ப அதிர்ஷ்டசாலி'' என்றான்.

அவள் ஆவலாக அவனைப் பார்த்தாள்.

''இப்படி ஒரு அழகான பொண்ணு... அறிவார்ந்த பொண்ணு எனக்கு கிடைச்சிருக்கு இல்லே. இதைவிட அதிர்ஷ்டம் வேற என்ன வேணும்'' என்றான்.

''அதான் மலர்க்கணை பாய்ஞ்சிடுச்சே'' என்றாள் அவள்.

''ஆமாம் மலர்க்கணை சரியான நேரத்துல பாஞ்சு சரியான ஆளை நோக்கி என்னை இழுத்துட்டுப் போயிடுச்சு.''

அவள் ''ரொம்ப தாங்க்ஸ்ங்க'' என்றாள் நெகிழ்ந்து போய்.

நமக்கு நடுவுல எதுக்கு தாங்க்ஸ்? ''நிறைய குடுக்கல் வாங்கல் இருக்கப் போகுது. எத்தனைக்கு தாங்க்ஸ் சொல்லுவே'' என்று அவளை நோக்கி குனிய அவள் விலகிக் கொண்டு சிரித்தாள்.

''ஹலோ! இதெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம் தான்'' என்று தலையாட்டினாள்.

அவன் சிரித்துக் கொண்டே ''அப்படித்தான் இருக்கட்டுமே. இப்பக் கொஞ்சம் அட்வான்ஸ் மட்டும்'' என்று கேட்டு கலகலவென்று சிரிக்கிற அதே நேரத்தில் கல்லாறுக்கு பக்கத்திலே இருக்கிற அந்தப் பழப்பண்ணையிலே நடந்து கொண்டிருக்கிற அனுவும் இமயவரம்பனும் உலகத்தை மறந்தவர்களாக பேசிக் கொண்டு நடந்தார்கள்.

''அனு! ஒரு மாசத்துக்குள்ள என் வாழ்க்கையில எத்தனை விஷயங்கள் நடந்திடுச்சு'' என்றான் இமயவரம்பன்.

''ஏங்க நான் ஒண்ணு கேட்பேன்'' என்றாள்.

''கேளு என்ன வேணும். இந்தப் பழம் வேணுமா? அந்தப் பழம் வேணுமா?'' என்றான். பழத்தோட்டத்தில் ஆங்காங்கே இருந்த பழ மரங்களைக் காட்டி.

''ஆமாம் ஞானப்பழம் வேணும்னு கேட்கறதுக்குத்தான் இங்க வந்தோமாக்கும்'' என்றாள்.

அவன் சிரித்தான்.

''உங்க அம்மா அப்பா ஒத்துக்குவாங்க தானே?'' என்றாள் அவள்.

''தாலி கட்டி முடிச்சதுக்கப்புறம் இந்தக் கேள்வி கேட்டிருக்கலாம்ல'' என்றான்.

''இல்லைங்க. எனக்கு கொஞ்சம் பயமாதான் இருக்கு'' என்றாள்.

''எங்க அம்மா அப்பா உன்னைப் பார்த்தாச்சு'' என்றான் அவன்.

''பார்த்துட்டாங்களா?'' என்றாள்.

''ஆமாம், நாலு நாளைக்கு முன்னாடி நான் கோவிலுக்கு வந்தேன்ல. அப்பவே அம்மா அப்பா வந்து தூரத்தில் இருந்து பார்த்துட்டாங்க. இதயாவோட அம்மா அப்பாவும் வந்துபார்த்தாங்க. நாலு பெரியவங்களுமே சொல்லிட்டாங்க. 'நீங்க முடிவு பண்ணினா சரிப்பா. உங்க வாழ்க்கை சந்தோஷமா இருக்கும்னு நீங்க முடிவு பண்ணினா எங்களுக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லை'ன்னு.

அது சரி... ''உங்க அம்மா அப்பா?'' என்றான் இவன்.

''எங்க அம்மா அப்பாவுக்கும் நான் எல்லா விஷயத்தையும் சொல்லிட்டேன்.''

''எல்லா விஷயத்தையுமா?''

''இல்லை இல்லை. சூசைட் அட்டம்ட் பத்தியெல்லாம் நான் சொல்லலை. இப்படி லைக் பண்றீங்க அப்படின்னு சொன்னேன். அவங்களுக்கும் ரொம்ப சந்தோஷம்தான். அது மட்டும் இல்லை. ஆதர்ஷ் வந்து எங்க அம்மா அப்பாகிட்ட பேசினாங்க'' என்றாள் அவள்.

''அப்படியா? ஆதர்ஷ் இந்த வேலையெல்லாம் செஞ்சானா?'' என்றான் அவன்.

''ஆமாம்'' என்றாள் அவள்.

''இப்ப அவங்க ரெண்டு பேரும் எங்க தெரியுமா?'' என்று அவன் குறும்பாக சிரித்தான். ''எங்கே?'' என்றாள் அவள் ஆர்வமாக.

''நம்ம ரெண்டு பேர்த்தையும் அனுப்பிச்சுட்டு அவங்க ரெண்டு பேரும் அங்க கெஸ்ட் ஹவுஸ்ல மீட்டிங் நடத்திட்டு இருக்காங்க.''

அனு சிரித்தாள். ''கெஸ்ட் ஹவுஸ் ரொம்ப ராசியான கெஸ்ட் ஹவுஸ் போல இருக்கு'' என்றாள்.

''ஆமா. அவன் அங்க, பாடம் படிச்சிட்டு இருக்கான். நான் இங்க பாடம் படிச்சிட்டு இருக்கேன்'' என்றான்.

''இங்க என்ன பாடம் படிக்கறீங்க - இத்தனை பேர சுத்தி வச்சுட்டு?''

''அதானே... நம்ம தனியா இருக்கும் போது நடத்தற பாடத்துக்கெல்லாம் இங்க ஒத்திகை பார்க்க முடியுமா? முடியாது. ஆனாலும் நம்ம ரெண்டு பேரும் இன்னும் நல்லா பேசி நம்மளை ஒருத்தரை ஒருத்தர் நல்லா புரிஞ்சுப்போம்'' என்றான் அவன்.



பேசிக் கொண்டே இரண்டு பேரும் நடக்கையில் எதிரிலே ஒரு சின்னக் குழந்தை ஓடி வந்தது. ஓடி வந்து அவள் காலைக் கட்டிக் கொண்டது. அனுஸ்ரீ ஆசையுடன் அந்தக் குழந்தையை எடுத்துக் கொண்டாள்.

''ஆன்டி எங்க அப்பா பழம் தர மாட்டேங்கறாங்க'' என்றது அந்தக் குழந்தை. அதற்குள் அந்தக் குழந்தையின் பெற்றோர்கள் வந்து அந்தக் குழந்தையை வாங்கிக் கொண்டார்கள்.

அந்தக் குழந்தையை அவர்கள் மறுபடியும் எடுத்துக் கொண்டு போனதற்குப் பிறகு அனுஸ்ரீ திரும்பிப் பார்த்தாள். இமயவரம்பன் அவளை ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

''அனு நீ இந்தக் குழந்தையை எடுத்து வச்சுக்கிட்டப்ப எனக்கு நமக்குன்னு ஒரு குழந்தை பிறந்தா எப்படி இருக்கும்னு ஒரு கற்பனை வந்துருச்சுல்ல'' என்றான்.

அனுஸ்ரீ முகம் சிவக்க நின்றாள்.

''எப்படியோ ஒரு அன்புங்கற மலர்க்கணையை வீசி என்னை வசப்படுத்திட்ட தேவதையே. விலகவே முடியாத ஒரு அன்புப் பிணைப்புல நானும் சிக்கிட்டேன்'' என்று அவன் பேச ஆரம்பித்தான்.

''இப்படியேதான் பேசப்போறீங்களா? என்றாள் அவள்.

''ஆமா. இப்படிப் பேசறதுக்குத்தானே இங்க கூட்டிட்டு வந்திருக்கேன், ஏன்னா இப்போதைக்கு பேச்சுமட்டும்தானே, பேசறதையாவது கேளு'' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. ஆனால் அவளுக்கும் சேர்த்து அவன் பேசினான்.

சற்றுக் கழித்து அவள் பேசினாள். சற்று நேரம் கழித்து பேச்சற்ற மவுனத்தோடு அவர்கள் ஒரு ஓரத்தில் அமைதியாக அமர்ந்து கொண்டார்கள்.

ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட அன்பு அன்று அவர்கள் இருவருக்கும் இடையிலே ஒரு கணை போல பாய்ந்து கொண்டிருந்தது.

ஆம்! **மலர்க்கணை** போல இதமாகப் பாய்ந்து கொண்டிருந்தது.